விலை : 20.00 website : www.valampurii.lk Registered as a Newspaper in Srilanka
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 ஆவணி 30 வியாழக்கிழமை (15.09.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 271

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005



இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

## சர்வதேச நீதிபதிகளை உள்ளடக்கிய
# இராணுவம் தலையிடாத நம்பகமான பொறிமுறை
## விசாரணைக்கு அவசியம் என ஐ.நா பணிக்குழு அறிக்கை

(கொழும்பு)

இறுதிப்போரில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்களை விசாரிக்க உருவாக்கப்படும் பொறுப்புக்கூறல் பொறிமுறை சர்வதேச நீதிபதிகள், வழக்கறிஞர்கள், சட்டத்தரணிகள் மற்றும் விசாரணையாளர்களைக் கொண்டதாக இருக்க வேண்டும் என்றும் இந்த விசாரணைச் செயற்பாட்டில் இராணுவத்தினர் எக்காரணம் கொண்டும் தலையிடக் கூடாது என்றும் பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பிலான ஐக்கிய நாடுகளின் பணிக்குழு இலங்கை அரசாங்கத்துக்கு பரிந்துரை செய்திருக்கிறது. (24-ம் பக்.)

க.பொ.த (சா/த)
பரீட்சை
மாதிரி வினாத்தாள்
கணிதம் I, II
வரலாறு II



உள்ளே...

## சம்பூரை கைவிட இந்தியா அனுமதி


(கொழும்பு)

இந்திய அரசாங்கத்தின் அனுமதியுடனேயே சம்பூர் அனல் மின் நிலையத்தை நிர்மாணிக்கும் பணியை கைவிட்டோம்.

இதற்குப் பின்னர் அனல் மின் நிலையம் அமைப்பதில்லையென்று அரசாங்கம் முடிவெடுத்துள்ளது

24ஆம் பக்கம் பார்க்க....

# புதிய அரசியலமைப்பு திருப்திகரமாக அமையும்
## எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் நம்பிக்கை




(திருகோணமலை)

நாட்டில் புதிதாக அமைக்கப்படவுள்ள அரசியலமைப்பு சீர்திருத்தம் திருப்திகரமானதாக அமையும் என தான் நம்புவதாக தெரிவித்த பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்

24ஆம் பக்கம் பார்க்க....

## விமலிடம் நேற்று விசாரணை



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் நெருங்கிய சகாவான நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச நேற்று பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவினரால் சுமார் ஏழு மணித்தியாலங்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

கடந்த ஆட்சியின் போது வீடமைப்பு மற்றும் அரச பொறியியல்துறை அமைச்சராக கடமையாற்றியபோது இடம்பெற்ற நிதி மோசடிகள் தொடர்பிலேயே வீரவன்ச

24ஆம் பக்கம் பார்க்க....

## இந்தியாவுக்கு

## விடுதலைப் புலிகளை கட்டுப்படுத்த

## ஜனாதிபதிக்கு ஐ.தே.கவிலேயே

## விசாரணைக்கு அவசியம் என ஐ.நா பணிக்குழு அறிக்கை

(கொழும்பு)

இறுதிப்போரில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்களை விசாரிக்க உருவாக்கப்படும் பொறுப்புக்கூறல் பொறிமுறை சர்வதேச நீதிபதிகள், வழக்கறிஞர்கள், சட்டத்தரணிகள் மற்றும் விசாரணையாளர்களைக் கொண்டதாக இருக்க வேண்டும் என்றும் இந்த விசாரணைச் செயற்பாட்டில் இராணுவத்தினர் எக்காரணம் கொண்டும் தலையிடக் கூடாது என்றும் பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பிலான ஐக்கிய நாடுகளின் பணிக்குழு இலங்கை அரசாங்கத்துக்கு பரிந்துரை செய்திருக்கிறது. (24-ம் பக்.)

## இந்தியா அனுமதி

(கொழும்பு)

இந்திய அரசாங்கத்தின் அனுமதியுடனேயே சம்பூர் அனல் மின் நிலையத்தை நிர்மாணிக்கும் பணியை கைவிட்டோம்.

இதற்குப் பின்னர் அனல் மின் நிலையம் அமைப்பதில்லையென்று அரசாங்கம் முடிவெடுத்துள்ளது

24ஆம் பக்கம் பார்க்க....

# புதிய அரசியலமைப்பு திருப்திகரமாக அமையும்

### எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் நம்பிக்கை

(திருகோணமலை)

நாட்டில் புதிதாக அமைக்கப்படவுள்ள அரசியலமைப்பு சீர்திருத்தம் திருப்திகரமானதாக அமையும் என தான் நம்புவதாக தெரிவித்த பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்

24ஆம் பக்கம் பார்க்க....




## விமலிடம் நேற்று விசாரணை

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் நெருங்கிய சகாவான நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச நேற்று பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவினரால் சுமார் ஏழு மணித்தியாலங்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

கடந்த ஆட்சியின் போது வீடமைப்பு மற்றும் அரச பொறியியல்துறை அமைச்சராக கடமையாற்றியபோது இடம்பெற்ற நிதி மோசடிகள் தொடர்பிலேயே வீரவன்ச

24ஆம் பக்கம் பார்க்க....



## இந்தியாவுக்கு அறிவிக்கவில்லை

(கொழும்பு)

சம்பூர் அனல் மின் நிலையத் திட்டத்தை கைவிடுவது தொடர்பாக இலங்கை அரசாங்கம் இந்தியாவுக்கு அறிவிக்கவில்லை என்று கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இந்தியாவுடன் இணைந்து கூட்டு முயற்சியாக அமைக்கத் திட்டமிட்டிருந்த சம்பூர் அனல் மின் திட்டத்தைக

24ஆம் பக்கம் பார்க்க....

## விடுதலைப் புலிகளை கட்டுப்படுத்த ரணில் - மைத்திரியினால் முடியாது

### ஜி.எல்.பீரிஸ் குற்றச்சாட்டு



(கொழும்பு)

வெளிநாடுகளில் மீண்டும் தமிழீழ விடுதலை புலிகள் இயக்கம் மிகவும் வலுவாக செயற்பட ஆரம்பித்துள்ளது. எனினும் இந்த நடவடிக்கைகளை தடுக்க ரணில் - மைத்திரி தலைமையிலான நல்லாட்சி அர

24ஆம் பக்கம் பார்க்க....

## ஜனாதிபதிக்கு ஐ.தே.கவிலேயே கூடுதலான ஆதரவு உள்ளது!

### நாமல் எம்.பி சுட்டிக்காட்டு

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு ஐக்கிய தேசியக் கட்சியிலேயே கூடுதலான ஆதரவு காணப்படுகின்றது என பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் நாமல் மேலும் கூறுகையில்,

குருநாகலில் நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 65-ம் ஆண்டு நிறைவு நிகழ்வினை விடவும், ஐக்கிய தேசியக் கட்சியின் 70-ம் ஆண்டு நிறைவு நிகழ்வில் கூடுதலான மக்கள் ஆதரவு ஜனாதி

23ஆம் பக்கம் பார்க்க....

## வடக்கு அரச நியமனங்களுக்காக விண்ணப்பிக்கும் வயது எல்லை 40!

### வடக்கு மாகாணசபை அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் சகல அரச வேலைகளுக்கும் நாற்பது வயதுக்குட்பட்டவர்கள் விண்ணப்பிக்க முடியும் வயதெல்லை நீடிக்கப்பட்டுள்ளது என தெரிவித்துள்ள வடக்கு மாகாண சபையின் பேரவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம், இதற்கான அங்கீகாரத்தை வடக்கு மாகாண ஆளுநர் கடந்த வாரம் முதல் வழங்கியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

அரசாங்க சேவைகளில் உள்ள பதவிகளின் பொருட்டு விண்ணப்பங்களை மேற்கொள்ளும் பொருட்டு ஆகக்குறைந்த வயதெல்லையாக இருபத்தியொரு வயதும் ஆகக்கூடிய

24ஆம் பக்கம் பார்க்க....

## ஆட்சி மாற்றம் நிகழ்ந்திராவிடின் நாட்டின் நிலையை யோசியுங்கள்!

### தன்னை விமர்சிப்பவர்களிடம் ஜனாதிபதி கேள்வி

(கொழும்பு)

ஜனவரி 08 ஆம் திகதி மாற்றம் நிகழ்ந்திருக்கா விட்டால் இன்று நாட்டின் நிலைமை எத்தகையதாக இருந்திருக்கும் என அரசாங்கத்தையும் தம்மையும் விமர்சிக்கின்ற எல்லோரிடமும் தாம் கேட்க விரும்புவதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

இந்த அனுபவங்களின்றி சிலர் நாடு எதிர்நோக்கியுள்ள பெரும் பொருளாதார நெருக்கடி மற்றும் சர்வதேச ரீதியாக எழுந்துள்ள பிரச்

24ஆம் பக்கம் பார்க்க....



நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# வாள்வெட்டுச் சம்பவம்; இருவருக்கு மறியல்

(கரணவாய்)

துன்னாலைப்பகுதியில் ஏற்பட்ட கோஷ்டி மோதல் ஒன்றில் வாளால் வெட்டியதாக தெரிவித்து கைது செய்யப்பட்ட இருவரை எதிர்வரும் 23ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிமன்ற பதில் நீதிபதி பா.சுப்பிரமணியம் உத்தரவிட்டுள்ளார்.

கடந்தவாரம் துன்னாலை தெற்கு வேம்படி பகுதியில் இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வந்த நெல்லியடிப் பொலிஸார் சந்தேக நபர் இருவரை செவ்வாய்க்கிழமை மாலை கைது செய்தனர்.

அவர்களை நேற்று புதன்கிழமை பருத்தித்துறை நீதி மன்றில் முற்படுத்திய போதே விளக்க மறியலில் வைக்குமாறு பதில் நீதிபதி பா.சுப்பிரமணியம் உத்தரவிட்டார். (செ-60)

# சிறைக்குள் இருந்து பேஸ்புக்?




(கொழும்பு)

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஸ்மன் கொலை குற்றவாளியாக இனங்காணப்பட்டு மரணதண்டனை விதிக்கப்பட்டு சிறைவாசம் அனுபவித்து வரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவின் பேஸ்புக் இன்னமும் செயற்பாட்டில் உள்ளது.

இதனால் அவர் சிறையில் இருந்து கொண்டே, பேஸ்புக் பயன்படுத்துகிறாரா? என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

குறித்த பேஸ்புக்கில் பாரத லக்ஸ்மன் கொலை சம்பவத்தில் துமிந்த சில்வா காயமடைந்துள்ள புகைப்படம், அவர் சிங்கப்பூர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்ற போது பிடிக்கப்பட்ட புகைப்படம் என்பன நேற்று முன்தினம் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. (செ)

**வீடு வாடகைக்கு**

கொழும்பில் இருந்தும் வெளியூர்களிலிருந்தும் வருபவர்களுக்கு சகல தளபாட வசதிகளுடன் கூடிய தனி வீடு யாழ். நகர் கஸ்தூரியார் வீதியில் வாடகைக்கு நாள். கிழமை அடிப்படையில் கொடுக்கப்படும்.

**077 703 5457**

**அறிவித்தல்**

**பதவி வெற்றிடங்களுக்கான விண்ணப்பம் கோருதல்**
**மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு**

**வடக்கு மாகாணம்**

வடக்கு மாகாணப் பாடசாலைகளில் மனைப் பொருளியல் பாடத்திற்கு நிலவும் இலங்கை ஆசிரியர் சேவையின் 3-ம் வகுப்பு - 1 (அ) தரப் பதவி வெற்றிடங்களுக்கு பட்டதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை (தமிழ் மொழி மூலம்) - 2016 (III)


தமிழ் மொழி மூலம் மேற்படி பதவிக்குரிய போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் கோரப்பட்டுள்ளது. இப் பதவி வெற்றிடங்கள் திறந்த போட்டிப் பரீட்சை மூலம் நிரப்பப்படும். இவ் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2016.09.30 ஆகும்

விண்ணப்பதாரிகள் www.np.gov.lk → Recruitment and Exam → Advertisement என்ற வடக்கு மாகாண இணையத்தளத்தில் மேலே குறிப்பிடப்பட்ட பதவிக்கான ஆட்சேர்ப்புத் தகவல்களையும், தகைமைகளையும் பார்வையிட்டு தகைமையுடையவர்கள் அம் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைவாக விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**ரூ. வரதலிங்கம் செயலாளர்,**
**மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,**
**வடக்கு மாகாணம்.**

(ச-6770)

# வாகன விபத்து; இருவர் காயம்



(கரணவாய்)

மோட்டார் சைக்கிளும் துவிச்சக்கர வண்டி ஒன்றும் மோதி விபத்துக்குள்ளானதில் இருவர் படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மாலுச் சந்திக்கும் நெல்லியடிக்கும் இடைப்பட்ட பகுதிக்கும் நேற்று புதன்கிழமை பிற்பகல் இவ் விபத்து இடம்பெற்றது.

இதில் படுகாயமடைந்த சிறுவன் ஒருவனும். இளைஞர் ஒருவரும் பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் நெல்லியடிப் போக்குவரத்துப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (செ-60)

# பஸ்ஸின் பின் சில்லுக்குள் அகப்பட்ட பெண் மரணம்

(கரணவாய்)

பருத்தித்துறை நகர்ப்பகுதியில் வயோதிப மாது ஒருவர் பஸ்ஸின் பின் சல்லுக்குள் அகப்பட்டு மரணமடைந்துள்ளார்.

நேற்று புதனகிழமை நண்பகல் பருத்தித்துறை நகரில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் ஐயனார் கலட்டி, பருத்தித்துறையைச் சேர்ந்த இ.கிருஸ்ணலீலா (வயது 68) என்ற வயோதிப மாதுவே மரணமடைந்தவராவார்.

நேற்றுமுற்பகல் 11.30 மணியளவில் இடம்பெற்ற சம்பவத்தில் படுகாயங்களுக்குள்ளான வயோதிப மாது பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு ஒரு மணத்தியாலத்தில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

நிறுத்தப்பட்டிருந்த தனியார் பஸ்வண்டியை ஓட்டுநர் இயக்கிய வேளை விபத்து இடம்பெற்றதாக கூறப்படுகிறது.

இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டுள்ள பருத்தித்துறைப் பொலிஸார் பஸ்ஸின்சாரதியை கைது செய்துள்ளனர். (செ-60)

# 5 அடி நீளமான திமிங்கிலம் மீட்பு

(ஏறாவூர்)

மட்டக்களப்பு புதிய காத்தான் குடி கடற்கரையில் நேற்று புதன்கிழமை காலையில் இறந்த நிலையில் கரையொதுங்கிக் கிடந்த சுமார் 5 அடி நீளமான திமிங்கிலம் ஒன்று மீனவர்களால் கண்டுபிடிக்கப்பட்டது.

இந்தத் திமிங்கலம் ஆழ் கடலில் ஏற்பட்ட விபத்துக்களில் சிக்கி இறந்து விட்ட நிலையில் கரையொதுங்கியிருக்கலாம் என மீனவர்கள் சந்தேகம் தெரிவிக்கின்றனர்.



சிதைவடைந்த நிலையில் காணப்பட்ட இந்தத் திமிங்கிலத்தை காத்தான்குடி நகரசபையினர் அவ் விடத்திலிருந்து அப்புறப்படுத்திக் கொண்டு போயுள்ளனர்.

கப்பல்களில், விசைப் படகுகளில், அல்லது கற் பாறைகளில் அடிபட்டு பெரிய மீன்கள் அவ்வப்போது இறந்து கரையொதுங்குவதுண்டு என மீனவர்கள் தெரிவித்தனர். (செ)

**கண்ணீர் அஞ்சலி**



தோற்றம் :- 15.03.1944
மறைவு :- 13.09.2016

**திருமதி புஷ்பநாதன் தவமணிதேவி**

ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தில் கிராம அலுவலராக கடமையாற்றும் **திரு. வே.அருணோதயம்** அவர்களின் அன்பு மாமியார் **திருமதி புஷ்பநாதன் தவமணிதேவி** அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறோம்.

கிராம அலுவலர்கள்
பிரதேச செயலகம், ஒட்டுசுட்டான்

(C-5773)

# நிதியமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கு அழைப்பை ஏற்படுத்திய ராஜித!

(கொழும்பு)


அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டின் போது ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளித்துகொண்டிருந்த அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித சேனாரட்ண அந்த சந்தர்ப்பத்திலேயே நிதி அமைச்சருக்கும் நிதி அமைச்சின் செயலாளருக்கும் தொலைபேசியில்தொடர்புகொள்ளவேண்டிய நிலை ஏற்பட்டது.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் ஊடகவியலாளர்கள் வற் வரி அதிகரிப்பு எப்போது அமுலுக்கு வரும் என கேள்வியை சரமாரியாக எழுப்பினர்.

அதற்கு பதிலளித்த அமைச்சர் சட்டமூலம் வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் அமுலுக்கு வரும் எனக் கூறினார். எனினும் சட்டமூலம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பின்னரே அமுலுக்கு வர முடியும் என ஊடகவியலாளர்கள் வாதிட்டனர். இதனையடுத்து அமைச்சர் ராஜித சேனாரட்ன உடனடியாக நிதி அமைச்சின் செயலாளருக்கு தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தினார். எனினும் அந்த தொலைபேசி நிறுத்தப்பட்டிருந்தது. அதன் பின்னர் அமைச்சர் ராஜித நிதி அமைச்சருக்கு தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தினார். நிதி அமைச்சர் தொலைபேசிக்கு பதிலளிக்கவில்லை.

இதனையடுத்து ஊடகவியலாளர்களை சற்றுப் பொறுமை காக்குமாறு கூறிய ராஜித சேனாரட்ன ஏனைய கேள்விகளை எழுப்புமாறு கூறினார். ஊடகவியலாளர்களின்ஏனைய கேள்விகளுக்கு அமைச்சர் பதிலளித்துக் கொண்டிருந்த போது அருகிலிருந்து அமைச்சர் கயந்த கருணாதிலக்கவின் தொலைபேசிக்கு நிதி அமைச்சர் தொடர்பு கொண்டிருந்தார். நிதியமைச்சருடன் தொலைபேசியில் உரையாடிய அமைச்சர் கயந்த கருணாதிலக்க அதன் பின்னர் ஊடகவியலாளர்களுக்கு கருத்து வெளியிட்டார்.

அதாவது வற் வரி அதிகரிப்பு சட்டமூலம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பின்னரே அமுலுக்கு வரும் என்று கூறி அமைச்சர் கயந்த சர்ச்சையை முடிவுக்கு கொண்டு வந்தார். (செ-11)



கேலிச்சித்திரம்

# ஆசிரியர் பயிற்சியைப் பூர்த்தி செய்த 3225பேருக்கு ஒக்டோபரில் நியமனம்

கல்வியியல் கல்லூரிகளில் ஆசிரியர் பயிற்சியைப் பூர்த்தி செய்த 3225 பேருக்கு அடுத்த மாதம் 4 ஆம் திகதி நியமனக் கடிதங்கள் வழங்கப்பட இருப்பதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பான வைவம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் அலரிமாளிகையில் முற்பகல் 10 மணிக்கு இடம்பெறும்.

இவர்களது நியமனம் அந்த மாதம் முதல் நடைமுறைக்கு வருமென்றும் கல்வி அமைச்சின் கல்வி சேவைகள் உள்ளக மேலதிக செயலாளர் ஐ.எம்.கே.பி.இங்க சிங்ஹ தெரிவித்துள்ளார்.

ஆசிரியர் வெற்றிடங்கள் நிலவும் தேசிய மற்றும் மாகாண சபை பாடசாலைகளில் இவர்கள் சேவையில் அமர்த்தப் படுவார்கள். பின்தங்கிய பாடசாலைகள் தொடர்பில் கூடிய கவனம் செலுத்தப்படும். 1046 தமிழ் மொழி ஆசிரியர்களும் இதில் இடம்பெற்றுள்ளனர்.

இதேவேளை, 2017 ஆம் ஆண்டுக்கு கல்வியியல் கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் தற்போது ஏற்றுக் கொள்ளப் படுகின்றன. இம்மாதம் 30 ஆம் திகதி வரையில் இதற் கான விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க முடியும். இம்முறை கல்வியியல் கல்லூரிகளுக்கு சேர்த்துக் கொள்ளப்படும் மாணவர்களின் எண்ணிக்கை ஆயிரத்தினால் அதிகரிக்கப்பட்டுள்ளது. (இ-7-10)

# உள்ளூராட்சி மன்றத்தேர்தல் சு.கவுக்கு சவால் கிடையாது

## பொதுச் செயலாளர் துமிந்த கூறுகிறார்



உள்ளூராட்சி மன்றத் தேர்தல், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு சவாலாக அமையாது என கட்சியின் பொதுச் செயலாளர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

சிங்களப் பத்திரிகையொன்றுக்கு அளித்த நேர்காணலில் அவர் இதனைத் தெரிவித்துள். ளார்.

நாடு முழுவதிலும் காணப்படும் அனைத்து உள்ளூராட்சி மன்றங்களிலும் சகோதர கட்சிகளுடன் இணைந்து தேர்தலில் போட்டியிடப்படும்.

கை சின்னத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிட்டு கட்சியின் பலம் நிரூபிக்கப்படும். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, தேர்தல்களுக்கு அஞ்சிய கட்சி கிடையாது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7-10)

# எதிர்க்கட்சியுடன் 7 புதிய கட்சிகள் இணையும் - டலஸ்

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை தலைமையாக கொண்டு இயங்கி வரும் கூட்டு எதிர்க்கட்சியுடன் இன்னும் 7 புதிய கட்சிகள் இணைந்து கொள்ள உள்ளதாக கூட்டு எதிர்க் கட்சியின் அங்கத்தவரும் பாராளுமன்ற உறுப்பினருமான டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

கூட்டு எதிர்க்கட்சியுடன் புதிதாக இன்னும் 7 கிளைக் கட்சிகள் சேர்த்துக்கொள்ளப்பட உள்ளன. இதன்படி கூட்டு எதிர்க் கட்சியில் தற்போது இணைந்து செயற்படும் 9 பிரதான கட்சிகளோடு இவ் 7 கட்சிகளையும் சேர்த்துக் கொண்டுள்ளமை கூட்டு எதிர்க்கட்சியை மேலும் பலப்படுத்தும் விதமாக அமைந்திருக்கின்ற அதேவேளை மைத்திரி, ரணில் தலைமையிலான தேசிய அரசாங்கம் மக்களின் மீது அர்த்தமற்ற விதத்தில் சுமத்தியிருக்கின்ற வற்வரி உள்ளிட்ட பல்வேறு துன்பங்களுக்கு எதிராக மேலும் வலுவான விதத்தில் போராட வழிவகுக்கும் என அவர் நம்பிக்கை வெளியிட்டார். (இ-7-10)

# சப்ரகமுவ பல்கலைக்கழக மாணவர்கள் ஆர்ப்பாட்டம்

சப்ரகமுவ பல்கலைக் கழக மாணவர்கள் உபவேந்தரின் அலுவலகத்தை முற்றுகையிட்டு நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதலாம் வருட மாணவர்களை பகிடிவதைக்கு உள்ளாக்கியமை தொடர்பில் வகுப்புத் தடைக்கு உள்ளான மாணவர்களுக்கு வகுப்புத் தடையினை நீக்கக் கோரி இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

குறித்த பல்கலைக் கழகத்தின் உபவேந்தரது அலுவலகத்தை மூடவிடாது நேற்று முன்தினம் இரவு வரை இவர்களது ஆர்ப்பாட்டம் தொடர்ந்ததாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (இ-7-10)

# விமர்சனங்கள், குற்றச்சாட்டுக்களை மகிழ்ச்சியோடு ஏற்று

# வெற்றிப் பாதையில் அமைதிப் பயணம்

## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு



(கொழும்பு)

**விமர்சனங்களையும் குற்றச்சாட்டுக்களையும் மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டு ஒரு விரைவான பயணமாக அல்லாமல் அமைதியாகவும் அதேநேரம் ஒரு வெற்றிகரமான செயற்றிட்டத்தினூடாக நாட்டை வெற்றிப் பாதையில் வழிநடத்திச் செல்வதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.**

ஜனாதிபதித் தேர்தலின் போது பொது வேட்பாளருக்காக நேரடியாக செயற்பட்ட பல்வேறு நிறுவனங்கள், தொழிற்சங்கங்களுடன் இடம்பெற்ற ஒரு சுமுகமான சந்திப்பின் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார். இச் சந்திப்பு நேற்று முன்தினம் மாலை ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்றது.

பொது வேட்பாளரை வெற்றிபெறச் செய்து நாட்டுக்கும் மக்களுக்கும் தேவையான மாற்றத்தை பெற்றுக் கொடுக்க அர்ப்பணிப்புடன் செயற்பட்ட எல்லோருக்கும் இதன்போது தனது நன்றிகளை தெரிவித்துக்கொண்ட ஜனாதிபதி எதிர்காலத் திலும் அவர்க் எல்லோ ரினதும் கருத்துக்கள் முன்மொழிவுகளுக்கு இடமளித்து. நாட்டை வெற்றிப் பாதையில் இட்டுச் செல்வதாக தெரிவித்தார்.

தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்ட விடயங்களை 24 மணிநேரத்தில் செய்து முடிக்க முடியுமாக இருந்தால், அவற்றை தாம் ஒரு கையொப்பத்தில் செய்து முடிக்க தயார் என்ற போதும், அது அவ்வாறு செய்யக் கூடியவை அல்ல எனக் குறிப்பிட்ட ஜனாதிபதி நாடு முகங்கொடுத்துள்ள பொருளாதார நெருக்கடிகள் மற்றும் சர்வதேச நிலைமைகளை கருத்திற் கொண்டு நாம் செல்ல வேண் டியது மிகவும் கவனமான தும் மெதுவானதுமான ஒரு பயணமாகும் என்றும் ஜனாதிபத தெரிவித்தார். (இ-7-10)

# இலங்கையில் சிறுநீரக நோய் ஆய்வறிக்கை ஜனாதிபதியிடம்



இலங்கையில் சிறுநீரக நோய் ஒழிப்புக்குத் தேவையான ஆய்வு நடவடிக்கைகளுக்கு உதவுவதற்கு நெதர்லாந்து முன்வந்துள்ளது. அந்த வகையில் நெதர்லாந்து நாட்டைச் சேர்ந்த விசேட வைத்திய குழுவினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு அறிக்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் நேற்று முன்தினம் பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து கையளிக் கப்பட்டது.

இலங்கையில் உள்ள நெதர்லாந்து தூதுவரால் இந்த அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது. (இ-7-10)

# ஐ.தே.க.காரியாலயங்களை அமைக்கும் பணிகளை விரைவுபடுத்த ரணில் பணிப்பு

ஐக்கிய தேசியக்கட்சியின் கிளைக் காரியாலயங்களை அமைக்கும் பணிகளை எதிர்வரும் டிசெம்பர் மாதத்திற்கு முன்னதாகப் பூர்த்தி செய்யுமாறு கட்சியின் தலைவரும் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் சகல தொகுதி அமைப்பாளர்களுக்கும் இவ்வாறு உத்தரவிட்டுள்ளார். நேற்று முன்தினம் பிரதமர் இந்த உத்தரவினை உத்தியோகபூர்வமாக பிறப்பித்துள்ளார். (இ-7-10)

# வற்வரி மக்களுக்கு பாதகமெனில் மீண்டும் போராட்டம் வெடிக்குமாம்

## கூட்டு எதிரணி கூறுகிறது



(கொழும்பு)

வற்வரி அதிகரிப்பு குறித்த சட்டம் மக்களுக்கு பாதிப்பானது என்றால் மீளவும் அதற்கு எதிர்ப்பு வெளியிடப்படும் என கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் காமினி லொக்குகே தெரிவித்துள்ளார்.

வற்வரி அதிகரிப்பு குறித்து கொழும்பு ஊடகமொன்று கேள்வி எழுப்பிய போது. அவர் இதனை தெரிவித்தார்.

வற்வரி அதிகரிப்பு குறித்த உத்தேச திருத்தச் சட்டம் எவ்வாறு திருத்தி அமைக்கப்பட்டாலும் மக்களுக்கு ஆபத்தானது என்றால் மீளவும் அதனை வாபஸ்பெற்றுக்கொள்ள செய்யப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7-10)

# மக்களை பீதியடையச் செய்ய வேண்டாம் விமலிடம் மல்வத்து பீடாதிபதி அறிவுறுத்து

மக்களை தேவையின்றி பீதியடையச் செய்ய வேண்டாம் என ஜே.என்.பியின் தலைவர் விமல் வீரவன்சவிற்கு கண்டி மல்வத்து பீடாதிபதி திப்பட்டுவாவே ஸ்ரீசித்தார்த்த சுமங்கலதேரர் அறிவித்துள்ளார்.

உத்தேச அரசியல் சாசனம் தொடர்பில் மக்கள் மத்தியில் பீதியை ஏற்படுத்தவோ பொய்யான பிரசாரங்களையோ செய்ய வேண்டாம் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

நாட்டில் பிரிவினைவாதத்தை தூண்டும் வகையில் புதிய அரசியல் அமைப்பில் எவ்வித யோசனைகளும் உள்ளடக்கப்படாது என ஜனாதிபதியும் பிரதமரும் தமக்கு உறுதியளித்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

அரசியல் சாசனம் தொடர்பில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட உள்ள காரணத்தினால் ஜே.என்.பி.கட்சி உறுப்பினர்கள் தேவையின்றி அச்சமடையத் தேவையில்லை எனவும், மக்களை குழப்பத் தேவையில்லை எனவும் அவர் அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

புதிய அரசியல் சாசனம் நாட்டை பிளவுபடுத்தும் என ஜே.என்.பியினர் மல்வத்து பீடாதிபதியிடம் தெரிவித்த போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். (இ-7-10)



# வைத்தியர்களின் ஓய்வு வயதை 63ஆக அதிகரிக்க அமைச்சரவை அங்கீகாரம்

வைத்தியர்களின் ஓய்வு பெறும் வயது தற்போது 60 ஆகும். ஆனால் இதை 63ஆக அதிகரிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போது அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான ராஜித சேனாரத்ன இதனைத் தெரிவித்தார்.

மேலும், நாட்டில் தற்போது 1164 வைத்தியர்களுக்கான வெற்றிடம் காணப்படுவதாகவும் இவற்றை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (இ-7-10)

# மோர்கனே இங்கிலாந்து அணித்தலைவர் அவரின் கீழ் சிறப்பாக செயல்படுவோம்

## ஜொஸ் பட்லர்



இங்கிலாந்து அணியின் பங்களாதேஷ் தொடரிலிருந்து இங்கிலாந்தின் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கொண்ட போட்டிகளுக்கான தலைவர் ஒய்ன் மோர்கன் விலகியமையைத தொடர்ந்து அத்தொடருக்கான தலைவராக நியமிக்கப்பட்டுள்ள ஜொஸ் பட்லர், ஒய்ன் மோர்கனைப் புகழ்ந்துள்ளதோடு, அவரே ஒருநாள் சர்வதேசப் போட்டி அணியின் உண்மையான தலைவர் எனவும் தெரிவித்துள்ளார்.

மோர்கனின் விலகல் குறித்து இங்கிலாந்து அணியின் முன்னாள் தலைவர்கள் சிலர் கடுமையான விமர்சனங்களை முன்வைத்திருந்தனர். மிகப்பெரிய தவறொன்றை மோர்கன் செய்திருப்பதாக மைக்கல் வோனும் அவரது தலைமைத்துவத்தின் பலத்தை இது குறைக்குமென நாசர் குஸைனும் தெரிவித்திருந்தனர்.

ஆனால், மோர்கனுக்கு ஆதரவு வெளியிட்டுள்ள பட்லர், இந்த முடிவு எங்கள் அணியைப பிளவுபடுத்தாது. நாங்கள் மிகவும் இறுக்கமான உறவைக் கொண்டுள்ள அணி, நாங்கள் அவ்வாறே இருப்போம். நாமெல்லோரும் சிறந்த நண்பர்களாக இருக்கிறோம், நாங்கள் அவ்வாறே இருக்க விரும்புகிறோம்.

இவ்வாறான ஒன்று, எங்களுக்குள் பிளவுபடுத்தும் ஒன்றாக வருவதற்கு நாங்கள் அனுமதிக்க மாட்டோம்" என்று தெரிவித்தார். அடுத்தாண்டு இடம்பெறவுள்ள சம்பியன்ஸ் கிண்ணப் போட்டிகளை வெல்வதை இலக்காகக் கொண்டு செயற்படவுள்ளதாகத் தெரிவித்த பட்லர், ஒருநாள் சர்வதேசப் போட்டி அணியின் தலைவராக, ஒய்ன் மோர்கனே இருக்கிறார்.

அவர் தயாராக இருக்கும்போது, தலைமைப பதவியை அவர் மீண்டும் பெறுவார் என நான் எதிர்பார்க்கிறேன். அவரே, இவ்வணியின தலைவர். அவரின் கீழ் அற்புதமான முன்னேற்றங்களை அடைந்துள்ளோம் என மோர்கனைப் புகழ்ந்தார்.

அண்மைக்காலத்தில், ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் மிகச் சிறப்பான முன்னேற்றங்களை அடைந்துள்ள இங்கிலாந்து அணி, சில வாரங்களுக்கு முன்னரேயே, ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் அதிக ஓட்டங்களைப் பெற்ற அணி என்ற உலக சாதனையைப் படைத்திருந்தது.

அந்த முன்னேற்றங்களுக்கு ஒய்ன் மோர்கனே பிரதான காரணமெனவும் பட்லர் தெரிவித்தார். இந்த மாற்றங்களுக்கு ஒய்ன் மோர்கனே பிரதான காரணங்களுள் ஒன்றாக இல்லாவிடில் பிரதான காரணமாக அமைந்துள்ளார். அவர் அறிமுகப்படுத்தியுள்ள நாங்கள் விளையாடும் பாணியை தொடர்ந்தும் விளையாட வேண்டுமென நான் எண்ணுகிறேன். கடந்த 18 மாதங்களாக அவர் அற்புதமான பணியை ஆற்றியுள்ளார். அவர் திரும்பி வந்ததும் தலைமைப் பதவியை மகிழ்ச்சியுடன் திரும்ப வழங்குவேன் என பட்லர் குறிப்பிட்டார். (க)

# இலங்கை முதலாவது பதக்கம்

ரியோ பராலிம்பிக் போட்டிகளில் இலங்கைக்கு முதலாவது பதக்கத்தை தினேஷ் பிரியந்த ஹேரத் பெற்றுக்கொடுத்துள்ளார்.

ஈட்டி எறிதல் போட்டியில் அவர் வெண்கலப் பதக்கம் வென்றுள்ளார். ஈட்டி எறிதல் போட்டியில் எப் 46 பிரிவின் இறுதி சுற்றில் அவர் 58.23 மீற்றர் தூரத்திற்கு ஈட்டியை எறிந்து மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

இந்த பதக்கமானது இலங்கை பராலிம்பிக போட்டி வரலாற்றில் இரண்டாவது பதக்கமாக அமைந்துள்ளதோடு, கடந்த 2012ஆம் ஆண்டு லண்டனில் நடைபெற்ற பராலிம்பிக் போட்டியில் இலங்கை சார்பில் வெண்கலப் பதக்கம் ஒன்று வெற்றிகொள்ளப்பட்டது.



400 மீற்றர் ஓட்டப்போட்டியில் பிரதீப் சஞ்ஜய மூன்றாம் இடத்தைப் பெற்று இலங்கைக்கு வெண்கலப் பதக்கம் ஒன்றைப் பெற்றுக்கொடுத்தார்.

கடந்த 1996-ஆம் ஆண்டு முதல் பராலிம்பிக் போட்டிகளில் பங்கேற்றுவரும் இலங்கை, கடந்த 2012ஆம் ஆண்டு ஒரேயொரு பதக்கத்துடன் தரப்படுத்தலில் 109ஆவது இடத்தில் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, பராலிம்பிக் பதக்கப்பட்டியலில் 63 தங்கம், 51 வெள்ளி மற்றும் 33 வெண்கலங்கள் உள்ளடங்களாக மொத்தம் 147 பதக்கங்ளுடன் சீனா தொடர்ந்து முதலிடத்தில் காணப்படுகின்றது.

34 தங்கம், 18 வெள்ளி மற்றும் 23 வெண்கலப் பதக்கங்கள் உள்ளடங்கலாக மொத்தம் 75 பதக்கங்களுடன் பிரித்தானியா இரண்டாவது இடத்திலும், 27 தங்கம், 21 வெள்ளி மற்றும் 24 வெண்கலப்பத்தக்கம் உள்ளடங்கலாக மொத்தம் 72 பதக்கங்களுடன் உக்ரைன் மூன்றாவது இடத்திலும் காணப்படுகின்றன. (க)


# டேவிஸ் கோப்பை டென்னிஸ் போட்டி டெல்லியில் நடால் பயிற்சி; இந்திய சவால்

டேவிஸ் கோப்பை டென்னிஸ் உலக பிரிவு பிளே ஓப் சுற்றில் இந்திய அணியுடன் மோதவுள்ள ஸ்பெயின் அணியின் நட்சத்திர வீரர் ரபேல்நடால், டெல்லியில்நேற்று தீவிரமாக பயிற்சி செய்தார். இந்தியா - ஸ்பெயின் அணிகள் மோதும டேவிஸ் கோப்பை டெனிஸ் உலக பிரிவு பிளே ஒப்சுற்று, டெல்லி ஆர்.கே.கண்ணா டெனிஸ ஸ்டேடியத்தில் வரும் 16ஆம் திகதி தொடங்கி 18-ஆம் திகதி வரை நடைபெற உள்ளது.

ஸ்பெயின அணியில் ரபேல் நடால், டேவிட் பெரர் இருவரும் ஒற்றையர் ஆட்டங்களில் களமிறங்க உள்ளனர். இரட்டையர் ஆட்டத்தில் பெலிசியானோ லோபஸ் - மார்க் லோபஸ் ஜோடி விளையாட உள்ளது. ஸ்பெயின் அணி முழு பலத்துடன் வந்துள்ளதால், இந்திய அணிக்கு கடும் சவால் காத்திருக்கிறது. நடால் உள்ளிட்ட ஸ்பெயின் அணி வீரர்கள் நேற்று உற்சாகமாக பயிற்சி செய்தனர். 14 கிராண்ட் ஸ்லாம் பட்டங்களை வென்ற சாதனையாளரான நடால், தற்போது உலக தரவரிசையில் 4ஆவது இடத்தில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்திய அணியில் ஒற்றையர் ஆட்டங்களில் களமிறங்க உள்ள சாகேத் மைனேனி 137-வது இடத்திலும், ராம்குமார், ராமநாதன் 2,3-வது இடத்திலும் உள்ளனர்.

இந்தியாவுக்கு எதிராக டேவிஸ் கோப்பை போட்டியில் விளையாடுவது குறித்து நடால் கூறுகையில், 'சமீபத்திய ஆண்டுகளில் இந்தியாவுக்கு பல முறை வந்துள்ளேன். இந்திய மக்களும், ரசிகர்களும் அளிக்கும் வரவேற்பு மகிழ்ச்சி அளிக்கிறது. தரவரிசையில் எங்கள வீரர்கள் பலர் டொப் 100-ல் இடம் பெற்றுள்ளனர். அப்படி இருந்தும் உலக பிரிவில் இடம் பெறாதது வருத்தம் அளிக்கிறது.

மீண்டும் உலக பிரிவுக்கு முன்னேற விரும்புகிறோம். இந்திய அணிக்கு எதிரான போட்டியை குறைத்து மதிப்பிட விரும்பவில்லை. இந்த போட்டியில் வெற்றி பெறுவது அத்தனை எளிதாக இருக்காது என்பதை உணர்ந்துள்ளோம். முழு அளவில் தயாராகவும், சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினாலும் மட்டுமே இந்திய அணியை வீழ்த்த முடியும் என்றார்.




இந்தியாவுடன் நேருக்கு நேர் மோதிய டேவிஸ் கோப்பை போட்டிகளில் ஸ்பெயின் 2-1 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது. கடைசியாக இரு அணிகளும் 51 ஆண்டுகளுக்கு முன் மோதியுள்ளன. (க)

# ஐரோப்பிய கால்பந்து சங்க தலைவராக செபரின் தேர்வு

ஐரோப்பிய கால்பந்து சங்கங்களின் ஒன்றிய புதிய தலைவராக அலெக்சாண்டர் செபரின் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

கடந்த ஆண்டு ஜூன் மாதத்தில் சர்வதேச கால்பந்து சங்க (பீபா) தலைவர் தேர்தலில் செப் பிளாட்டர் வெற்றி பெற்றதும் அவர் உள்ளிட்ட நிர்வாகிகள் மீது பல்வேறு நிதி முறைகேடு புகார்கள் எழுந்தன. செப் பிளாட்டர் தனது பதவி காலத்தில் துணைத்தலைவராக இருந்த மைக்கேல் பிளாட்டினிக்கு ஆலோசகராக



செயல்பட்டதற்காக கணக்கில் காட்டாமல் ரூ.13 கோடி வழங்கியது பெரும் சர்ச்சையாக வெடித்தது குறிப்பிடத்தக்கது. (க)


# மேற்கிந்திய தொடரிலிருந்து மொகமட் ஹபீஸ் விலகல்

காயம் காரணமாக மேற்கிந்திய தீவுகள் அணிக்கெதிரான ஒருநாள் தொடரில் பாகிஸ்தான் அணியின் முன்னணி பட்ஸ்மன் மொகமட் ஹபீசுக்கு இடம் கொடுக்கப்படவில்லை.

பாகிஸ்தான் அணியின் முன்னணி பட்ஸமன் மொகமட் ஹபீஸ் 35 வயதாகும் இவருக்கு இங்கிலாந்து தொடரின்போது காலில் காயம் ஏற்பட்டது. இதனால் முதல் ஒருநாள் போட்டியுடன் பாகிஸ்தான் திரும்பினார். தற்போது வருகிற 30- ம் திகதி முதல் அக்டோபர் 5-ம் திகதி வரை மேற்கிந்திய தீவுகள் அணிக்கெதிராக பாகிஸ்தான் மூன்று ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாட இருக்கிறது.

இந்த தொடருக்கான பாகிஸ்தான் அணியில் மொகமட் ஹபீஸ் சேர்க்கப்படவில்லை. அவரது காயம் குணமடைய குறைந்தது மூன்று வாரங்கள் ஆகும் என்பதால் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை இந்த முடிவை எடுத்துள்ளது.

இதுகுறித்து பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் மருத்துவக்குழு டாக்டர் மொகமட் ரியாஸ் கூறுகையில் "தேசிய கிரிக்கெட் அககடமியில் ஹபீஸின் காயம் குணமடைவதற்கான சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. அவர்



முழுவதும் குணமடைய இன்னும் மூன்று வாரங்கள் ஆகும்" என்று தெரிவித்துள்ளார். (க)

# சிறுநீரக மோசடி; இந்தியர்களின் மறியல் நீடிப்பு

(கொழும்பு)

சிறுநீரக மோசடி தொடர்பில் கொழும்பில் வைத்து கைது செய்யப்பட்ட இந்தியப் பிரஜைகள் ஏழு பேரும் எதிர்வரும் 27 ஆம் திகதி வரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் ஏழு பேரும் நேற்று முன்தினம் கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட நிலையில் நீதவான் மொஹமட் நிஹால் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

சிறுநீரக மோசடியில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டின் பேரில் கொழும்பு வெள்ளவத்தையில் வைத்து எட்டு இந்தியர்கள் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

இவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் விசா இன்றி தங்கியிருந்தமையும் தெரியவந்ததுடன், மிரிஹான குற்றத்தடுப்புப் பிரிவில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இவர்களில் பிரதான சந்தேகநபர் தப்பிச் சென்றுள்ளார்.

மேலும், எஞ்சிய ஏழு பேரும் மகசின் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டனர். சந்தேக நபர்களை எதிர்வரும் 27 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் மொஹமட் நிஹால் உத்தரவிட்டுள்ளார். (இ-7-10)

## ஜோதிடத் தகவல்

### ஆயிலியம் நட்சத்திரம் தரும் உண்மை

மாமியார் ஸ்தானமான ஜென்ம இலக்கினத்தில் இருந்து 10 ஆம் வீட்டில் பகை கிரகங்களுடன் புதன் சேர்ந்து இருந்தால் மட்டுமே ஆயிலியம் நட்சத்திரத்தில் பிறந்தவர்களின் மாமியாருக்கு தோஷம் ஏற்படும். அவ்வாறு இல்லாமல் புதன் கிரகம் ஆட்சி உச்சம் அல்லது சுக்கிரனின் நட்சத்திர சாரம் பெற்று அமர்ந்து இருந்தால் மாமியாருக்கு எவ்விதக் கெடுதலையும் ஏற்படுத்தாது.




## இராசி பலன்

15.09.2016
(ஆவணி 30, வியாழக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.01 மணிக்கு
சதுர்த்தசி பின்னிரவு 2.58 மணிவரை
அவிட்டம் முற்பகல் 8.59 மணிவரை
சுபநேரம் 7.33-9.03 மணிவரை
இராகுகாலம் 1.33-3.03 மணிவரை
நடேசர் அபிஷேகம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| கேது சந் | கிரகநிலை சந்திராஷ்டமம் ஆயிலியம் | | |
| | | | சூரி ராகு புதன் |
| செவ் | சனி | | குரு சுக் |

**மேடம்:** வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் ஆர்வம் காட்டுவீர்கள், ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், ஆனந்தமான நாள்.

**இடபம்:** செல்வாக்கு மேலோங்கும் நாள்,சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள்.

**மிதுனம்:** பகை விலகி பாசம் கூடும் நாள், ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும், பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு, தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம்.

**கடகம்:** கவலைகள் தீர கடவுளை வழிபட வேண்டிய நாள், உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை, நேசித்த ஒருவருடன் யோசித்துப் பேசும் சூழ்நிலை ஏற்படலாம்.

**சிம்மம்:** சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், மனதிற்கு இனிய சம்பவமொன்று இடம்பெறலாம், பயணங்கள் விருப்பத்தை நிறைவேற்றும்.

**கன்னி:** முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், உள்ளன்போடு பழகியவர்களின் எண்ணிக்கை கூடும், கொடுக்கல்-வாங்கல்களை ஒழுங்கு செய்ய முற்படுவீர்கள்.

**துலாம்:** கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், வளர்ச்சி கூடும் நாள், கோரிக்கைகள் நிறைவேற கோயிலுக்குச் செல்ல வேண்டிய நாள், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர்.

**விருச்சிகம்:** நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கப் பெறுவீர்கள், விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் ஏற்படலாம்.

**தனுசு:** உடன் பிறப்புக்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, பாகப் பிரிவினைகள் சுமுகமாக அமையும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.

**மகரம்:** பொது வாழ்வில் புகழ்கூடும், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம்.

**கும்பம்:** இறைவழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், சான்றோர்களின் சந்திப்பால் சந்தோசமடைவீர்கள், விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபட வேண்டிய நாள்.

**மீனம்:** சுப செலவுகள் அதிகரிக்கும் நாள், தொழிலில் உடனிருப்பவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, மூத்த சகோதரர்கள் உங்களின் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவர்.

## தமிழர் மகா சபையின் பொதுக்கூட்டம் 17ம் திகதி

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் பொதுச் சபைக் கூட்டம் நாளை மறுதினம் 17ஆம் திகதி சனிக்கிழமை மு.ப 10 மணிக்கு யாழ்ப்பாணம் பலாலி பருத்தித்துறை வீதிச் சந்தி எனும் முகவரியில் அமைந்துள்ள சன்மார்க்க ஐக்கிய வாலிபர் சங்க மண்டபத்தில் நடைபெறும். (இ-3)

## ஈவினையில் இசைநிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

மிருதங்க வித்துவான் வட்டுக்கோட்டை புூம்பலப்பிட்டியை சேர்ந்த பிரம்மஸ்ரீ க.சுவாமிநாதன் சர்மாவின் இசை அர்ச்சனை குழுவினர் வழங்கும் இசை நிகழ்ச்சி ஈவினை கற்பக விநாயகர் மஹோற்சவ தேர்த்திருவிழாவான இன்று நண்பகல் 12 மணி முதல் கோபுர நுழைவாயில் வில்லு மணிமண்டபத்தில் நடைபெறும்.

இதேவேளை ஆலயத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கேணியில் நாளை காலை தீர்த்தோற்சவம் இடம்பெறும். (இ

## நாரந்தனை கணேச வித்தியாலய

# நூற்றாண்டு விழாவின் முதல் நாள் வைபவம்

(யாழ்ப்பாணம்)

யாழ். நாரந்தனை கணேச வித்தியாலய நூற்றாண்டு விழாவின் (1916-2016) முதல் நாள் வைபவம் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் மாணிக்கம் அரங்கில் இடம்பெறும்.

பாடசாலை அதிபர் திருமதி. பிரேமவல்லி சற்குணராசா தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் தம்பிராசா குருகுலராசா கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார்.ஊர்காவற்றுறை பிரதேச செயலாளர் திருமதி.எழிலரசி அன்ரன் யோகநாயகம்.ஊர்காவற்றுறை பிரதேச சபை செயலாளர் சு.சுதர்ஜன் ஆகியோரும் கலந்து கொள்வர்.

கௌரவ விருந்தினர்களாக தீவக பிரதிக்கல்விப் பணிப்பாளர் பொன். அருணகிரிநாதன்,யா/ நெல்லியடி மத்திய கல்லூரியின் ஓய்வு நிலை அதிபர் கலாநிதி செ. சேதுராசா ஆகியோரும் கலந்து கொள்வர்.

தமிழருவி த. சிவகுமாரன் நடுவராக பங்கேற்கும் இன்றைய சூழலில் தமிழர் பண்பாடும் கலாசாரமும் புறக்கணிக்கப்படுகின்றதா? போற்றப்படுகின்றதா? என்னும் தலைப்பில் சிறப்புப் பட்டிமன்றம் இடம் பெறவுள்ளது. புறக்கணிக்கப்படுகின்றது எனும் தலைப்பின் கீழ் ந. விஜயசுந்தரம்,தெ.ஹர்சன் ஆகியோரும் போற்றப்படுகின்றது எனும் தலைப்பின் கீழ் ச. லலீசன், ந. ஜங்கரன் ஆகியோரும் வாதிடவுள்ளனர். (இ-7)

## மஹோற்சவ முன்னாயத்த கூட்டம்

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய மஹோற்சவ முன்னாயத்த கூட்டம் எதிர்வரும் 19 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு ஆலய கண்ணன் மண்டபத்தில் பிரதேச செயலாளர் தலைமையில் நடை பெறவுள்ளது.

இக் கூட்டத்தில் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டு உதவுமாறு பருத்தித்துறை பிரதேச செயலாளர் இ.த.ஜெயசீலன் அறிவித்துள்ளார். (இ




## நடேசர் அபிஷேக விஞ்ஞாபனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவை ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீமத் நடராஜர் கோயில் ஆவணி மாத நடேசர் அபிஷேக விஞ்ஞாபனம் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் இடம் பெறும். (இ

## 'சுவர்க்கத்தை தேடி' ஆவணப்பட வெளியீடு

யாழ்ப்பாணம், நல்லூர், செம்மணி வீதி, சாதனா பாடசாலை மைதானத்தில் அமைக்கப்பட்டிருக்கும் மக்கள் களரி நகரும் அரங்கின் நாடகவிழா செப்டெம்பர் 7 ஆம் திகதி தொடக்கம் பார்வையாளர்களின் நிறைந்த அரங்கேற்றங்களாக நடைபெற்று வருகிறது.

இந்நாடகவிழாவில் நாளை 16 ஆம் திகதி, இலங்கையின் மூத்த நாடகம் மற்றும் திரைப்பட கலைஞரான தர்மசிறி பண்டாரநாயக்கவின் "சுவர்க்கத்தை தேடி" (In search of Paradise) என்ற ஆவணப்படம் திரையிடப்படவுள்ளது. இலங்கை வரலாற்றின் தொடக்கம் தொட்டு 1959 ஆம் ஆண்டு பிரதமராக இருந்த எஸ்.டபிள்யூ. ஆர். டீ. பண்டாரநாயக்க கொல்லப்பட்டது வரை ஆவணப் படம் விரிகிறது.

நாளை மாலை 6.30 மணிக்கு மக்கள் களரி நகரும் அரங்கில் இத் திரைப் படம் காட்டப்படுவ தோடு இது தொடர்பான கலந் துரையாடலும் இடம்பெறும்.

செப்டெம்பர் 18 ஆம் திகதி மாலை 6.30 மணிக்கு அரங்கேற்றப்படவிருக்கின்ற "வெண்கட்டி வட்டம்" என்ற நாடகத்தின் பிரதி புத்தகமாக வெளியிடப்படுகின்றது.

பர்டோல்ட் பிறெக்டின் "கோக் கேசியன் சோக்சர்கள்"என்ற மூலப் பிரதியை தமிழ் மொழிக்கு மாற்றியவர் குழந்தை.ம.சண்முகலிங்கம். "வெண் கட்டி வட்டம்" நாடக நூலினை மக்கள்களரி கலாசார மன்றம் வெளியிடுகிறது.

செப்டெம்பர் 21 ஆம் திகதி மாலை 6.30க்கு அரங்கேறும் "சரண்தாஸ்" நாடகத்துடன் நாடகவிழா இனிதே நிறைவுபெறுகிறது. எனினும், 22 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு கொழும்பு, இலங்கை மன்றம் நிறுவனத்தினது. டிஜிற்றல் அக்கடமி ஏற்பாடு செய்திருக்கும் குறுந் திரைப்படங்கள் மற்றும் திரைப்படங்கள் நகரும் அரங்கில் திரையிடப்படவிருக்கின்றன. அன்றைய தினம் மாலை 5 மணிக்கு "நாளைய அரங்கினை நோக்கி" என்ற தலைப்பில் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது. குழந்தை. ம.சண்முகலிங்கம், கலாநிதி சுனில் விஜேசிறிவர்தன, சண்முகம் முத்துலிங்கம், சோ.ப.பத்மநாதன், அ.யேசுராசா, சாமிநாதன் விமல், ரதிதரன் போன்ற விற்பன்னர்கள் இந்நிகழ்வில் கலந்து கொள்ள உள்ளனர். (இ-7-10)



பருத்தித்துறை பிரதேச செயலக வாழ்வின் எழுச்சி சமூக அபிவிருத்தி மன்றத்தினால் வறிய மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக சிசுதிரிய புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. இதில் பருத்தித்துறை பிரதேச நிர்வாக உத்தியோகத்தர் , வாழ்வின் எழுச்சி முகாமையாளர்கள், தலைமைப்பீட கிராமசேவகர், வாழ்வின் எழுச்சி உத்தியோகத்தர்கள், மாணவர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (படங்கள் : கரணவாய் செய்தியாளர்)

## மகளுக்கு நியாயம் கேட்ட தந்தையின் மீது தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

வீதியால் சென்ற பெண் பிள்ளையினை துவிச்சக்கர வண்டியால் இடித்து விழுத்தியமை தொடர்பில் கேட்க முற்பட்ட தந்தை கடுமையான தாக்குதலுக்குள்ளான நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார் எனப் பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு 7 மணியளவில் பருத்தித்துறை நகரில் இடம்பெற்ற இச் சம்பத்தில் விநாய முதலியார்வீதி பருத்தித்துறையினைச் சேர்ந்த வெ. ரவிந்திரன் (வயது-46) என்பவரே தாக்குதலுக்குள்ளானவராவார்.

சில தினங்களுக்கு முன்னர் வீதியால் சென்ற பிள்ளையினை குறித்த இளைஞர் துவிச்சக்கரவண்டியால் இடித்து விழுத்தியதாகவும் இது தொடர்பில் அவ்விளைஞரை கண்ட தந்தை நியாயம் கேட்க முற்பட்ட போது அவரை தள்ளி விழுத்தி ஆணி ஏற்றப்பட்ட பலகையால் தாக்கியதாகவும் இதனால் படுகாயங்களுக்குள்ளான தந்தை பருத்தித்துறை ஆதார் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் கூறினர். இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளைமேற்கொண்டுள்ளனர். (இ-60)

## ஆங்கில கற்கை நெறிக்கு விண்ணப்பங்கள் கோரல்

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையானது யாழ். மாவட்டத்தில் ஆங்கிலம் மற்றும் மென்திறன் கற்கை நெறியினை (NVQ மட்டம்-1) முழுநேரம் மற்றும் பகுதி நேரமாக உடனடியாக ஆரம்பமாகவுள்ளது.

இக்கற்கை நெறியில் பாடசாலை மாணவர்கள், பாடசாலையை விட்டு விலகியவர்கள், உயர்கல்வி கற்பவர்கள் மற்றும் தொழில்புரிபவர்கள் இணைந்து கொள்ளலாம்.

இக்கற்கைநெறியினை பயில விரும்புபவர்கள் தங்கள் பதிவுகளை அலுவலக நேரத்தில் மாவட்ட அலுவலகம், 1 ஆம் மாடி, வீரசிங்கம் மண்டபம், இல. 12, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம் என்னுமிடத்தில் மேற்கொள்ளுமாறு உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (இ

## முதியோர் சங்க ஒன்றுகூடலும் இலவச ஆயுள்வேத சேவைகளும்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் வடக்கு முதியோர் சங்க ஒன்றுகூடலும் இலவச ஆயுள்வேத மருத்துவ சேவைகளும் எதிர்வரும் 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் முதியோர் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதேவேளை சங்கத்தின் 5 ஆவது ஆண்டு நிறைவு நாளும் சிறப்பு நிகழ்வுகளும் எதிர்வரும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் இடம்பெறவுள்ளது. (இ

## தென்தீபம் சஞ்சிகை -இதழ் 3 ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன

வேலணை பிரதேச கலாசார பேரவையால் வெளியிடப்படும் தென்தீபம் சஞ்சிகை இதழ் 3 இற்கான ஆக்கங்கள் வேலணை பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்தவர்களிடமிருந்து கோரப்படுகிறது. இவ் வருடம் தென்தீபம் சஞ்சிகையானது ஆவணப்படுத்தலை மையமாகக் கொண்டு வெளியிடப்படவுள்ளது.

எனவே இதற்கென கலைஞர்களின் விபரங்கள் இச் சஞ்சிகையில் உள்ளடக்கப்படவுள்ளது. வேலணை பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த கலைஞர்கள், இளங்கலைஞர்கள் மற்றும் மறைந்த கலைஞர்கள் விபரங்கள் பிரதேச செயலகத்தின் கலாசார பிரிவால் பதிவுசெய்யப்படவுள்ளன.

இதற்கமைவாக கலைஞர்கள், இளங்கலைஞர்கள் தங்கள் விபரங்களை வேலணை பிரதேச செயலக கலாசார பிரிவில் விண்ணப்பப்படிவங்களை பெற்று 15.10. 2016 இற்கு முன்னராக கலாசாரப் பிரிவில் ஒப்படைக்கவும். தபால் மூலமாயின் செயலாளர், கலாசார பேரவை, கலாசார பிரிவு, பிரதேச செயலகம், வேலணை எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அத்துடன் மறைந்தகலைஞர்களின்விபரங்களை அவர்களது உறவினர்கள் வழங்கலாம். மேலும் தென்தீபம் இதழ் 3சஞ்சிகையில் ஆலயங்களின் வரலாறும் உள்ளடக்கப்படவுள்ளதால் அனைத்து வேலணை பிரதேச ஆலய நிர்வாகத்தினரும்தங்கள் ஆலய மகிமை வரலாறு மற்றும் சஞ்சிகையில் உள்ளடக்கக்கூடிய ஆலய விபரங்களை 15.10. 2016 இற்கு முன்னர் பிரதேச செயலக கலாசார பிரிவில் ஒப்படைக்குமாறு வேலணைப் பிரதேசசெயலர் எஸ்.தெய்வேந்திரம் அறிவித்துள்ளார். (இ-7)

# கூலர் வாகனத்தில் யாழ்ப்பாணத்திற்கு கடத்தப்பட்ட மரக்குற்றிகள் மாட்டின

## கைதான சாரதி விசாரணைக்காக பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைப்பு

(மல்லாவி)

**கிளிநொச்சி மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரிவிலுள்ள தர்மபுரம் பொலிஸ் நிலையப் பிரிவில் அலுமினியக் கூலர் வாகனத்தில் ஒரு தொகுதி மரக் குற்றிகள் கடத்தப்பட்டு யாழ்ப்பாணம் நோக்கி வாகனம் பயணித்துக் கொண்டிருப்பதாக தர்மபுரம் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலை அடுத்து வீதி சோதனையில் ஈடுபட்டிருந்த பொலிஸாரினால் மரக்கடத்தலில் ஈடுபட்ட வாகனம் கைப்பற்றப்பட்டதுடன் அதன் சாரதியும் கைது செய்யப்பட்டார்.**

இச் சம்பவம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

புதுக்குடியிருப்புபகுதியில்இருந்து சட்டவிரோதமான முறையில் வெட்டப்பட்ட பாலை, முதிரை மரக் குற்றிகளுடன் அலுமினிய கூலர் வாகனம் ஒன்று பயணித்துக் கொண்டிருப்பதாக பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலை அடுத்து வீதிச்சோதனையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் சுமார் இரண்டு இலட்சம் ரூபாவிற்கு மேற்பட்ட பாலை, முதிரை மரக் குற்றிகளை ஏற்றிப் பயணித்துக் கொண்டிருந்த வாகனத்தை கைப்பற்றினர். அதே வேளை சாரதியும் கைதானார்.

தர்மபுரம் பொலிஸ் நிலையத்தில் மேலதிக விசாரணைகளுக்காக தடுத்து வைக்கப்பட்டுள்ள வாகனம், அதன் சாரதி விசாரணைகளின் பின்னர் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளதாகவும் தர்மபுரம் பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(2-15)




# இரணைமடுக் குளத்தின் புனரமைப்பு வேலைகள் விரைவாக முன்னெடுப்பு

## கிளிநொச்சி பிரதி நீர்ப்பாசனப் பொறியியலாளர் தெரிவிப்பு

கிளிநொச்சி, இரணைமடுக் குளத்தின் கீழ் எதிர்வரும் காலபோக மற்றும் சிறுபோக நெற்செய்கைகளை மேற்கொள்ளக் கூடிய விதத்தில் குளத்தின் புனரமைப்புப் பணிகள் விரைவாக முன்னெடுக்கப்படும் எனப் பிரதி நீர்ப்பாசனப் பொறியியலாளர் என்.சுதாகரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி, இரணைமடுக் குளத்தின் புனரமைப்புப் பணிகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் பல்வேறு தாமதங்கள், தடைகள் காணப்படுகின்றன.

அண்மையில் அணைக்கட்டு புனரமைப்புப் பணிகளுக்குத் தேவையான மண் பெற்றுக்கொள்வதில் ஏற்பட்ட இடையூறுகள் காரணமாக இதன் புனரமைப்புப் பணிகளில் தாமதங்கள் ஏற்பட்டன.

இதனால் விவசாயிகள் மத்தியில் பல்வேறு கேள்விகள் எழுந்தன.


ஆனால், இரணைமடுக் குளத்தின் புனரமைப்புப் பணிகளில் ஏற்பட்ட தாமதங்கள் தீர்க்கப்பட்டுள்ளன.

விவசாயிகள் எவரும் அச்சப்படத்தேவையில்லை. 2016 - 2017 ஆம் ஆண்டு காலபோக செய்கை மற்றும் சிறுபோக செய்கைகளில் எவ்வித பாதிப்புகளும் ஏற்படாது. இது தொடர்பில் விவசாயிகள் எவரும் அச்சப்படத்தேவையில்லை என்றார். (2)

# மஹா கும்பாபிஷேகம்

(வவுனியா)

வவுனியா புளியங்குளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய மஹா கும்பாபிஷேக திருக்குட முழுக்கு பெருஞ்சாந்திப் பெருவிழா இன்று வியாழக்கிழமை காலை 6.50 மணிமுதல் 8.15 மணி வரையிலான சுபமுகூர்த்த வேளையில் ஆலய பிரதமகுரு, மஹோற்சவகுரு, ஆலய ஸ்தானிகர் சிவாகம சேகரர் சிவஸ்ரீ கே.பி.நந்தகுமார் குருக்கள் தலைமையில் இடம்பெறும். (2)





வவுனியா குருமன்காடு சந்தியிலிருக்கும் மகாகவி பாரதியாரின் திருவுருவச் சிலைக்கு முன்னால் நேற்று முன்தினம் காலை 9 மணியளவில் அன்னாரின் 95 ஆவது நினைவு தின நிகழ்வுகளை வவுனியா நகர வரியிறுப்பாளர் சங்கமும் தமிழ் விருட்சம் சமூக ஆர்வலருமான எஸ்.சந்திரகுமார் தலைமையில் இடம்பெற்றது. அன்னாரின் திருவுருவச் சிலைக்கு வவுனியா நகர சபை முன்னாள் உப பிதா சந்திரகுலசிங்கம், ஓய்வு நிலை கிராம உத்தியோகத்தர் வேலுப்பிள்ளை, சமூக சேவைகள் உத்தியோகத்தர்கள், சமூக ஆர்வலர்கள், சமூக சேவையாளர்கள், மாணவர்கள் ஆகியோர் மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

# பேருந்து தரிப்பிடத்தில் நிழற்குடை அமைக்காமையால் அவதியுறுகிறோம்

## கால்கடுக்கவே பேருந்துகளுக்காக காத்து நிற்கிறோம் - பயணிகள் ஆதங்கம்

(மல்லாவி)

மாங்குளம் ஆதார வைத்திய சாலைக்கு முன்பாகவுள்ள ஏ-9 வீதி பேருந்து தரிப்பிடத்தில் இருக்கை வசதிகளுடன் கூடிய நிழற்குடை அமைக்கப்படாமையால் பேருந்துகளில் பயணிப்பதற்கு வருகை தரும் நோயாளர்கள், வயோதிபர்கள், கர்ப்பிணித் தாய்மார்கள் உட்பட அனைத்துத் தரப்பினரும் கால்கடுக்க காத்து நின்று பேருந்துகளில் பயணிக்க வேண்டிய அவல நிலை காணப்படுவதாக பாதிக்கப் பட்ட பயணிகள் குற்றம் சாட்டுகின்றனர்.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

ஏ-9 வீதியிலுள்ள மாங்குளம் நகரமானது வடக்கு மாகாணத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் பயணிப்பதற்குரிய போக்குவரத்து வசதிகளைக் கொண்டதாகும்.

இங்கு தினமும் பல நூற்றுக் கணக்கான பயணிகள் இந் நகரத்தின் ஊடாக முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி, யாழ்ப்பாணம் உட்பட வவுனியா வரை சென்று அங்கிருந்து தென்பகுதி பிரதேசங்களுக்கும் பயணிக்கின்றனர்.

இந் நிலையில் இங்கு வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சின் நிதியொதுக்கீட்டின் மூலம் மாங்குளம் - முல்லைத்தீவு வீதி, மாங்குளம்- வெள்ளாங்குளம் வீதி ஆகிய வீதிகளின் ஊடாகப் பயணிக்கும் பயணிகளுக்காக மாங்குளம் நகரப் பகுதியில் இரண்டு பேருந்து தரப்பிட நிழற்குடைகள் அமைக்கப்பட்டுள்ளன.

ஆயினும் தலா 5 பேருக்கு மேல் அமர முடியாது.

நிழற்குடைகளைச் சுற்றி பாதுகாப்பு சுவர்கள் அமைக்கப்படாமையால் பயணிகள் வெயிலிலும் மழையிலும் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

இதேவேளை மாங்குளம் ஆதார வைத்தியசாலைக்கு முன்பாகவுள்ள பேருந்து தரிப்பிடத்தில் நிழற்குடை அமைக்கப்படாமையால் வைத்திய சாலைக்கு சிகிச்சை பெற வருபவர்கள் உட்பட வயோதிபர்கள், கர்ப்பிணித் தாய்மார்கள் உட்பட பல தரப்பினரும் மரங்களின் கீழ் தரித்து நின்று பயணிக்கும் அவல நிலை காணப்படுகின்றது.

எனவே வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சு, புதுக்குடியிருப்பு பிரதேச சபையினர் ஆகியோர் இதனைக் கவனத்தில் எடுத்து எதிர்வரும் மழை காலத்திற்கு முன்னர் மாங்குளம் ஆதார வைத்தியசாலைக்கு முன்பாக நிழற்குடை அமைத்து தருவதுடன் ஏற்கனவே வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சினால் அமைக்கப்பட்டுள்ள நிழற்குடைகளை மழையிலும் வெயிலிலும் பாதுகாப்பான முறையில் இருப்பதற்குஅமைத்துத் தருமாறு பாதிக் கப்பட்டுள்ள பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-15)



நெடுங்கேணி பட்டிக்குடியிருப்பு பாவல்குள முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் அண்மையில் இடம்பெற்றபோது... (படம்:- மல்லாவி செய்தியாளர்)

# இராட்சத புள்ளி சுறா இறந்த நிலையில் கரை ஒதுங்கியது

(மன்னார்)



மன்னார் பாம்பன்அருகே குந்து கால்கடற் கரைகிராமத்தில் இறந்த நிலையில் இராட்சத புள்ளிசுறாஒன்று நேற்று புதன்கிழமை காலை கரை ஒதுங்கியது. இதனைக் கண்ட கிராம மக்கள் வனத்துறையினருக்கு தகவல் வழங்கினர்.

இதனையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த வனத்துறை அதிகாரிகள் இறந்த நிலையில் கரையொதுங்கிய புள்ளி சுறாவை உடற்கூறு சோதனை செய்து மணலில் புதைத்தனர்.

உலகிலேயே மிக அரிய வகை கடல் வாழ் உயிரினங்கள் அதிகம் வசிக்கும் பகுதி மன்னார் வளைகுடா கடற் பகுதியாகும். இந் நிலையில் குந்துகால் கடற்கரையில் சுமார் ஆயிரத்து 500 கிலோ எடையும் 17 அடி நீளமும் கொண்ட அரிய வகை புள்ளி சுறா ஒன்று இறந்த நிலையில் கரை ஒதுங்கியது.

இறந்த புள்ளி சுறா நோய் வாய்ப்பட்டு அல்லது பெரிய அளவிலான சரக்குக் கப்பலின் எஞ்சினில் அடிபட்டு இறந்திருக்கலாம் என வனத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

மேலும் இச்சுறா ஆழ்கடல் பகுதியில் வசிக்கக் கூடியது எனவும் சங்கு வகைகள் மற்றும் அதிக முள் பகுதி கொண்ட இன மீன்களை உணவாகக் கொண்டு வாழும் தன்மையுடையது என அதிகாரிகள் தெரிவித்தனர்.

அரிய வகை இராட்சத புள்ளி சுறா இறந்த நிலையில் கரையொதுங்கியதை அந்தப் பகுதி பொது மக்கள், சிறுவர்கள் மற்றும் மீனவர்கள் அதிசயத்துடன் பார்த்துச் சென்றமை குறிப்பிடத்தக்கது. (2)

# பிரச்சினைகளை தெரியப்படுத்துமிடத்து உடனடியாக நாம் கவனத்தில் கொண்டு நடவடிக்கை எடுப்போம்

## பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர தெரிவிப்பு



(வவுனியா)

**வடபகுதியில் சட்டவிரோத சமூக விரோத குற்றச் செயல்கள் அதிகரித்துள்ளன. இங்கு இடம்பெறும் குற்றச் செயல்களை தடுக்க தமிழில் முறைப்பாடு செய்யக்கூடிய விசேட செயற்றிட்டம் அமுல்படுத்துவதனூடாக குற்றச் செயல்களையும் சமூக விரோதச் செயல்களையும் கட்டுப்படுத்த முடியும் என பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.**

வவுனியா பிரதிபொலிஸ்மா அதிபர் காரியாலயத்தில் தமிழ்மொழி மூலம் தொலைபேசியில் முறைப்பாடு செய்யும் திட்டத்தை அண்மையில் ஆரம்பித்து வைத்த போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

வடபகுதியை நான் எனது இரண்டாவது ஊராக கருதுகின்றேன். நாங்கள் தமிழ், முஸ்லிம் மக்களை மிகவும் நேசிக்கின்றோம். தமிழ் மொழியில் முறைப்பாடு செய்யும் இந்த தொலைபேசி இலக்கத்தின் ஊடாக அதாவது இந்த சேவையின் மூலம் நீங்கள் உங்கள் பிரச்சினைகளை பொலிஸ்மா அதிபருக்கு உங்கள் தாய்மொழியான தமிழ் மொழியிலேயே முன்வைக்கலாம். எதிர் வரும் காலங்களில் இத்திட்டத்தை நாடு முழுவதும் விரிவுபடுத்தவுள்ளோம். உங்களது பிரச்சினையை தீர்க்க எனது உதவிதேவைப்பட்டால்எனது தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்பு கொள்ள முடியும் உதவி வழங்க நான் எவ்வேளையிலும்தயாராக இருக்கின்றேன். வடபகுதியில் சட்டவிரோத, சமூக விரோத, குற்றச் செயல்கள் அதிகரித்துள்ளன.

தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த சேவையின் ஊடாக உங்கள் பகுதிகளில் உள்ள பிரச்சினைகளை தெரியப்படுத்துமிடத்து உடனடியாக அவை தொடர்பில் நாம் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுப்போம். இதன் மூலம் குற்றச் செயல்களையும், சமூக விரோதச் செயல்களையும் கட்டுப்படுத்த முடியும். இது தவிர கடந்த காலத்தில் பொலிஸாருக்கும், மக்களுக்கும் இடையில் விரிசல் ஏற்பட்டுள்ளது. இதன் மூலம் அமைதி, நல்லிணக்கம், சகவாழ்வு என்பவற்றை ஏற்படுத்தக் கூடியதாகவும், பொது மக்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் நட்புறவை ஏற்படுத்தக் கூடியதாகவும் இது அமையும் எனவும் தெரிவித்தார்.

இதேவேளை, இத்திட்டத்தின் மூலம் வவுனியா மாவட்ட பொதுமக்கள் 076 622 4949 என்ற இலக்கத்துடனும் மன்னார் மாவட்ட பொதுமக்கள் 076 622 6363 என்ற இலக்கத்துடனும் தொடர்பு கொண்டு 24 மணி நேரமும் தமிழ் மொழியில் உதவிகளையும் முறைப்பாடுகளையும்செய்துகொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டது. (2)




# வங்கியொன்றில் வைப்பு செய்யப்பட்ட பணம் நூதன முறையில் திருட்டு

## உரிமையாளர் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு

அரச வங்கி ஒன்றில் வைப்பு செய்யப்பட்டிருந்த மூன்று இலட்சத்து 28 ஆயிரம் ரூபாய் பணம் நூதன முறையில் திருடப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் பொலிஸார் மேலும் தெரிவித்ததாவது.

வவுனியாவில் இயங்கி வரும் அரசாங்க வங்கி ஒன்றில் தோணிக்கல் பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவர் மூன்று இலட்சத்து 28 ஆயிரம் ரூபாய் பணத்தினை வைப்புச் செய்துள்ளார்.

கடந்த பல நாட்களாக அப் பணம் வங்கியில் இருந்த நிலையில் கடந்த 9 ஆம் திகதி வங்கி நடவடிக்கை ஒன்றுக்காக சென்ற போதும் அப்பணம் வங்கிக் கணக்கில் இருந்துள்ளது.

மீண்டும் கடந்த 12 ஆம் திகதி வங்கி அட்டையைக் கொண்டு பணத்தை பெறுவதற்கு தன்னியக்க இயந்திரத்தில் செலுத்திய போது குறித்த கணக்கில் பணம் இல்லை என தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து குறித்த வங்கி முகாமையாளரை தொடர்பு கொண்ட போது குறித்த கணக்கில் இருந்து வங்கி அட்டை மூலம் கொழும்பு, அநுராதபுரம் ஆகிய பகுதிகளில் உள்ள தன்னியக்க இயந்திரம் மூலம் பணம் முழுமையாக எடுக்கப்பட்டு விட்டதாக தெரிவித்துள்ளார். இதனையடுத்து குறித்த பெண் தனது வங்கிப்புத்தகம், வங்கி அட்டை என்பன தனது பாதுகாப்பில் இருந்த போது எவ்வாறு பணம் வங்கியில் இருந்து எடுக்கப்பட்டது எனவும், தனது பணத்தை மீட்டுத் தருமாறும் வவுனியா பொலிஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை முறைப்பாடு செய்துள்ளார். அது தொடர்பான விசாரணைகளை தாம் மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இதேவேளை, மோசடியான வகையில் வேறு வங்கி அட்டை ஒன்றை பயன்படுத்தி குறித்த பணம் களவாடப்பட்டுள்ளதா என்ற சந்தேகத்தில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகிறார்கள். (2-250)

# புலிகள் இயக்கத்தில் இருந்த காலத்தில் தமிழினிக்கு புற்றுநோய் இருக்கவில்லை உண்மைக்கு புறம்பான தகவலை வெளியிடாதீர்

## தாயார் உருக்கமான வேண்டுகோள்

(பரந்தன்)

எனது மகள் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தில் இருந்த காலப்பகுதியில் புற்றுநோய் இருக்கவில்லை. இத்தகவல் உண்மைக்கு புறம்பானது என்கிறார் அவரது தாயார் சுப்பிரமணியம் சின்னம்மா.

விடுதலைப் புலிகளின் மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளராக இருந்த தமிழினியின் தாயாருடன் நேற்று முன்தினம் முற்பகல் 11 மணியளவில் ஊடகவியலாளர்கள் இணைந்து பரந்தன் சிவபுரத்திலுள்ள அவரது இல்லத்தில் நேர்காணல் ஒன்றை நடத்தினர்.

இதன்போது அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இருக்கும் போது எனது மகள் தமிழினிக்கு புற்றுநோய் இருந்ததாக முன்னாள் போராளி ஒருவர் வவுனியாவில் நடைபெற்ற நல்லிணக்கப் பொறிமுறைக்கான சாட்சியம் அளிக்கும் நிகழ்வில் சாட்சியம் அளித்ததனை காணொலிகள் மூலமாகப் பார்த்தேன்.

அத்துடன் வடக்கு மாகாண சபை அமைச்சர் ஒருவர் கூறியதனையும் தொலைக்காட்சி வாயிலாகவும் பார்வையிட்டேன் அவ்வாறு எனது மகளுக்கு புற்றுநோய் இருக்கவில்லை என நான் கூறுகின்றேன். அதனை அவர்களால் நிரூபிக்க முடியுமா என கேள்விகளை தொடுத்தார்.

அவ்வாறு ஏற்கனவே அவருக்கு புற்றுநோய் இருந்த விடயம் இதனைத் தெரிவித்த அவர்களுக்கு தெரியும் என்றால் ஏன் அதனை எனக்கு முதலே கூறவில்லை என்ற பல கேள்விகளைத் தொடுத்திருந்தார்.

அதனை தொடர்ந்து அதற்கு நீங்கள் உங்கள் மகள் தமிழினி விச ஊசி ஏற்றப்பட்டுத்தான் இறந்தார் என கூறுகிறீர்களா என செய்தியாளர் ஒருவர் தொடுத்த கேள்விக்குப் பதிலளித்த அவர்,

நான் எனதுமகள் விச ஊசி ஏற்றப்பட்டு இறந்தாரா அல்லது யுத்தத்தின் பின்னர் புற்றுநோய் வந்துதான் இறந்தாரா என வாதிட வரவில்லை. ஆனால் தமிழினிக்கு விடுதலைப்புலிகள் காலத்தில் புற்றுநோய் இருந்தது என்பதனை ஏற்றுக் கொள்ள என்னால் மட்டுமல்ல யாராலும் முடியாது. ஏனெனில் தமிழினிக்கு விடுதலைப்புலிகள் காலத்தில் புற்றுநோய் இருந்தது என்ற கருத்தைப் பார்த்தால் 2006 ஆம் ஆண்டிற்கு முற்பகுதியில் இருந்திருக்க வேண்டும். அவர் இறந்தது 2015 ஆம் ஆண்டு. புற்றுநோயால் பாதிக்கப்பட்ட ஒருவர் பூரண சிகிச்சை உரிய முறையில் பெற்றால் மாத்திரமே அக் கொடிய நோயிலிருந்து தப்பித்துக் கொள்ள முடியும். சில வேளைகளில் அதுவும் பயனளிப்பதில்லை. சிகிச்சை எதனையும் பெற்றுக் கொள்ளாத தமிழினி ஏற்கனவே புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருந்தால் எவ்வாறு இவ்வளவு வருடக்கணக்கில் உயிருடன் இருந்தார் என கேள்வி ஒன்றையும் எழுப்பி இருந்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசியல் இலாபங்களுக்காக எங்களைப் பாவிக்காதீர்கள். எனது மகள் இறந்து விட்டாள். அதனை அப்படியே விட்டுவிடுங்கள். உண்மைக்குப் புறம்பான செய்திகளை வெளியிடாதீர்கள் எனக் கேட்டுக் கொண்டார்.

எனது மகள் தொடர்பில் பொய்யான தகவல்களை வெளியிட்டு உடைந்து போயுள்ள மனங்களை மீண்டும் மீண்டும் உடைக்காதீர்கள் எனவும் கேட்டுக் கொண்டார். (2-312)

# போருக்குப்பின்னர் புலம்பெயர் தமிழ் உறவுகளின் உதவிகள் முறையாக ஒருங்கிணைக்கப்படவில்லை

## விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவிப்பு



எமது விடுதலைப் போராட்டத்தைப் புலம்பெயர்ந்து சென்ற எமது தமிழ் உறவுகளே பொருளாதார ரீதியாகத் தாங்கி நின்றார்கள். அவர்கள் இப்போதும் இங்குள்ளவர்களுக்கு ஏராளமான உதவிகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள். போராட்ட காலத்தில் அவர்களது உதவிகள் ஒருங்கிணைக்கப்பட்டிருந்தது. ஆனால், போருக்குப் பின்னர் புலம்பெயர் தமிழர்களின் உதவிகள் முறையாக ஒருங்கிணைக்கப்பட வில்லையென்று வடக்கு விவசாய அமைச்சர் பொ. ஐங்கரநேசன் தெரிவித்திருக்கிறார்.

வவுனியாவில் கால்நடை உற்பத்தி சுகாதாரத்திணைக்களத்தினால் பயனாளிகளுக்கு நல்லினப் பசுக்கன்றுகள் வழங்கி வைக்கும் நிகழ்ச்சி நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அமைச்சர் பொ.ஐங்கரநேசன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

மத்திய அரசின் அறிவுறுத்தலின் பிரகாரம் எமது திணைக்களங்களினால் தனிநபர்களின் வாழ்வாதாரத்துக்காகச் செய்யப்படும் உதவிகளை மானிய அடிப்படையிலேயே செய்ய வேண்டியுள்ளது. இது ஏனைய மாகாணங்களுக்குப் பொருந்தலாம். ஆனால், வடக்கு போரினால் பாதிக்கப்பட்ட ஒரு மாகாணம். போரினால் எல்லாவற்றையும் இழந்து நிர்க்கதியாக நிற்கும் எமது மக்களுக்கு, அவர்கள் ஓரளவுக்ேனும் பாதிப்புகளில் இருந்து மீளும் வரையில் மானிய முறையில் இல்லாமல், பணத்தை அறவிடாமல் உதவிகளைச் செய்வதே நியாயமானது. ஆனால், அரசாங்கத்தின் குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதியில் அவ்வாறு செய்ய முடியாது.

வடக்கு முதலமைச்சர் நிதியமொன்றை உருவாக்குவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டாலும் இன்னமும் கைகூடவில்லை. எமது முதலமைச்சர் நீதியரசர் விக்னேஸ்வரன் மீது கொண்டிருக்கும் நம்பிக்கை காரணமாக அந்நிதியத்துக்குப் புலம் பெயர்ந்து சென்ற எமது உறவுகள் நிதியை அனுப்பி வைக்கத் தயாராக இருக்கிறார்கள். அது சாத்தியமாகும்போது போரினால் பாதிக்கப்பட்ட எமது மக்களுக்கு அதிகமான உதவிகளைச் செய்ய முடியும் என்றும் தெரிவித்துள்ளார்.

கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் பணிப்பாளர் சி.வசீகரனின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் மாகாண சபை உறுப்பினர்கள் ஜி .ரி. லிங்கநாதன், ம.தியாகராசா, இ.இந்திராஜா, செ.மயூரன், அனிகாமிகே ஜெயதிலக ஆகியோரும் கலந்து கொண்டிருந்தார்கள். (2-250)

# அன்னதானக் கந்தனுக்கு இன்று தேர்த்திருவிழா



இலங்கைத் தீவின் வடபால் அமைந்துள்ள வரலாற்றுச் சிறப்பு மிக்க முருகன் ஆலயங்களில் ஒன்றான ஆற்றங்கரை தன்னில் வீற்றிருந்து தன்னை அண்டியோர் பசிபோக்கும் தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தின் துர்முகி வருட 2016 ஆம் ஆண்டிற்குரிய மஹோற்சவத்தின் சிகரம் என்று சொல்லப்படுகின்ற தேர்த்திருவிழா ஆவணி 30 ஆம் திகதி (15-09-2016) இன்று வியாழக்கிழமை காலை 7 மணிக்கு வெகு சிறப்பாக இனிதாக எளிதாக இடம்பெறுகின்றது. முருகன் என்றால் அழகன். அழகன் என்றால் முருகன். அந்த வகையில் சந்நிதியில் வேல் வடிவில் முருகன் எழுந்தருளி அருளாட்சி செய்கின்றார். வள்ளிக்கொடி முனைந்தெழும் அற்புத நிகழ்வுகளுடன் கொடியேறத் தொடங்கும் மஹோற்சவம் தொடர்ந்து பதினாறு நாட்கள் இடம் பெற்று மௌன பூஜையுடன் இனிதே நிறைவு பெறும். சந்நிதியான் மஹோற்சவத்தைப் பொறுத்தவரை இங்கு கொடித்தம்பம் அமைந்திருக்கவில்லை. ஆனால் வருடாந்த உற்சவத்தை வெளிப்படுத்தும் அடையாளமாக தாழாகவே முனைந்தெழும் வள்ளிக்கொடியின் தோற்றப்பாடும் அதனைத் தொடர்ந்து பூர்வபட்ச பிரதமை திதி கூடும் வேளையில் கொடியேற்றச் சடங்குகளும் இடம்பெறும். வைரவப் பெருமானுக்கு காப்புக் கட்டுதலுடன் பிள்ளையார் பூஜை, வேலவர் பூஜை என்பன நிகழ்ப்பெற்று கொடியேற்றத்திற்கான பூஜை இடம்பெறும்.

ஆலயவாசலில் மூலஸ்தானத்தை நோக்கியவாறு அமர்ந்துள்ள நந்திக்கு முன்பாக வைக்கப்படும் கேடகம் இக்கொடியேற்ற வைபவத்தில் பிரதான இடத்தைப் பெறுகின்றது. கலச பூஜை நிறைவடைந்ததும் வேற்பெருமானுக்கு பூஜை இடம்பெறும். இவ்வாறு நடைபெறும் பூஜை சடங்குகளைத் தொடர்ந்து எழுந்தருளி வேலவருக்கும் பூஜை இடம்பெற்று அதே கேடகத்தில் வேலவர் வீதி உலா வருவார். அப்போது ஆலயத்தின் முகப்பில் சேவற்கொடி ஏற்றப்பட்டு பழம் பெரும் பாரம்பரிய சடங்குகளும் சந்நிதியான் கொடியேற்றத் திருவிழாவிலன்று இடம்பெறும்.

அழகே உருவான முருகன் இன்று வேல் வடிவில் பக்தர்களுக்கு காட்சி கொடுத்து அழகான தேரிலே ஆரோகணிக்கும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும்.


"அருவமும் உருவமாகி அநாதியாய் பலவாய் ஒன்றாய் பிரமமாய் நின்ற சோதிப்பிழம்பதோர் மேனியாகக் கருணைகூர் முகங்களாறும் கரங்கள் பன்னிரண்டும் கொண்டே ஒரு திருமுருகன் வந்தான் உதித்தனன் உலகமுய்ய"

என்ற கச்சியப்ப சிவாச்சாரியாரின் திருவாக்குக்கமைய ஆறுகுழந்தைகளாக சரவணப் பொய்கையிலே தோன்றி அம்பிகையான உமையவள் பரிவோடு அரவணைக்க பன்னிரண்டு கைகளுடன் ஆறுமுகப் பெருமானாக ஐயன் அவதாரம் செய்தான் என்பது பூர்வீக வரலாறு. அந்த ஆறுமுகன் இந்த ஆற்றங்கரையிலே அருள் வேல் வடிவில் எழுந்தருளி வீற்றிருந்து தன்னை வழிபடும் அடியார்களின் துன்ப துயரங்கள் நீக்கி வல்வினை அகற்றி வேண்டுவார் வேண்டும் வரங்களை ஈந்து அருள் ஆட்சி புரிந்து கொண்டிருக்கின்றான்.

மற்றெல்லா முருகன் கோவில்களை விட சந்நிதியில் மட்டும் அடியார்கள் கூட்டம் அலைமோதுவதற்குக் காரணம் மூலஸ்தானத்தில் இருக்கின்ற ஓர் அருள் சக்தி. அதாவது சொல்ல முடியாத இன்பத்தை அள்ளிச் சொரியும் காந்த சக்தி இருக்கின்றது.

இன்று சந்நிதியான் தேர்த்திருவிழாவிலே லட்சோபலட்சம் மக்கள் கலந்து கொண்டு இருக்கின்றார்கள். எங்கு பார்த்தாலும் அடியார்கள் கூட்டம். பக்தர்களின் அரோகரா ஒலி வானைப் பிளக்கின்றது. பஜனைகள், காவடிகள், தூக்குக் காவடிகள் ஒருபுறம். ஆண்கள் அங்கப் பிரதிஷ்டை செய்தும் பெண்கள் கற்பூரச் சட்டி ஏந்தியும் அடி அளித்தும் தங்கள் நேர்த்திக்கடன்களைச் செலுத்திக் கொண்டிருக்கின்றார்கள். தேர்த்திருவிழா அழித்தல் தொழிலைக் குறிக்கும். எனவே எம்மைப்பற்றி உள்ள ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களையும் வேரோடு அழித்து ஆன்ம ஈடேற்றம் பெறுவதற்காக இன்று முருகன் தேரேறி வருகின்றான். தொண்டைமானாறிலே மூழ்கி முருகன் உள்ளன்போடு வணங்கினால் தீராத நோய்கள் எல்லாம் தீர்ந்து வேண்டிய வரங்களை முருகன் அள்ளித் தருவான் என்று நம் முன்னோர்கள் கூறுகின்றார்கள். வாழ்த்த வாயும் நினைக்க மட நெஞ்சும் தாழ்த்தச் சென்னியும் தந்தது எதற்காக? அந்த அழகன் முருகனை வாயார நினைந்து பாடி வேண்டும் வரங்களைப் பெறுவதற்காகவே. துர்முகி வருட நல்லாட்சி அரசிலே நெருங்கி வருகின்ற சமாதானத்தீர்வு எமது நாட்டு மக்களுக்கு நிறைவான தீர்வைத் தர வேண்டும் என்றும் இன்று தேரிலே ஆரோகணிக்கும் சந்நிதி முருகன் தன்னை வழிபட வரும் பக்தர்களுக்கு வல்வினை அகற்றி நல்வாழ்வு அளித்து நாட்டிலே சாந்தி, சமாதானம் என்றும் நிலவ அருள் பாலித்து இந்த மண்ணிலே எல்லா மக்களும் இன்புற்று மண்ணிலே நல்ல வண்ணம் வாழ அருள்பாலிப்பாராக!

கலாவித்தகர் திருமதி மலர்விழி - கனகசபை
உதவிக் கல்விப்பணிப்பாளர் (அழகியல்)
தீவக கல்வி வலயம்,
வேலணை,



## அருளாட்சி நல்கும் சந்நிதி வேலன்

ஆற்றங்கரையோரம் ஆனைமுகன் தம்பியாய்
வீற்றிருந்து காட்சிதரும் வேலவனை- போற்றிநிதம்
சந்நிதி வேலா சரவணனே என்றோத
எந்நாளும் காப்பான் இனிது.
அன்னக் கந்தனாய் ஆற்றோரம் அமர்ந்திருந்து
அருளாட்சி புரியும் ஆறுமுக அப்பனே
உன்னடியார் உன் நாமத்தை ஒரு தரம் சொன்னாலே
உள்ள வருத்தமெல்லாம் ஓடோடி விடுமையா
எந்நாளும் எங்களைக் காத்து இரட்சிக்கின்ற
எழில் வேலவனே எங்கள் குல தெய்வமே
சந்நிதி வேலனே சாந்த சொரூபனே சந்ததமும்
எமைக்காத்தருள் புரிவாயே.

வே.இராமர்-கைதடி நாவற்குழி

## எம் வாழ்வு சிறந்திடச் செய்வாய்!

கார்த்திகைப் பெண்கள் வளர்த்ததனாலே
கார்த்திகேயன் எனும் நாமம் கொண்டவா!
போர் செய்து சூரரை வதஞ்செய்த வீரா!
போற்றித் தொழுகிறோம் உன்பாதமே ஐயா!
நேர்த்திகள் வைத்தோம்! நடராஜன் மைந்தா!
நெஞ்சம் நிறைந்திட நல்வழி நல்குவாய்!
சீர் பெற்று எம்வாழ்வு சிறந்திடச் செய்வாய்!
செல்வச் சந்நிதி தனிலுறை சண்முகா!

ப. மகேந்திரதாசன்
நாயன்மார்கட்டு

## தேரூரும் இந்நாள் பொன்னாளே

ஆற்றோர கந்தவுன் ஆலரசும் பூவரசும்
உன் கரத்து வேலோடு ஊர்ந்துவரும் தேரழகும்
போற்றியுனை பாடுகின்ற பக்திமிகு பாடல்கள்
பேரொலியாய் செவிசேரும் இசையோடு ஆடல்கள்
ஊற்றாகும் உன்னருளும் உளம்நிறைந்த ஆறுதலும்
ஆண்டிலே ஆவணியில் ஆடிவரும் காவடியும்
காற்றிசையும் ஓடி வரும் நாயகனே ஆறுமுகா
நல்லருளை தாராயோ நதிக்கரையின் வேலோனே.

கவிப்பாரதி கே.ஆர்.திருத்துவராஜா

## தேரேறிவருகிறான் சந்நிதி வேலவன்

ஆற்றங்கரைதனில் வீற்றிருக்கும் சந்நிதி வாழ் முருகா!
அருள் வேண்டி வருவோர்க்கு வரமருளும் முருகா!
அடியவர்க்கு அமுதளிக்கும் அன்னதானக் கந்தா!
பச்சை மயில் ஏறி வரும் பாலமுருகா!
பரமனுக்கு உபதேசம் செய்த பாலமுருகா- எம்
தலைமைகளுக்கு உபதேசம் செய்த பாலமுருகா!
தேவர் சிறை மீட்டுக் காத்த வேலவா
எம்மக்களை இனியும்அல்லல்பட விடாதே ஆறுமுருகா!
தமிழர் குலம்தனைக் காத்திட- இன்று
தேரேறி வருகின்ற சந்நிதி வேலவன்

நயினை விசு-இராசநாயகம்

## சந்நிதி முருகன்

செல்வச் சந்நிதி வேலனே ஈசனே முருகா
செல்வம் தந்து காத்திடுவாய் கந்தனே வேலா
பார் போற்றும் பாலனே பார்வதி பாலா
பார்ப்பனார் வேதம் ஓதும் கார்த்திகை வேலா
அடியவர் குறைதனைப் போக்கிடும் ஈசா
அன்பர்க்கு அன்பான அப்பனே முருகா
தந்தைக்கு உபதேசம் செய்தவா தேவா
தீர்வொன்று பெற்றிட அருள்புரி ஈசா
வேல் கொண்டு வினை தீர்க்கும் ஏந்தலே வீரா
வேண்டுவார் வேண்டுவதை ஈந்திடும் தேவா

## அழகனே முருகா

பார்ப்பதற்கு அழகான முருகனே வேலா
பார் போற்றும் ஈசனே தேவாதி தேவா
சூரனை உன்பாகம் கொண்டவனே பாலா
சூழ்ச்சிகள் செய்தாலும் அடக்குவாய் முருகா
வள்ளி தெய்வயானை மணவாளக் கோலா
வரம் தந்து காத்தருள்வாய் ஈசனே கடம்பா
சேவற்கொடி உடையவனே சேயே தேனே
செல்வச் சந்நிதி வீற்றிருக்கும் அழகா பாலா
வேல் கொண்டு வினை தீர்க்கும் ஈசனே கந்தா
வேண்டுவார் வேண்டுவதை ஈந்திடுவாய் கோவே.

நா.சண்முகரத்தினம்
புத்தூர்


செல்வச்சந்நிதி தேர்த் திருவிழா
சிறப்புற வாழ்த்துகின்றோம்
காலங்கள் மாறலாம். அதுபோல் நாமும்.
புதிய பழக்க வழக்கங்கள், அனுபவங்கள்,
அங்கீகாரங்கள், பொறுப்புக்கள்,
இந்த மாற்றங்கள் எல்லாம் வளர்ச்சியின் ஒரு பாகம்.
இருப்பினும், இப்படியொரு மாற்றங்கள்
நமக்குள் இருந்தாலும்
சில பொருட்கள் நம்மிடையே
என்றுமே மாறுவதில்லை.
எத்தனையோ மாற்றங்களிலும்
ஒன்று மட்டும் என்றுமே
மாறாது. உறவுகள்...
தங்கமான உறவு
இப்பொழுது
புதிய பொலிவுடன்
நியூ உதயா ஜுவல்லர்ஸ்
தங்கப்பவுண் நகை வியாபாரம்
Thank You
NEW Uthayaa JEWELLERS
021 222 2031
newuthayajwellrs@gmail.com
No. 91, Power House Road, Jaffna
Newuthaya Jewellers
uthaya.new



# செல்வச்சந்நிதியானுக்கு இன்று தேர்

சிறப்புமலர் - 15.09.2016






தொண்டைமானாறின் மீது வந்த பாலகனே!
செல்வச்சந்நிதியில் வீற்றிருக்கும் வேலவனே!

## E.S.P. நாகரத்தினம் சக நிறுவனம்

E.S.P Nagaratnam & Co

52,54, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

தொ.பே: 021 222 3096, 021 221 7277

அமெரிக்கன் குடிநீருக்கான யாழ்.மாவட்ட ஏகவிநியோகஸ்தர்




## கிருபா KIRUBA LEARNERS லேணர்ஸ்

KIRUBA LEARNERS

No. 1 Driving Training School IN NORTH

Govt.Approved A Grade Driving Training School



அரச அங்கீகாரம் பெற்ற A தர கனரக சாரதிப் பயிற்சிப்பாடசாலை

செல்வத்தை அள்ளியே செழிப்புறத் தந்திடும் செல்வச்சந்நிதியில் உறைந்துள்ள முருகா!

திறமையான சாரதிகள் ஆக வேண்டுமா? கிருபா லேணர்ஸ் உடன் இணையுங்கள்

- தவணைமுறையில் கட்டணம் செலுத்த முடியும்.
- இலவச எழுத்துப் பரீட்சை வகுப்புக்களும்.
- வாகன தொழில்நுட்ப வகுப்புக்களும் உண்டு.
- பரீட்சைக்கான வீதி ஒழுங்கு நூல், மாதிரிவினாத்தாள் இலவசமாக வழங்கப்படும்.
- விரைவில் எழுத்துப் பரீட்சையில் சித்தியடைய விசேட வீதி ஒழுங்கு வகுப்புகள்.
- எழுத, வாசிக்க தெரியாதவர்களுக்கு வாய்மொழிமூலப் பரீட்சையில் தோற்றுவதற்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புகள் நடைபெறும்.
- விரைவில் எழுத்துப் பரீட்சைக்கு ஒழுங்கு செய்து Learner Permit பெற்றுத்தரப்படும்.
- சாரதி தெரிந்து கொள்ள வேண்டிய வாகனம் சம்பந்தமான அடிப்படைக்கல்வி மற்றும் சாரதிக்கான சிறந்த பயிற்சி வழங்கப்படும்.
- License விண்ணப்பிக்கும் ஒழுங்குகளும் எங்கள் காரியாலயத்திலே செய்துதரப்படும்.
- உடைந்த, தொலைந்த, தெளிவில்லாத License புதுப்பிக்க ஒழுங்கு செய்துதரப்படும்
- சர்வதேச லைசன்ஸ் International License பெற்றுக்கொள்ளக்கூடிய வசதி உண்டு.



### சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்கு தேவையான ஆவணங்கள்

- ★ அடையாள அட்டை
- ★ பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் (மூலப்பிரதி)
- ★ திருமண அத்தாட்சிப்பத்திரம் (பெண்கள் மட்டும்)
- ★ சாரதி அனுமதிப்பத்திரம் (வைத்திருந்தால்)
- ★ தேசிய போக்குவரத்து வைத்திய நிறுவகம் வழங்கும் மருத்துவச் சான்றிதழ்



| | | | | | |
|---|---|---|---|---|---|
| A9 வீதி கிளிநொச்சி (கச்சேரி முன்பாக) 021 228 5505, 076 767 6770 | 216, A9 வீதி, வவுனியா (வசந்தி திரையரங்கம் முன்பாக) 024 222 7777, 077 710 0444 | 94, பிரதான வீதி, மன்னார். 023 225 1656, 077 847 2732 | பிரதான வீதி, (பொலிஸ் நிலையம் முன்பாக) நெல்லியடி. 021 300 6550, 071 454 6957 | 36, கச்சேரி நல்லூர் வீதி (கச்சேரி அருகாமை), யாழ்ப்பாணம். 021 222 6699, 076 722 5292 | பருத்தித்துறை வீதி (ஓம் பிளாசா), ஆவரங்கால். 021 222 6688, 077 242 2622 |
| 227/6, கே.கே.எஸ் வீதி, சுன்னாகம் (மதவடி அண்மையில்). 021 224 2022, 077 723 8600 | புளியடிச்சந்தி, முல்லைத்தீவு, விசுவமடு. 021 320 1515, 071 454 6955 | நாச்சிக்குடா சந்தி, மன்னார் வீதி, முழங்காவில். 021 300 6544, 071 454 6955 | வாடியடிச் சந்தி பூநகரி. 021 320 1818, 070 333 7171 | கண்டி வீதி, சாவகச்சேரி. (நீதிமன்றம் அண்மையில்) 021 227 0700, 071 454 6957 | முதலாம் கட்டைச்சந்தி, பருத்தித்துறை. 021 492 3201, 071 454 6958 |

தலைமைக் காரியாலயம்

இல. 226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

077 722 5292

021 222 4353 - 021 492 3200

# செல்வச்சந்நிதியானுக்கு இன்று தேர்

சிறப்புமலர் - 15.09.2016


அரச அங்கீகாரம் பெற்ற "A" தர சாரதிப் பயிற்சிப் பாடசாலை

நியூ நெல்சன் லேணர்ஸ்

New Nelson Learners

- சாரதி பயிற்சிகள் எமது அலுவலகத்தில் இருந்து ஆரம்பிக்கப்படும்.
- சகல வாகனங்களுக்கும் அனுபவம் மிக்க சாரதிகளால் சிறந்த முறையில் பயிற்றுவித்து மிக விரைவாக சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொடுக்கப்படும்.
- எழுத்துப் பரீட்சையில் சித்தியடைய விசேட வகுப்புகள்.
- அதிகூடிய பயிற்சி நேரங்கள். அதிகூடிய பயிற்சிக் காலங்கள். தவணைமுறைக் கட்டணங்கள்.
- வீதி ஒழுங்கு நூல் இலவசமாக வழங்கப்படும்.
- நவீன வாகனங்களில் வாகனப் பயிற்சிகள்.

அன்னதானக் கந்தனே பக்தர் குறைகள் தீர்த் திடும் சந்நிதி முதல்வனே!

கிளைகள்

இல.97 A, பருத்தித்துறை வீதி, நெல்லியடி. 021 226 1393, 077 111 3382

இல.89, கண்டி வீதி சுண்டுக்குளி யாழ்ப்பாணம். 021 222 4527 077 358 1916

பஸ் நிலையம், சுன்னாகம் 077 715 0097 021 492 3732

சீரணிச் சந்தி, சண்டிலிப்பாய். 021 225 6955 077 794 2312/ 071 735 8440

காளிகோயில் வீதி, சாவகச்சேரி 021 492 3114 077 761 1686

பிரதான வீதி, வல்வெட்டித்துறை, 077 557 3711 021 492 3733



ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ

கண் குளிரக் காட்சியது தரும் வடி வேலவனே! காக்கும் திருமாளின் மருமகனே முருகனே!

மீண்டும் யாழ் நகரில் புதுப்பொலிவுடன்

ரூபி ஜுவல்லரி

(ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு 1982)

தங்கத்தை தரம்பார்க்கும் நவீன இயந்திரம் எம்மிடம் உண்டு.


இங்கு 916 தங்க நகைகள் Ready-Made ஆக வாங்கவோ அல்லது Order கொடுத்து செய்து கொள்ளவோ முடியும்.

227 – 229, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

021 221 6919 / 077 734 4074


www.rubejewellery.com

உரிமையாளர்: நந்தகோபால் கஜரூபன்




2016!

எமது ஸ்தாபனத்திற்கு யாழ் நகரிலோ இலங்கையில் வேறு எப்பாகத்திலோ கிளைகள் கிடையாது.





Are you looking for ideal printing works ?

We Print Miracles




உங்கள் தேவைகளை எமது தேர்ச்சி மிக்க வடிவமைப்பாளர்களால் உங்களுக்கென்று தனித்துவமாக வடிவமைத்து எமது உயர்தர பிறிண்டிங் சேவையினை பெற்றுக் கொள்ளுங்கள்.

ideaS PRINTERS

All kind of Offset Printing & Digital Printing

936A, K.K.S Road, Naachimar Kovilady, Jaffna. 021 222 7788 / 077 636 6860

# செல்வச்சந்நிதியானுக்கு இன்று தேர்

சிறப்புமலர் - 15.09.2016

# Danuska Hotel & Restaurant

யாழ் நகரில் இருந்து மானிப்பாய் வீதியில் 3ம் கட்டை ஆனைக்கோட்டையில் சகல வசதிகளுடனும் மிக மிகச் சுத்தமான உணவகமாக உயர்தர சேவையை வழங்கிக் கொண்டிருக்கிறது.

## தனுஷ்கா ஹோட்டல் அன் றெஸ்ரோறன்ற்

நாம் வழங்கும் சேவைகள்

- Rooms A/C Non A/C
- Cattering Service
- Self Service on Theoccations
- Transport & Tourism in Jaffna area
- Pickup From Colombo Airport
- உங்கள் சுப நிகழ்வுகளுக்கு எம்மிடம் உணவுவகைகளை முன்கூட்டியே ஓடர் செய்து பெற்றுக்கொள்ளலாம்.


வேலைக்கு ஆட்கள் தேவை:
சமையலாளர், உதவி சமையலாளர், Waitor, உணவு பரிமாறுபவர்கள், ரொட்டி தயாரிப்பாளர், சுத்தம் செய்பவர்கள், காசாளர் ஆகிய எல்லா நிலைகளிலும் வெற்றிடங்கள் உள்ளன.

அனைத்து சேவைகளையும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ள நாடுங்கள்

**Danuska**
Hotel & Restaurant
No :- 565, Manipay Road, 3rd, Mile Post
Anaikoddai.

T.P :- 021 312 2445, 076 660 4688, 077 462 3625
E-Mail :- danuska2506@gmail.com

# S.V. முருகேசு



பசித்திடும் உன் பக்த கோடிகள் அனைவருக்கும்
பசிப்பிணி போக்கிடும் அன்னதானக் கந்தனே
பண்டைப் பெருமை மிகு தொண்டைமான் ஆற்றாரில்
பாடுகள் போக்கியருள் பாலிக்கும் வேலவனே!

**இல. 154, ஆஸ்பத்திரி வீதி,**
**யாழ்ப்பாணம்.**
**TP:021 222 8899**

தொண்டைமானாறில் உறைந்துள்ள உனக்கு இன்று தேர்த்திருவிழா

தற்பொழுது அண்ணாவின் அனைத்து
உற்பத்திப் பொருட்களும் நாடுபூராக
பெற்றுக் கொள்ளும் வசதி செய்யப்பட்டுள்ளது
என வாடிக்கையாளர்களுக்கு மகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்

# ஜீவாகாரம்

குழந்தைகள் முதல்
முதியோர்வரை பாவிக்க
உகந்த சத்துணவு

ANNA JEEVAKARAM

# Anna Coffee

100% Pure Ground Coffee

அன்னா கோப்பி

ANNA SPICED COFFEE

*Superbly Blended & Roasted to a Strict Formula....*

எமது புதிய தயாரிப்புக்கள்....

ANNA Chinese NOODLES

ANNA SAMBRANI

அண்ணா தொழிலகம் - இணுவில்.
TEL: 021 - 2241565,
021 7200800, 0112 - 436063

# செல்வச்சந்நிதியானுக்கு இன்று தேர்

சிறப்புமலர் - 15.09.2016



## வரலாறு பகுதி-II

பகுதி-I

01.

(அ) வழங்கப்பட்டுள்ள இலங்கைப் புற உருவப் படத்தில் (i) இன் கீழ் தரப்பட்டுள்ள அனைத்து வரலாற்று இடங்களையும் வழங்கப்பட்டுள்ள பகுதி உலகப் புற உருவப்படத்தில் (ii) இன் கீழ் தரப்பட்டுள்ள அனைத்து இடங்களையும் குறித்துப் பெயரிடுக.

(i) வளவ கங்கை. ஜம்புகோளப் பட்டினம். பல்லவங்க. மகியங்கனை. அநுராதபுரம். சிகிரியா. கந்தளாய்குளம். கம்பளை. தேவ நகரம். காலி. சிலாபம். ஹோட்டன் சமவெளி

(ii) கொன்சாந்திநோபிள். வெனிஸ். கள்ளிக் கோட்டை. பிலிப்பைன்ஸ் தீவுகள். சுயெஸ் கால்வாய். சிங்கப்பூர்

(ஆ) (i) கீழே a, b, c, d ஆகியவற்றில் தரப்பட்டுள்ள வரலாற்றுத் தகவல்களோடு தொடர்புடைய நபர்களை வரிசைக் கிரமமாக உமது விடைத்தாளில் எழுதுக.

a-மின்னேரித் தெய்வமென இராசரட்டை மக்களின் நன்மதிப்பைப் பெற்ற மன்னன்.


b- இரண்டாம் இராஜசிங்க மன்னனின் சிறைக் கைதியாக இருந்து கண்டி இராச்சியம் தொடர்பான நூலொன்றை எழுதிய ஆங்கிலேயன்.

c-கம்பளை இராசதானிக் காலத்தில் இலங்கையைக் ஆக்கிரமித்த சீன சேனாதிபதி.

d-பிரான்சியப் புரட்சிக் காலத்தில் அரசியலில் தலையிட்ட பதினாறாம் லூயி மன்னனின் மனைவி.


A,B ஆகிய உருக்களை அடிப்படையாகக் கொண்டு கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளை வரிசைக் கிரமமாக விடைத்தாளில் எழுதுக.

(ii) 1.உரு A எவ்வாறு அழைக்கப்படுகின்றது?
2.இங்கிருந்து ஆட்சி செய்த ஆட்சியாளன் யார்?
3.இங்கு காணப்படும் உலகப் பிரசித்தி பெற்ற கலை நிர்மாணம் யாது?
4.இந்த இடத்தைப் பார்த்து இரசித்தவர்கள் தமது கருத்துக்களைப் பதித்துள்ள சுவர் எவ்வாறு அழைக்கப்படுகின்றது?



உரு A

(iii) 1. உரு B யில் காணப்படும் நபர் யார்?
2. இவர் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?
3. இவரின் தலைமையில் 1880 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட அமைப்பு எது?
4. இவரின் தலைமையில் கொழும்பில் நிறுவப்பட்ட பாடசாலையின் பெயர் என்ன?



உரு B

### பகுதி II

02.

(i) வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதன் தனது இருப்பிடங்களைத்தெரிவு செய்த போது கவனத்தில் கொண்ட மூன்று விடயங்களைக் குறிப்பிடுக.

(ii) (a) வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதன் தனது உணவுத் தேவைக்காக வேட்டையாடிய மிருகங்கள் இரண்டினைப் பெயரிடுக.
(b)அவர்கள் பயன்படுத்திய தாவர உணவு வகைகள் இரண்டினைப் பெயரிடுக.

(iii) இலங்கையின் முன் வரலாற்றுக் காலத்தில் குடியிருப்புக்கள் நிறுவப்படுவதில் செல்வாக்குச் செலுத்திய காரணிகள் இரண்டினைக் குறிப்பிட்டு விபரிக்குக.

(iv) வரலாற்றுக் கால இலங்கையில் விவசாயம் மேற்கொள்ளப்பட்ட முறையினைத் தெளிவுபடுத்துக.

03.

(i) பின்வரும் ஒவ்வொரு செயற்பாட்டின் பொருட்டும் பண்டைய இலங்கையில் நடைமுறையில் இருந்த வரிமுறைகள் எவை என ஒழுங்கு முறையில் எழுதுக.

a- மன்னனின் நிலத்தில் பயிர் செய்வதற்கு செலுத்தப்பட்ட வரி

b- கால்வாய்களில் மீன்பிடித்தலின் பொருட்டு அறவிடப்பட்ட வரி

c- குளங்களில் நீரை விவசாயத்திற்குப் பயன்படுத்தியவர்களிடம் அறவிடப்பட்ட வரி

(ii) ஹோராபிடிகம சந்தையின் நிர்வாகம் பற்றி விதிக்கப்பட்டிருந்த முக்கிய சட்டங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

(iii) பண்டைய இலங்கையில் கைத்தொழில்கள் நிலவியமையை இரண்டு உதாரணங்கள் மூலம் விளக்குக.

(iv) பண்டைய மக்களின் உணவு வகைகளில் பல்வகைத் தண்மை காணப்பட்டமையை அவர்கள் பயன்படுத்திய உணவுகளின் அடிப்படையில் உதாரணங்கள் தந்து தெளிவுபடுத்துக.

04.

(i) பின்வரும் குளங்களை நிறுவிய மன்னர்களின் பெயர்களை ஒழுங்கு முறையில் எழுதுக.

a-அபய வாவி

b- திச வாவி

c- கலா வாவி

(ii) பண்டைய காலத்தில் நீளத்தை அளப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட அளவைகள் இரண்டினை குறிப்பிடுக.

(iii) எம்து முன்னோர் சூழலைப் பாதுகாப்பதற்கு மேற்கொண்ட நடவடிக்கைகளைச் சுருக்கமாகத் தெளிவுபடுத்துக.

(iv) பண்டைய கால நீர்ப்பாசனத் தொழில்நுட்பத்தில் அமைக்கப்பட்ட குளங்கள். கால்வாய்கள் ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு அவற்றின் சிறப்பம்சங்களை உதாரணங்கள் இரண்டின் மூலம் விளக்குக.

05.

(i)இலங்கையின் முதலாவது நகராக்க யுகத்தைச் சேர்ந்த நிர்வாக நகரங்கள் இரண்டினையும் இரண்டாம் நகராக்க யுகத்தைச் சேர்ந்த நிர்வாக நகரம் ஒன்றினையும் பெயரிடுக.

(ii) முதலாவது நகராக்க யுகத்தைச் சேர்ந்த இறுதி நிர்வாக மத்திய நிலையம் வீழ்ச்சி அடைவதற்கான காரணங்கள் இரண்டினை எழுதுக.

(iii) இலங்கையின் இரண்டாவது நகராக்கலின் மத்திய நிலையமாக ஈரவலயம் தெரிவு செய்யப்பட்டமைக்கான காரணங்கள் இரண்டைக் குறிப்பிட்டு விபரிக்குக.

(iv) இரண்டாம் பராக்கிரமபாகு மன்னனால் மேற்கொள்ளப்பட்ட அரசியல் இலக்கியப் பணிகளை விபரிக்குக.

06.

(i) கண்டி இராசதானி மன்னர்களைச் சந்திப்பதற்கு வருகை தந்த ஆங்கிலத் தூதுவர்கள் மூவரைக் குறிப்பிடுக.

(ii) 1803 ஆம் ஆண்டு ஆங்கிலேயரால் மேற்கொள்ளப்பட்ட கண்டி இராசதானி மீதான ஆக்கிரமிப்பு தோல்வியடைந்தமைக்கான காரணங்கள் இரண்டினை எழுதுக.

(iii) 1818ஆம் ஆண்டு நடைபெற்ற சுதந்திரப் போராட்டத்திற்கான காரணங்கள் இரண்டினைத் தெளிவுபடுத்துக.

(iv) 1848ஆம் ஆண்டு ஆங்கில எதிர்ப்புக் கிளர்ச்சிக்குக் கோல்புறூக் கமரன் சீர் திருத்தங்கள் எவ்வாறு காரணமாகியது என்பதனை மூன்று உதாரணங்களுடன் எடுத்துக்காட்டுக.

07.

(i) கீழே A,B,C யில் தரப்பட்டுள்ள அமைப்புக்கள் நிறுவப்பட்ட யாப்பு சீர்திருத்தங்களை ஒழுங்கு முறையில் எழுதுக.

A- சட்டவாக்கக் கழகம்

B- அரச கழகம்

C- இரு சபைகளைக் கொண்ட பாராளுமன்றம்

(ii) டொனமூர் அரசியல் சீர்திருத்தத்திற்கு இணங்க பிரித்தானிய அரச உத்தியோகத்தர்களின் கீழிருந்த துறைகள் இரண்டினையும் இலங்கை அமைச்சர்களின் கீழிருந்த துறைகள் இரண்டினையும் எழுதுக.

(iii) பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையின் விளைவாக இந்நாட்டு சமூகத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் இரண்டினைத் தெளிவுபடுத்துக.

(iv) 1931 ஆம் ஆண்டின் பின்னர் இந்நாட்டின் நெற்பயிர்ச்செய்கையை முன்னேற்றுவதில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் இரண்டினைச் சுருக்கமாகத் தெளிவுபடுத்து.

### பகுதி III

08.

(i) பிரித்தானியாவில் ஆரம்பிக்கப்பட்ட கைத்தொழில் புரட்சிக்கு அடிப்படையாக அமைந்த மூன்று பிரதான கைத்தொழில்களைக் குறிப்பிடுக.

(ii)பிரித்தானியாவில் ஆரம்பித்த கைத்தெழில் புரட்சி 19 ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவின் ஏனைய நாடுகளிலும் பரவுவதற்கான காரணங்கள் இரண்டினைத் தருக.

(iii)கைத்தொழில் புரட்சியின் விளைவாகப் போக்குவரத்துத் துறையில் ஏற்பட்ட முன்னேற்றத்தை இரண்டு விடயங்களின் அடிப்படையில் விளக்குக.

(iv) கைத்தொழில் புரட்சியின் விளைவாக
(a) அரசியல் (b) பொருளாதாரம்
ஆகிய துறைகளில் உலகளாவிய ரீதியில் ஏற்பட்ட மாற்றங்கள் ஒவ்வொன்றினைக் குறிப்பிட்டு விளக்குக.

09.

(i) கீழே A,B,C என்பதில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்களுக்கு அமைய விடைகளை ஒழுங்கு முறையில் எழுதுக.

A- சிறிய நாடுகளை ஒன்றிணைத்து ஜேர்மனியை உருவாக்கியவர்.

B- முதலாம் உலக யுத்தத்தில் தோல்வியுற்ற ஜேர்மனியைத் தண்டித்த உடன்படிக்கை.

C- முதலாம் உலக யுத்தத்தின் பின்னர் ஜேர்மனியில் தோற்றம் பெற்ற புதிய அரசியல் முறை.

(ii) கீழே A,B,C,D என்பதில் கொடுக்கப்பட்டுள்ள விடயங்களுக்குப் பொருத்தமான விடைகளை ஒழுங்கு முறையில் எழுதுக.

A- 1870 ஆம் ஆண்டில் ஜேர்மனியால் பலவந்தமாக கைப்பற்றப்பட்ட பிரான்சுக்கு உரிய நிலக்கரி இரும்புவளப் பிரதேசம்

B-முதலாம் உலக யுத்தத்தின் பின்னர் சமாதானத்தைப் பேணும் பொருட்டு ஏற்படுத்தப்பட்ட அமைப்பு

C- அமெரிக்க ஐக்கிய நாடு இரண்டாம் உலக மகா யுத்தத்தில் இணைவதற்கான உடனடிக் காரணம்

D- இரண்டாம் உலக மகா யுத்தத்தின் இறுதியில் ஜப்பான் சரணடையத் தீர்மானித்தமைக்கான காரணம்.

(iii) உலகில் பாரிய அழிவை ஏற்படுத்திய பயங்கர யுத்தம் இரண்டாம் உலக மகா யுத்தமாகும். இக் கூற்றினை இரண்டு காரணங்களை முன்வைத்துத் தெளிவுபடுத்துக.

(iv) இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பின்னர் உலக அரசியல் மாற்றமடைந்த விதத்தை உதாரணங்களுடன் விளக்குக.

◆◆◆

## க.பொ.த.(சா/த) பரீட்சை-2016 மாதிரிவினாத்தாள்

### கணிதம் பகுதி-I (பயிற்சிக்குரியது)

பகுதி-A

எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

01. சுருக்குக : $3 + 2 \times 5$

02. 3 மனிதர் 2 நாளில் செய்யும் வேலையை 1 மனிதர் எத்தனை நாளில் செய்வார்?

03. பெறுமானம் காண்க : $(-1)^{25}$


04. ஏறுவரிசைப்படுத்துக. $\frac{7}{3}, \frac{8}{3}, \frac{5}{3}, \frac{10}{3}$

05. $P = \{1,2,3,4\}$ ஆயின் $\subset$, $\not\subset$ பயன்படுத்தி இடைவெளி நிரப்புக. $\{4\}$_____ P

06. தீர்க்க. $X/7=3$

07. $3075l$ ஐ $l, ml$ இல் தருக.

08. அருகிலுள்ள உருவைப் பயன்படுத்தி x இன் பெறுமானம் காண்க.





09. $x < 5$ இல் x இன் அதிகூடிய முழு எண் பெறுமானம் யாது?

10. சூரியன் தெற்குத்திசையில் உதிப்பதற்கான நிகழ்தகவு யாது?

11. 1 : 50000 என்ற அளவிடையில் 9km என்ற உண்மைத் தூரத்தை அளவிடைப் படத்தில் எத்தனை cm ஆல் காட்டப்படும்?

12. $x^2 - 5x = 0$ என்ற சமன்பாட்டின் மூலகங்களைக் காண்க.

13. A யிலிருந்து B இன் திசை கோளைக் காண்க.
B யிலிருந்து A இன் திசை கோளையும் காண்க.




14. $\binom{3}{7}$ என்ற தாயத்தின் தாயவரிசை யாது?

15. $\tan x = \sqrt{15}$ எனின் $Sin\ x$ இன் பெறுமானம் யாது?


16. $1032_{நான்கு}$ ஐ அடி 10 இல் தருக.

16 ஆம் பக்கம் பார்க்க...

## கணிதம் பகுதி-I தொடர்ச்சி...

17. $y = 3x - 2$ என்ற நேர்கோட்டுக்கு சமாந்தரமாகவும் (4,7) என்ற புள்ளியினூடாகச் செல்வதுமான நேர்கோட்டின் சமன்பாடு யாது?

18. அருகிலுள்ள உரு O ஐ மையமாகக் கொண்ட வட்டத்தில் $O\hat{B}C = 40^\circ$ எனின் $B\hat{A}C$ இன் பெறுமானம் யாது?




19. $\frac{6}{\sqrt{5}-\sqrt{3}}$ ஐ பகுதி எண்ணை விகிதமுறு எண்ணாக மாற்றுக?

20. $X = P + \sqrt{a+b}$ இல் a ஐ எழுவாயாக மாற்றுக.

21. 8% பங்குலாபம் வழங்கும் நிறுவனத்தின் ரூபா 10 பங்குகளை ரூபா 12 வீதம் வாங்கி வருட முடிவில் ரூபா 240 வருமானமாகப் பெற முதலீடு செய்ய வேண்டிய தொகை யாது?

22. பெறுமானம் காண்க : $\lg 25 + \lg 4$

23. $3x - 7y = a$
$2x + 2y = b$ எனில் தனித்தனியே தீர்க்காது $(x - y)$ இன் பெறுமானத்தை a,b சார்பில் காண்க.

24. வட்ட நாற்பக்கலின் எதிர் கோணங்களுக்கிடையேயான தொடர்பை எழுதுக.

25. சுருக்குக : $110_{\text{இரண்டு}} + 1111_{\text{இரண்டு}} - 101_{\text{இரண்டு}}$

26. சுருக்குக: $\frac{7}{x^2y} - \frac{5}{xy^3}$


27. 3 பேரின் இடைநிறை 40kg ஆகும். மேலும் வேறு 2 பேரின் இடைநிறை 45kg எனின் 5 பேரினதும் இடை நிறை யாது?

28. $x + \frac{1}{x} = a$ எனின் $x^2 + \frac{1}{x^2}$ இன் பெறுமானத்தை a சார்பாக தருக.

29. காரணி காண்க : $2a - 8a^3$

30. P, Q எனும் இரு நிலைத்த புள்ளிகளாகும். $P\hat{A}Q = 90^0$ ஆகும் வண்ணம் A என்னும் புள்ளி அசைகிறது. A யின் ஒழுக்கை பருமட்டான படத்துடன் விபரிக்குக.

31. A இல் இருந்து B யின் திசைகோள் $040^\circ$ எனின், B இல் இருந்து A யின் திசை கோள் யாது ?




32. தொடைகள் A,B என்பவற்றில் $n(A)=12, n(B)=9, n(A\cup B)=15$ எனின், $n(A\cap B)$ ஐக் காண்க.

33. $2x + 5 <= 7$ என்ற சமனிலியின் தீர்வை எண்கோட்டில் காட்டுக.

34. 8 மனிதர்கள் 15 நாட்களில் செய்யும் வேலையை 12 நாட்களில் எத்தனை மனிதர்கள் செய்து முடிப்பர் ?

35. சுருக்குக. $\frac{x+1}{2} + \frac{1-x}{2}$


36. $\log_{10} 2 = 0.3010$ எனின், $\log_{10} 20$ இன் பெறுமானம் யாது ?

37. $y = 2x - 1$ என்னும் நேர்கோட்டிற்கு சமாந்தரமாகவும் (0,3) எனும் புள்ளியினூடாகவும் செல்லும் நேர்கோட்டின் சமன்பாடு யாது ?

38. $3x + y = 1$
$x + y = 3$ என்னும் சமன்பாடுகளைத் தீர்க்காது $(x - y)$ இன் பெறுமானத்தை காண்க.


39. ஒழுங்கான பல்கோணி ஒன்றின் அகக்கோணம் ஒன்றின் பருமன் $140^\circ$ ஆகும்.
(1) புறக்கோணம் ஒன்றின் பருமன் யாது ?
(2) பக்கங்களின் எண்ணிக்கையைக் காண்க.

40. தரப்பட்ட உருவில் PS = QS = SR ஆகும். $\angle PSR = 65^\circ$ எனின், $\angle PQS$ இன் பருமன் யாது?





41. ரூபா 4500 இற்கு ஆண்டுக்கு 12% எளிய வட்டிப் படி 3 வருட எளிய வட்டி எவ்வளவு?

42. உருவில் X இன் பெறுமானம் யாது?




43. உருவில் அரை வட்ட வில்லின் நீளம் 22cm உம் விட்டம் 14cm உம் ஆகும். உருவின் சுற்றளவு யாது ?





44. x = 2 எனின், $x^2$ இன் பெறுமானம் யாது ?

45. காரணி காண்க. $2a + 6$

46. 5 மாணவர்களின் இடை நிறை 35 kg எனின், அவர்களின் மொத்த நிறையைக் காண்க.


47. உருவில் $\angle ADC = 40^\circ$ எனின், $\angle ABC$ இன் பெறுமானம் யாது ?




## பகுதி-B

01. தோசைக்கான மாக்கலவையொன்றில் உழுந்துமா, அரிசிமா என்பன 4 : 1 எனும் விகிதத்திலும் அரிசிமா, கோதுமைமா என்பன 2 : 3 என்ற விகிதத்திலும் கலந்து காணப்படுகின்றன.
1) அக்கலவையில் உழுந்துமா, அரிசிமா, கோதுமைமா ஆகியன கலந்துள்ள சேர்த்தி விகிதத்தைக் காண்க.
2) கலவையில் 1kg அரிசிமா பயன்படுத்தப்பட்ட போது கலக்கப்பட்டிருக்க வேண்டிய உழுந்து மாவின் நிறை என்ன?
3) 1kg கோதுமை மாவின் விலை ரூபா 60 எனின் 26kg தோசை மாக்கலவையில் கலந்து இருக்கும் கோதுமை மாவின் பெறுமதி என்ன?
4) 26kg தோசைமா கலவையின் விலை ரூபா 1560 ஆகும். சுட்ட தோசை ஒன்றின் உற்பத்தி விலை ரூபா 30 ஆயின் எத்தனை தோசை சுடலாம்? (ஏனைய செலவுகளை தவிர்க்கவும்)

02. ஒரு பேருந்தில் பயணித்த 40 பிரயாணிகளிடம் அவர்களுக்கு பேசத் தெரிந்த மொழிகள் பற்றி வினவப்பட்ட போது தமிழ் மட்டும் பேசத்தெரிந்தவர் 5 எனவும் கொண்டு மற்றைய விபரங்களை கீழே உள்ள பூரணப்படுத்தப்படாத வென்உரு மூலம் தரப்பட்டுள்ளது.





1) தரப்பட்ட தரவுகளைக் கொண்டு வென் உருவை பூரணப்படுத்துக.
2) தமிழ் தெரிந்த பிரயாணிகள் எத்தனை பேர்?
3) ஒரு மொழி மட்டும் தெரிந்தவர் எத்தனை பேர்?
4) ஒரு மொழி மட்டும் தெரிந்தவர்களைக் குறிக்கும் பகுதியை நிழற்றி காட்டுக.
5) தரப்பட்ட மொழிகளை தவிர வேறு மொழிகள் பேசக் கூடியவர்கள் எத்தனை பேர்?

03.


| கைக்காசுக்கு விலை | ஆரம்பக் கொடுப்பனவு | தவணைகள் கட்டணம் | தவணைகள் |
|---|---|---|---|
| ரூபா 28,000 | ரூபா 7,000 | ரூபா 2,205 | 12 |

அட்டவணையில் உள்ள தகவல்களின் படி.
1) ஆரம்பக் கொடுப்பனவின் பின் எஞ்சியுள்ள கடன் எவ்வளவு?
2) ஒரு தவணைக் கடன் பணம் எவ்வளவு?
3) செலுத்த வேண்டிய மொத்தவட்டிப் பணம் எவ்வளவு?
4) வட்டி செலுத்த வேண்டிய மாத அலகுகள் எத்தனை?
5) ஆண்டு வட்டி வீதம் யாது?

04.
உலோகத்தால் ஆன திண்மம் ஒன்றின் மாதிரி உரு படத்தில் தரப்பட்டுள்ளது.
1) AF இன் நீளம் யாது?
2) முக்கோணி ABF இன் பரப்பு யாது?
3) திண்ம உருவின் கனவளவு யாது?
4) இவ்வுரு செய்யப்பட்ட உலோகத்தின் அடர்த்தி $7.9gcm^{-3}$ எனின் இத் திண்ம உருவின் திணிவைக் காண்க.
(திணிவு = அடர்த்தி x கனவளவு)




05.
தரம் 11 இல் மாணவர்கள் கணிதப் பரீட்சையில் பெற்ற புள்ளிகள் வரையுரு வலயத்தில் காட்டப்பட்டுள்ளது.




1) மீடிறன் பரம்பல் அட்டவணையை எழுதுங்கள்.
2) ஆகார வகுப்பு யாது?
3) பரீட்சைக்குத் தோற்றிய மாணவர் எண்ணிக்கை எவ்வளவு?
4) சித்திப் புள்ளி 75 எனின் சித்தியடைந்தோர் எவ்வளவு பேர்?
5) வரைபில் மீடிறன் பல்கோணியை வரைக.

◆◆◆

# பெண்களை விட ஆண்களுக்கே பாதுகாப்பு அவசியம்!

பெண் பிள்ளைகளை விட ஆண் பிள்ளைகளுக்கே தற்காலத்தில் பாதுகாப்பு அவசியப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கையில் தற்போது பெண் பிள்ளைகளை வட ஆண் பிள்ளைகளே அதிகமாக பாலியல் துன்புறுத்தல்களுக்கு உட்படுவதாக தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இதேவேளை, ஆண் பிள்ளைகளே அதிகம் பாதுகாக்கப்பட வேண்டியவர்கள் என பெண்கள் மற்றும் சிறுவர், பொதுமக்கள் தொடர்பாடல் பிரிவின் பொலிஸ் பரிசோதகர் மனோஜ் சமரசேகர தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பெண் பிள்ளைகளுக்கு அதிகமாக பாதுகாப்பை வழங்கும் நடைமுறையானது சமூகத்தில் வழக்கமாகியுள்ளதால் சமூகத்தில் பெண் பிள்ளைகள் மீது அதிகம் அவதானம் செலுத்தப்படுவதாகவும். இதன் காரணமாக ஆண் பிள்ளைகள் மீதான கவனம், பாதுகாப்பு குறைவடைவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7-10)

# குடிநீர் விநியோகம் சீராக இல்லை

(யாழ்ப்பாணம்)

இடம்பெயர்ந்து நலன்புரி முகாமில் வசிக்கும் மக்களுக்கு குடிநீர் விநியோகம் சீராக இல்லாமையால் பல்வேறு சிரமங்களுக்கு முகாம் மக்கள் உள்ளாவதாக உடுவில் பிரதேச ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. மேற்படி ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம் நேற்று முன்தினம் காலை ஒன்பது மணியளவில் உடுவில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இதன் போதே மேற்கண்டவாறு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. ஜே/199 கந்தரோடை பகுதியை சேர்ந்த மக்கள் மற்றும் அங்கு உள்ள முகாம் மக்கள் ஆகியோர் விநியோகம் செய்யப்படும் தண்ணீரினை நம்பியே வாழ்ந்து வருகின்றனர். இவ்வாறு விநியோகம் செய்யப்படும் தண்ணீருக்கு ஒரு வீட்டுக்கு மாதாந்தம் ஐம்பது ரூபா அறவிடப்பட்டு வருகின்றது.

இந்த பணத்தை நீண்ட காலமாக கட்டத்தவறி விட்டார்கள் என கூறப்பட்டு நீர்வளங்கள் வடிகாலமைப்பு சபையினரால் குறித்த பிரதேசத்திற்கு மேற்கொள்ளப்பட்டு வந்த நீர்விநியோகம் கடந்த ஐந்து நாட்களாக நிறுத்தப்பட்டுள்ளது. இதனால் அப்பகுதி மக்கள் பாதிக்கப்பட்டதோடு மட்டுமன்றி,

இடம்பெயர்ந்த மக்கள் தங்கியுள்ள பிள்ளையார் முகாம் மக்களும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. எனினும் தண்ணீருக்கான பணத்தை தாம் ஒழுங்காக செலுத்தி வந்ததாகவும், அப்பகுதி மக்கள் செலுத்தாமல் இருந்த காரணத்தினால் எமக்கும் தண்ணீர் விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளது. இதனால் முகாமில் வாழும் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பிள்ளையார் முகாமில் 41 குடும்பங்கள் வசித்து வருகின்ற நிலையில் நீர்விநியோகம் நிறுத்தப்பட்ட கடந்த ஐந்து நாட்களாக குடிதண்ணீரை பெறுவதற்கு கடும் சிரமத்தையை முகாம் மக்கள் எதிர்கொண்டனர் என அந்த முகாமைச் சேர்ந்த வயோதிபர் ஒருவரால் கூறப்பட்டது. இதற்கு பதிலளித்த அதிகாரி ஒருவர்,

குறித்த பகுதியை சேர்ந்த மக்கள் பணம் செலுத்த தவறியிருந்தார்கள், பணம் செலுத்தாமல் விட்டால் தண்ணீர் விநியோகம் நிறுத்தப்படும் என மூன்று மாதங்களுக்கு முன்னதாகவே அறிவுறுத்தல் வழங்கப்பட்டுத்தான் நீா விநியோகம் நிறுத்தப்பட்டது என அவர் பதிலளித்தார்.

எனினும் ஏனைய மக்கள் பணம் செலுத்தாமையால் முகாம்மக்கள் பாதிக்கக்கூடாது என சிறுவர் மகளிர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் சுட்டிக்காட்டி அது தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறும் பணித்திருந்தார். (இ-4)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்:
23. 11. 1942

மறைவு:
17.08.2016



அமரர் திருமதி
உரோகினி
குருசாமி

கடந்த 17.08.2016 அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவியான உரோகினி குருசாமி அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் 16.09.2016 வெள்ளிக்கிழமை அன்று முற்பகல் 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற உள்ளதால் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து குறித்த கிரியைகளிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

கும்பளாவளை, அளவெட்டி மத்தி,
அளவெட்டி. (5911) தகவல்: குடும்பத்தினர்.


## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 836

### கயல்விழி




### கோபிநாத்




### கம்சி

நோயாளி: கசப்பான மருந்து கூட உங்க கையால கொடுக்கிறப்போ ஸ்வீட்டா இருக்கு சிஸ்ரர்.
நேர்ஸ்: கறுமம்... கறுமம் நான் உண்மையிலேயே ஸ்வீட் தான் கொடுத்தேன். இன்றைக்கு எனக்கு பிறந்தநாள்.

### துவேனி




### அபி

குலைக்கிற நாய் கடிக்காது என்று நம் எல்லோருக்கும் தெரியும்?



அந்த நாய்க்கு இது தெரியுமா?

### ஊர்மி

பெண்: தோசை மாவு வாங்கப் போன என் கணவரை ஒரு வாரமா காணல மேடம்..
பொலிஸ்: ஒரு வாரமா என்னம்மா செஞ்சே?
பெண்: உப்புமா, பூரின்னு சாப்பிட்டு சமாளிக்கிறேன் மேடம்!



நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# 90 ஈழ அகதிகள் நாடு திரும்பினர்

(கொழும்பு) —

**இந்தியாவில் தஞ்சமடைந்திருந்த இலங்கையைச் சேர்ந்த 35 குடும்பங்களை சேர்ந்த சுமார் 90 பேர் நேற்று முன்தினம் நாடு திரும்பினர்.**



ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயத்தின் வசதிப்படுத்தலின் கீழ் சுய விருப்பின் பேரில் 45 ஆண்களும் 45 பெண்களும் நாடு திரும்பியதாக மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர் வேலாயுதன் சிவஞானஜோதி தெரிவித்தார்.

இலங்கை விமான சேவைக்குச் சொந்தமான யூ.எல் - 132 இலக்க விமானத்தில் திருச்சியிலிருந்து 54 அகதிகளும் சென்னையிலிருந்து யூ.எல். - 122 இலக்க விமானத்தில் 36 அகதிகளும் நேற்று முன்தினம் நண்பகல் நாட்டிற்கு வருகை தந்தனர்.

நாடு திரும்பும் அகதிகளுக்கு இலவச விமான பயணச் சீட்டு வழங்கப்படுவதுடன் வாழ்வாதாரத்திற்கு தேவையான ஆரம்பக் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளதாக மீள்குடியேற்ற அமைச்சு தெரிவித்துள்ளது. (இ-7-10)

# ஒன்பது மாதங்களுக்கு மட்டும் வற்வரி அறவீடு செய்யப்படும்

## அமைச்சர் ராஜித தெரிவிப்பு

ஒன்பது மாதங்களுக்கு மட்டுமே வற்வரி அறவீடு செய்யப்படும் என சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

களுத்துறையில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்.

9 மாதங்களுக்கு வற்வரி அறவீடு செய்யப்படும். அதன் பின்னர் மக்களின் அழுத்தங்கள் குறைக்கப்படும். வரவு செலவுத்திட்ட யோசனை அரச ஊழியர்களுக்கு மிகவும் அவசியமானது.

அபிவிருத்தி அடைந்த நாடுகளைப் போன்று இலங்கையில் அரச ஊழியர்களின் சம்பளங்கள் அதிகரிக்கப்படவில்லை என்பதனை நாம் ஒப்புக்கொள்கின்றோம்.

இதனால் நாட்டை அபிவிருத்தி செய்ய வேண்டும். அதன் பின்னர் அரச ஊழியர்களின் சம்பளங்களை உயர்த்த முடியும்.

2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8 ஆம் திகதியின் பின்னர் 10 ஆயிரம் ரூபா கொடுப்பனவு அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதில் 2 ஆயிரத்து500 ரூபா சம்பளத்துடன் சேர்க்கப்பட்டுள்ளது.

வற்வரி மிகவும் முக்கியமானது. இன்று வற்வரி அதிகரிப்பிற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்துள்ளது.

காணப்பட்ட வற்வரி அறவீட்டு முறையை விட வும் மக்கள் மீது அழுத்தம் குறைவான முறையே அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

மக்களுக்கு அழுத்தங்களை பிரயோகிக்காத வகையில் வற்வரி அமைய வேண்டும் என்பது குறித்து நானும், அமைச்சர்களான சம்பிக்க ரணவக்க மற்றும் சரத் அமுனுகம நீண்ட விளக்கம் அளித்திருந்தோம்.

விரைவில் மக்களின் பொருளாதார சுமைகள் நீக்கப்படும் என அமைச்சர் ராஜித சேனாரட்ன மேலும் தெரிவித்துள்ளார். (இ-7-10)

# புதிய அரசியல் அமைப்புக்கு எதிராக சிங்களவர் கொதித்தெழவேண்டும்

## கூறுகிறார் விமல் வீரவன்ச

ஐ.நாவின் நிகழ்ச்சி நிரலுக்கேற்பவும் ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் செயிட் அல் ஹுசைனின் வழிகாட்டலின் பேரிலுமே புதிய அரசியலமைப்பு தயாரிக்கப்படுவதாகவும் இதற்கு எதிராக பெரும்பான்மை இன சிங்களவர்கள் கொதித்தெழுந்து எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டும் என்றும் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச கோரிக்கை விடுத்துள்ளார்.



"ரணிலுடைய புதிய அரசியலமைப்பு நாட்டை காக்குமா? அல்லது நாட்டை பிரிக்குமா" என்ற தலைப்பின் கீழ் கொழும்பு சம்புத்தாராம மண்டபத்தில் நேற்று முன்தினம் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், கடந்த மாதம் 28 ஆம் திகதி ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் தலைவர் செயிட் அல் ஹுசைன் அரசாங்கத்தினால் நிறைவேற்றப்பட வேண்டிய பரிந்துரைகளை வெளியிட்டிருந்தார். அதனடிப்படையிலேயே தற்போது அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரல் அமைந்துள்ளது.

நாட்டை பிரித்து சிறுபான்மையினருக்கு நாட்டை ஒப்படைத்தல், பாராளுமன்ற பேரவை என்ற ஒன்றை உருவாக்கி பிரதமருக்கு அதிக பட்ச அதிகாரத்தை வழங்குதல், செனட் சபை உருவாக்கம், யுத்தத்தினால் தங்களது உயிரையும் துச்சமாக கருதி வேலை செய்த மாவீரர்களை தண்டிக்க சர்வதேசத்துக்கு உதவுதல் போன்றனவே அவரின் பரிந்துரைகளாகும்.

இவற்றை எல்லாம் தவணையடிப்படையிலும் ஒப்பந்த அடிப்படையிலும் நிறைவேற்றி எமது அடையாளம் தேசிய கொடி, தேசிய கீதம் போன்றவற்றை தாரைவார்ப்பார்கள், இவற்றுக்கெல்லாம் நாமே கடிவாளமிடவேண்டும். நாம் அநாதரவாக்கப்படமுன்னர் மீண்டெழ வேண்டும். அரசாங்கத்தின் குறித்த செயற்பாட்டுக்கெதிராக பெரும்பான்மை இனத்தவர்கள் கொதித்தெழுந்து எதிர்ப்பு தெரிவிக்க முன்வர வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7-10)

# இன்று ஒரு தகவல்

## வளமையையும் வறுமையையும் வெளியே சொல்லலாமா?

எத்தனையோ அம்சங்கள் நம்மை மதிப்பிட உதவினாலும் பணம் தான் அதில் இப்போது பிரதானமாக இருக்கிறது. காரணம் மக்களின் பார்வையில் உள்ள கோளாறு.

இந்த மோசமான போக்கால் பணத்தால் நமக்கு மதிப்பு என்று ஆகிவிட்ட பிறகு வளமையைச் சற்று வெளியே பரப்புவதற்குத் தயங்க வேண்டியதில்லை.

ஆனால் அது பிரஸ்தாபமாகவோ தம்பட்டமாகவோ பிறருக்குப் படக்கூடாது.அதாவது இயல்பாக இருக்க வேண்டும்.

வாய்ப்பு வரும்வரை பொறுமையுடன் காத்திருந்து வளமையைச் சொல்லலாம்.திணிக்கக்கூடாது.வேறு வகையில் சொல்ல வேண்டும் என்றால் சந்தர்ப்பங்களுக்காகக் காத்திருக்க வேண்டும்.

வளமையைச் சொல்லும் போது முகத்தில் பெருமையுணர்வுடன் பேசக்கூடாது. இயற்கையாகப் பேசுவது போலத்தான் சொல்ல வேண்டும்.

நம் வளமையைப் பற்றி யாராவது உயர்வாகச் சொன்னால் அப்படியெல்லாம் ஒன்றும் இல்லைங்க! என்று மறுக்காமல் அதை ஏற்பது போல் ஒரு புன்னகையை உதிர்க்க வேண்டும்.

சிலர் மிக நெருங்கிய வட்டத்தைச் சேர்ந்தவர்களிடம் வளமையைப் பற்றி சொல்லிக் கொண்டிருப்பார்கள். இது அவசியமே இல்லை.

காரணம் மனிதனுக்கு தன் பேர்சில் எவ்வளவு இருக்கிறது என்பதை விட அடுத்தவன் பேர்சில் என்ன இருக்கிறது என்று அறிவதில் தான் ஆர்வம், அக்கறை எல்லாம். எனவே அவர்களுக்கு இவர்களைப் பற்றி நன்கு தெரியும்.

முன்பின் தெரியாதவர்களிடத்தில் வளமையைச் சொல்ல வேண்டியதில்லை.காரணம் அவர்கள் நம்மைக் குறைத்து மதிப்பிடுவதோடு பொறாமைப்பட்டுச் சாவார்கள்.

நீண்ட நாட்களுக்குப் பிறகு ஒரு நண்பரை/ தோழியைச் சந்திக்கிறீர்கள்.ஆரோக்கியமாக இருக்கிறீர்களா? வசதியாக இருக்கிறீர்களா? இவைதாம் முதலில் அலசப்படும் விடயங்கள். என்ன சொல்வது?

முதல் வேலை புலம்பக்கூடாது.தேவை என்பது எவ்வளவு வளர்ந்தவர்களுக்கும் இருக்கிறது. அளவுதான் வித்தியாசம். எனவே மனநிறைவுடன் தான் பேச வேண்டும். ஏதோ பிரமாதமாக இல்லைன்னாலும் ஓரளவு (வசதியோட) இருக்கேன் என்கிற தொனிதான் வரவேண்டும்–வேறு அல்ல!

வளமையைச் சொன்னால் பெருமையாக இருக்கும்தான்.ஆனால் அதேநேரத்தில் அது நமக்கு வினையாகவும் வரலாம்.

வறுமையைச் சொன்னால் கேவலம் என்று சிலர் நினைக்கலாம்.அது நம் தேவைகளைப் பூர்த்திசெய்து கொள்ள நாம் ஏற்படுத்தும் களமாகவும் அமைவதுண்டு.

ஆக, இப்படி அப்படி என்று இரு பக்கமும் திரும்பும் இந்த விடயத்தில் இரு முக்கியமான விடயங்களுக்குத்தான் நாம் அதிக முக்கியத்துவம் தர வேண்டும்.

அதாவது,

யாரிடம் சொல்கிறோம் மற்றும் எந்தச் சந்தர்ப்பத்தில் சொல்கிறோம் என்பதே அவை!

**லேனா தமிழ்வாணன்**



அகில இலங்கை கம்பன் கழகம் நடத்தும்

# யாழ்.கம்பன் விழா-2016

**இன்று 15.09.2016 வியாழக்கிழமை**
**மாலை 4.30 மணி** (முதலாம் நாள் நிகழ்வு)

மங்கல இசை: **திரு கே. ஆர்.சுந்தரமூர்த்தி** குழுவினர்
மங்கல விளக்கேற்றல்: **டாக்டர் எஸ்.பிரேமகிருஷ்ணா** தம்பதியர்
(உணர் வழியியல் நிபுணர், யாழ். மருத்துவபீடம்)
கடவுள் வாழ்த்து: **திருமதி வாசஸ்பதி ரஜீந்திரன்**
ஆசியுரைகள்: **ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்**
(முதல்வர், நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்)
**வணபிதா ரீ.ரவிராஜ் அடிகளார்**
(விரிவுரையாளர், புனித பிரான்சிஸ் சேவியர் செமினரி)
**மௌலவி எஸ்.அப்துல் சமத்**
(தலைவர், ஜும்மா பள்ளிவாசல் பரிபாலனசபை)
தலைமையுரை: **மாண்புமிகு ஜெ.விஸ்வநாதன்**
(பெருந்தலைவர், கொழும்புக்கம்பன் கழகம்)
தொடக்கவுரை: **மாண்புமிகு மா.இளஞ்செழியன்**
(மேல்நீதிமன்ற நீதிபதி, யாழ்ப்பாணம்)
வெளியீடுகள் :
- **'உன்னைச் சரணடைந்தேன்'** (யாழ்.கழக வரலாற்று நூல்)
- **2015 யாழ். கம்பன் விழா இறுவெட்டு**
- **2016 இசை விழா இறுவெட்டு** (கொழும்பு, யாழ்.)

முதற்பிரதிகள் பெறுவோர்: **திரு.எஸ்.பாலகுமார்**
(சிரேஷ்ட விரிவுரையாளர், மருத்துவபீடம், யாழ். பல்கலைக்கழகம்)
**பேராசிரியர் மா.வேதநாதன்**
(தலைவர், இந்து நாகரிகத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)
**திரு.ந.வித்தியாதரன்** (ஊடகவியலாளர்)

**இலக்கிய ஆணைக்குழு**
ஆணையாளர்:
**'கம்பவாரிதி' இ.ஜெயராஜ்**
பொருள்:
**"அன்பின் உச்சமென அறிஞர் பெரிதும் உவப்பது"**
**'பிரிவினும் சுடுமோ' எனும் காதலையே!**
அரங்க. இராமலிங்கம்
**'செய்குவன் அடிமை' எனும் நட்பையே!**
இரா.ருக்மணி
**'ஆருளர் எனின் உளேம்' எனும் பாசத்தையே!**
இரெ.சண்முகவடிவேல்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம் (இ)

# பரிசுத்தின விழா

யாழ். இணுவில் இந்துக்கல்லூரியின் பரிசுத்தினவிழா இன்று வியாழக்கிழமை கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெறும். பாடசாலை அதிபர் தி.தேவதயாளன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக வட மாகாண சபை உறுப்பினர், சட்டத்தரணி கேசவன் சயந்தன் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந் தினராக உடுவில் கோட்டக்கல்விப் பணிப்பாளர் சு.சண்முககுல குமாரன், வலிகாமம் கல்வி வலய அழகியல் உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி. ஜெ.அரு ள்மயம் ஆகியோரும் கலந்து கொள்ளவுள் ளனர். (இ-7)

## பகிரங்க ஏல விற்பனை-2016

2015 ஆம் ஆண்டிற்கான பொருட் கணக் கெடுப்பின் பிரகாரம் இனங்காணப்பட்ட பொருட்கள் 22.09.2016 ஆம் திகதி முற் பகல் 11 மணிக்கு யா/யாழ். இந்து ஆரம்ப பாடசாலையின் ஏல விற்பனை செய்யப்படும்.

அதிபர் (இ)

## யாரிடம் பேசுவது?

யார் என்னைப் புரிந்து கொள்வார்?
நான் வாழ்ந்து என்ன பிரயோசனம்?
நான் என்ன தவறு செய்தேன்?
என்னால் எதுவுமே முடியவில்லை ....
என்பன போன்ற எண்ணங்களா?

**எம்முடன் பேசுங்கள்.**

**கை கொடுக்கும் நண்பர்கள்**
104, 4 ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்
*மதசார்பற்றது *ரகசியமானது * இலவச சேவை
**021 222 8117, 077 900 8776**
வவுனியா: (024) 324 4444
(சனி, ஞாயிறு காலை 9.00 - 1.00)

# கிருஸ்ணா அடகு சேவை

**பதிவு இல .J/DS/BR/472**

மேற்குறிப்பிட்ட எமது ஸ்தாபனத்தில் 2016 ஆம் ஆண்டு 15.03.2016 இற்கு முன்னர் வைத்த அடகு நகைகள் யாவற்றையும் 2016 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 15 ஆம் திகதி (15.10.2016) இற்கு முன்னர் மீட்கவும். மீட்கமுடியாவிட்டால் ஒரு பகுதி பணத்தை கட்டி புதுப்பித்துக்கொள்ளவும். புதுப்பிக்க தவறின் 15.10.2016 ஆம் திகதியன்று ஏலத்தில் விற்கப்படும் என்பதனை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

உரிமையாளர்: A.S.Surendran

இல.370,
கே.கே.எஸ்.வீதி
யாழ்ப்பாணம்
021 490 0311

இல.09,
கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 5046

(C-5759)

## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா:48<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்:O/L/சொந்த தொழில்<br>தொ.இ: B/4510 | பிறப்பு: 1978RC<br>தகைமை/தொழில்:O/L/ தனியார் தொழில்<br>தொ.இ: G/5480 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 48செவ் 2 இல்<br>உயரம்: 167cm<br>தகைமை/தொழில்:Diploma/ஆசிரியர்<br>தொ.இ: B/4516 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: 61செவ் 1 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:A/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்<br>தொ.இ: G/5482 |
| பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 21<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்:BA/அரச தொழில்<br>தொ.இ: B/4517 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா: 31<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:O/L<br>தொ.இ: G/5486 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 34 செவ் 7 இல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்:A/L/அரச தொழில்<br>தொ.இ: B/4519 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 47செவ் 1 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:CIMA/ தனியார் தொழில்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/5489 |

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு: 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
(ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதையும் அறியத்தருகின்றோம்)





# கொமர்ஷல் வங்கி யாழ்ப்பாணக் கிளையானது

**19.09.2016 இல் இருந்து**

**இலக்கம் 484, ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள கட்டடத்தில்**

தனது சேவைகளை தொடர்ந்து வழங்க இருக்கின்றது என்பதனை எமது வாடிக்கையாளர்களுக்கு அன்புடன் அறியத்தருகின்றோம்.

(C-5757)

முகாமைத்துவம்.



# பண்டாரநாயக்கவின் கொள்கைகளை முன்னெடுப்பவர்கள் நாம் மட்டும்தான் மகிந்த ராஜபக்ஷ கூறுகிறார்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியானது நேற்று ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்து, ஐக்கிய தேசிய கட்சியின் கொள்கைகளுக்கு அமைய செயற்படுவதாகவும் தாமே உண்மையான பண்டார நாயக்கவின்கொள்கைகளுடன் செயற்பட்டு வருவதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம் பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்ட போதே அவர் இதனை கூறியுள்ளார்.

புதிய அரசியலமைப்பு மூலம் நாடு துண்டாடப்படவிருந்ததாகவும், 29 ஆயிரம் இராணுவத்தினர் உயிர்த் தியாகம் செய்து மீட்டெடுத்த நாட்டை பிரிப்பதற்கு இடமளிக்கப் போவதில்லை என்றும் தெரிவித்துள்ளார். (இ-7-10)

# போரின் இறுதிக் கட்டத்தில் இலங்கை மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தத் திட்டம்

## எதிர்கொள்ளத் தயாராக இருந்ததாம் இலங்.இராணுவம்

(கொழும்பு)

**விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரின் இறுதிக்கட்டத்தில் இலங்கை மீது அமெரிக்கப் படைகள் தாக்குதல் நடத்தக் கூடும் என்று அப்போதைய பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவும் சீன இராணுவத் தளபதியும் எச்சரிக்கை விடுத்திருந்ததாக மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன தெரிவித்துள்ளார்.**

அவர் எழுதி வெளியிட்டுள்ள 'நந்திக்கடலுக்கான பாதை' என்ற நூலிலேயே அவர் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

'2009 மே 16ஆம் திகதி புலிகளை சுமார் 800 சதுர மீற்றருக்குள் அடைத்துக் கொண்டோம். அதன் பின்னர், அவர்கள் மீதான எமது முதலாவது தாக்குதலை 17 ஆம் திகதி மேற்கொண்டோம்.

நந்திக்கடல் களப்பின் வடக்கே இராணுவத்தின் 53 ஆவது படைப்பிரிவு நிலை கொண்டிருந்தது. கிழக்கில், 58 ஆவது படைப்பிரிவு நிலை கொண்டிருந்தது. மேற்காக, களப்பு காணப்பட்டது.

மே 17ஆம்திகதி அதிகாலை, நந்திக்கடல் களப்பிலிருந்து படகுகள்பல விரைந்து வந்தன. அவற்றில், ஆறு தற்கொலைத் தாக்குதல் படகுகள் காணப்பட்டன. அவை, தரையிலிருந்த எமது படைப் பிரிவு இருக்கும் திசை நோக்கி வந்து வெடித்துச் சிதறின.

இருப்பினும், எமது படையினர் விட்டுவைக்கவில்லை. எதிர்த் தாக்குதல்களை நடத்தினர். இதுவே, பிரபாகரனைக் காப்பாற்றுவதற்காக, புலிகளால் நடத்தப்பட்ட இறுதித் தாக்குதல்.

எமது பாதுகாப்பு வேலியை உடைத்துக்கொண்டு, பிரபாகரனை மாங்குளம் காட்டுக்கு அழைத்துச் செல்லவே, அவர்கள் முயற்சித்தனர். அப்படி நடந்திருந்தால், மேலும் 6 மாதங்களுக்கு போர் நீடித்திருக்கும்.

புலிகள் இயக்கத்தினரால், மாங்குளம் காட்டில் ஆயுதங்கள் மற்றும் உணவுப் பொருட்கள் மறைத்து வைக்கப்பட்டிருந்த விடயத்தை, அதன்பிறகே நாம் உறுதி செய்துகொண்டோம்.

மக்களோடு மக்களாக, இரவு வேளைகளில் இராணுவப் பிரதேசத்துக்குள் நுழைய விடுதலைப் புலிகள் முயற்சி செய்தனர். இரவு வேளைகளில் இராணுவ பிரதேசத்துக்குள் எவரையும் அனுமதிக்க வேண்டாமென நான் உத்தரவிட்டேன்.

இருப்பினும், சிலர் கலவரப்பட்டதால் இராணுவ அதிகாரியொருவர் வானத்தை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டார். இதன்போது, மக்கள் மத்தியில் மறைந்திருந்த புலிகள், எம்மீது தாக்குதல் நடத்தத் தொடங்கினர்.

சுமார் 300 மீற்றர் நீளமான எமது பாதுகாப்பு வேலி உடைந்தது. அதனூடாக, புலிகள் வரத் தொடங்கினர். இருப்பினும் நாம், பின்னாலிருந்து தாக்கத் தொடங்கினோம். 18 ஆம் திகதி அதிகாலையில் நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

பிரபாகரனின் மூத்த புதல்வர் சார்ள்ஸ் அன்ரனி, இந்தத் தாக்குதலின் போதே கொல்லப்பட்டார்.

இந்தத்தாக்குதலில் காயமடைந்த இராணுவ வீரர் ஒருவருக்கு சிகிச்சையளிப்பதற்காக எமது படையினர் அவரை, நோயாளர் காவு வண்டியொன்றில் ஏற்றிக் கொண்டு சென்றனர். அந்த வண்டி மீதே புலிகளால் தாக்குதல் நடத்தப்பட்டது. இதனைக் கேள்வியுற்ற படையினர், அவர்கள் மீது தாக்குதல் நடத்திக் கொன்றனர்.


அப்போது, மேற்படி வண்டி தீப்பற்றி எரிந்தது. இந்தச் சம்பவம் தொடர்பில் தான், வதந்தி பரவி, அனைத்துலகம் வரை சென்றது. பிரபாகரன், அதில் தான் உயிரிழந்திருந்தார் என்று கூறப்பட்டது.

இராணுவத் தளபதியும் இது தொடர்பில் என்னிடம் விசாரித்தார். நான் அவருக்கு நடந்த உண்மையைக் கூறினேன்.

இறுதிக்கட்ட போரின் போது, இலங்கை மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தக்கூடிய சாத்தியம் இருந்தது. போரின் இறுதிக் காலத்தில், அமெரிக்கா உள்ளிட்ட பலம் வாய்ந்த பல நாடுகள், இலங்கை அரசாங்கத்துக்கு பாரிய அழுத்தங்களைக் கொடுத்தன.

மூன்றாம் தரப்பினரிடம் புலிகள் இயக்கத்தினர் சரணடைய இடமளியுங்கள் என்று அந்த நாடுகள் கோரின. இருப்பினும், பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ, தீர்க்கமானதொரு முடிவில் இருந்தார். புலிகள் சரணடைவதாயின், அது இலங்கை இராணுவத்தினரிடத்தில் மாத்திரமே. வேறு எவரிடத்திலும் அவர்கள் சரணடைய முடியாது என்று அவர் தெரிவித்தார்.

இதனால், இலங்கை மீது அமெரிக்காவினால் தாக்குதல் நடத்தக்கூடும் என்று, அவர் எமக்கு எச்சரிக்கை விடுத்திருந்தார். அப்போது, சீனாவின் இராணுவத் தளபதியும் என்னைத் தொடர்புகொண்டு, அமெரிக்கப் படைகள், இலங்கை மீது



தாக்குதல் நடத்தக்கூடும் என்று எச்சரிக்கை விடுத்தார்.

அவ்வாறான தாக்குதலொன்று இடம்பெற்றால், அதிலிருந்து படையினர் தப்பிக்கொள்வது எவ்வாறு என்பது தொடர்பில், நாம் திட்டமொன்றை வகுத்திருந்தோம்.

இருப்பினும், அவ்வாறானதொரு தாக்குதல் தொடர்பில், நாம் எமது படையினருக்கு அறிவித்திருக்கவில்லை. படைத் தளபதிகள், படைப் பிரிவுகளின் தளபதிகள் மாத்திரமே இதனை அறிந்திருந்தனர் என்றும் தெரிவித்துள்ளார். (இ-7-10)

# மதகுகளில் வெள்ளநீர் தேங்குவதால் டெங்கு நுளம்பு பல்கிப் பெருகுகின்றது

## உடுவில் ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

யாழில் உள்ள வீதிகள் உரிய முறையில் செப்பனிடப்படாமையால் மதகுகளில் வெள்ள நீர் தேங்கி டெங்கு நுளம்பு பெருகி டெங்குக் காய்ச்சல் மற்றும் சுகாதாரப் பிரச்சினைகள் ஏற்படுவதாக உடுவில் பொதுச் சுகாதார பரிசோதகரால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் உடுவில் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பகுதியில் உள்ள கழிவு நீர் கான்கள் துப்புரவு செய்யப்பட வேண்டும் என உடுவில் பிரதேச செயலக அபிவிருத்தி குழு கூட்டத்தில் பொதுமக்களால் வலியுறுத்தப்பட்டிருந்தது. இதன் போதே மேற்கண்டவாறு கூறப்பட்டுள்ளது.

யாழ்.உடுவில் பிரதேச செயலக அபிவிருத்திக் குழு கூட்டம் நேற்று முன்தினம் உடுவில் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றிருந்தது.

இது தொடர்பாக உடுவில் பிரதேச செயலக பொதுச் சுகாதார பரிசோதகர் தெரிவிக்கையில்,

இப்பிரச்சினையானது கடந்த காலங்களில் மாவட்ட அரச அதிபர் மட்டம் வரை சென்றிருந்த போதும் இதற்கான தீர்வானது எட்டப்படவில்லை.

குறிப்பாக ஆர்.டி.ஏ., ஆர்.டி.டி. ஆகிய திணைக்களங்களின் கீழான வீதிகளில் இந்தப் பிரச்சினை காணப்படுவதாக அவர் தெரிவித்தார்.

இவ்வாறு குறித்த திணைக்களங்களினால் அமைக்கப்படுகின்ற கான்கள் திறக்க முடியாதபடி அமைக்கப்படுவதால் அவற்றுள் குப்பைகள் தேங்கி அதனூடாக கழிவு நீரானது வெளியேற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

மேலும் இவ்வாறான இப்பிரச்சினையை தீர்க்காது விட்டு விட்டு செல்வதாலேயே மழை காலங்களில் மழை நீரானது வழிந்தோட முடியாது வெள்ளம் மக்களின் குடி நிலங்களுக்குள் புகுந்துகொள்கின்றது.

இதன் பின்பு மக்களுக்கு நிவாரணம் வழங்குவதால் எவ்வித மான பயனும் ஏற்படப் போவதில்லை. ஆரம்பத்திலேயே வடிகான்கள் அமைப்புக்களை சீர்படுத்த வேண்டும்.

இலங்கையில் டெங்கு நோயின் தாக்கமானது அதிகரித்துள்ள நிலையில் இவ்வாறு ஒழுங்கான கழிவு நீர் செயற்பாடுகளும் இடம் பெறவில்லையாயின் தொடர்ச்சியாக மக்கள் டெங்கு போன்ற தொற்று நோய் பாதிப்புக்களுக்கு உள்ளாக நேரிடும் என்ற விடயத்தையும் இதன்போது சுட்டிக் காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-4)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | கொடிகாமம் | நெல்லியடி | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் | சுன்னாகம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 40 | 50 | 50 | 50 | 60 | 50 |
| உருளைக்கிழங்கு | 100 | 85 | 100 | 100 | 120 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 100 | 70 | 100 | 80 | 120 | 100 | 70 |
| தக்காளி | 80 | 55 | 50 | 50 | 80 | 50 | 50 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 70 | 50 | 90 | 60 | 70 | 80 |
| கோவா | 100 | 55 | 50 | 90 | 80 | 80 | 80 |
| கரட் | 80 | 80 | 50 | 100 | 120 | 80 | 120 |
| பூசணி | 30 | 20 | 20 | 40 | 40 | 40 | 40 |
| புடோல் | 50 | 20 | 20 | 40 | 40 | 50 | 40 |
| வாழைக்காய் | 80 | 60 | 50 | 70 | 80 | 80 | 60 |
| சின்ன வெங்காயம் | 100 | 85 | 100 | 80 | 100 | 70 | 100 |
| பெரிய வெங்காயம் | 100 | 80 | 100 | 90 | 100 | 100 | 90 |
| பாகற்காய் | 80 | 60 | 100 | 70 | 120 | 100 | 120 |
| வெண்டிக்காய் | 100 | 40 | 100 | 60 | 80 | 80 | 60 |
| கருணைக் கிழங்கு | 120 | — | 100 | 100 | 120 | 100 | 120 |
| பயற்றங்காய் | 50 | 30 | 100 | 40 | 60 | 40 | 50 |
| லீக்ஸ் | 140 | 80 | 100 | 100 | 120 | 120 | 120 |
| பீற்றூட் | 140 | 35 | 20 | 40 | 50 | 40 | 40 |
| கறிமிளகாய் | 120 | 80 | 100 | 100 | 120 | 100 | 120 |
| முருங்கைக்காய் | 150 | 140 | 300 | 180 | 160 | 160 | 200 |
| போஞ்சி | 200 | 140 | 200 | 180 | 200 | 140 | 180 |
| கத்தரிதம்புள்ள | 50 | 30 | 20 | 50 | 40 | 50 | 40 |
| கீரை - 1 பிடி | 40 | 30 | 20 | 20 | 20 | 30 | 40 |
| தேசிக்காய் | 300 | 220 | 300 | 200 | 200 | 200 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 15-30 | 50 | 25 | 20-30 | 40 | 50 |
| இராசவள்ளி | — | — | — | — | — | 170 | — |
| வெங்காயப்பூ | 80 | — | — | — | 160 | 140 | 160 |
| முள்ளங்கி | 60 | 25 | — | 40 | 80 | 60 | 40 |
| பொன்னாங்காணி | 40 | 10 | 40 | 30 | 40 | 20 | 30 |
| வல்லாரை | 10 | 10 | 10 | 20 | 20 | 15 | 10 |
| ஈரப்பலா | 40 | 30 | 20 | 40 | 30 | — | 60 |

கோழைகள்தான் வன்முறையில் ஈடுபடுவார்கள். வீரர்கள் எப்பொழுதும் சமாதானத்தைத் தான் நாடுவார்கள். – நேருஜி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## மக்களின் அச்சமற்ற போராட்டங்களே எம் இருப்பை இன்றுவரை பாதுகாக்கிறது

எதிர்வரும் 24ஆம் திகதி மாபெரும் பேரணி ஒன்றை அகிம்சை வழியில் முன்னெடுக்க தமிழ் மக்கள் பேரவை பகிரங்க அழைப்பு விடுத்துள்ளது.

- சட்டவிரோத பௌத்த சிங்கள குடியேற்றத்தைத் தடுத்தல்.
- சர்வதேச போர்க்குற்ற விசாரணை.
- தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை.
- இனப்பிரச்சினைக்கான தீர்வு உள்ளிட்ட விடங்களை வலியுறுத்தி தமிழ் மக்கள் பேரவையால் இந்த மாபெரும் பேரணி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமூகம், தமிழ் அரசியல் கட்சிகள், பொது அமைப்புகள், தொழிற் சங்கங்கள், உயர்கல்வி நிறுவனங்கள் உள்ளிட்ட அனைத்து அமைப்புக்களையும் பொது மக்களையும் இப் பேரணியில் கலந்து கொள்ளுமாறு தமிழ் மக்கள்பேரவை தமிழின் பெயரால் கேட்டுள்ளது.

இத்தகையதோர் நிலையில் போருக்குப் பின்பு தமிழர் தாயகத்தில்– யாழ்ப்பாண மண்ணில் நடக்கின்ற மிகப்பெரிதான பேரணியாக இது அமையும் எனப் பலரும் எதிர்பார்க்கின்றனர்.

முற்றுமுழுதாக ஜனநாயகப் பண்புடன் அகிம்சை வழியில் அமைதியான முறையில் இலட்சக் கணக்கான தமிழ் மக்கள் பங்கேற்ற பேரணியாக இது அமையும்போது, இதன் தாக்கமானது,

- தமிழ் மக்கள் கேட்பது நியாயமானது என்ற ஒரு கருத்தியலை சர்வதேச மட்டத்தில் ஏற்படுத்தும்.
- தமிழ் மக்களின் கோரிக்கைகளை அசட்டை செய்கின்ற ஆட்சித் தரப்பின் நிலைப்பாடுமாறும்.
- அகிம்சை வழியில்–இனப்பிரச்சினைக்கான தீர்வைக் கூறுங்கள் என்று தமிழ் மக்கள் கேட்பதானது நியாயமானது என்ற நிலைப்பாட்டை சிங்கள மக்களிடம் ஏற்படுத்தும்.

ஒட்டுமொத்தத்தில், தமிழ் மக்கள் தாங்கள் அனுபவிக்கும் துன்பதுயரங்களை எடுத்தியம்புவதற்காகவும் நாங்கள் நிம்மதியாக வாழ்வதற்கு சர்வதேச சமூகம் இன்று வரை எதையும் உருப்படியாகச் செய்யவில்லை என்ற செய்தியினை உலகின் செவியில் இடித்துரைப்பதற்கும் தமிழ் மக்கள் தங்களுக்கான உரிமை விடயத்தில் விழிப்பாகவே இருக்கின்றனர் என்ற தகவலை சொல்வதற்கும் இப் பேரணிதான் ஒரே வழி என்று தமிழ்ப் புத்திஜீவிகளும் தமிழ் பற்றாளர்களும் பொது மக்களும் கருதுகின்றனர்.

இக் கருத்தியல் நியாயமானது. ஏனெனில், தமிழர் தாயகத்தில் அண்மைக்காலத்தில் நில அபகரிப்புகளில் ஈடுபட்டபோது அந்தந்தப் பிரதேச மக்கள் துணிச்சலுடன் அதனை எதிர்த்தனர்.

அதன் காரணமாக படையினருக்காக காணி அளப்பது, காணி அபகரிப்பது என்ற விடயங்கள் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளன.

மயிலிட்டி இறங்கு துறையை தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் உள்நோக்கத்துடன் கீரிமலையில் இறங்குதுறை அமைக்கும் பணியில் படையினர் ஈடுபட்ட போது, அதனை பொது அமைப்புகள் எதிர்த்த தன் காரணமாக அந்த முயற்சி கைவிடப்பட்டது.

இதேபோன்று நயினாதீவு நாகவிகாரைக்கு முன்பாக கடல் பிரதேசத்தில் 67அடி உயரமான புத்தர் சிலையை அமைப்பதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகள் இன்று வரை மக்களின் கடும் எதிர்ப்புக்கு ஆளாகியுள்ளது. இதன் காரணமாக அந்த முயற்சியை முன்னெடுக்க முடியாமல் சம்பந்தப்பட்டவர்கள் திக்குமுக்காடுகின்றனர்.

இவ்வாறாக எங்கள் தமிழ் மக்கள் சிறு குழுக்களாக சேர்ந்தேனும் சட்டவிரோதச் செயல்களுக்கு தமது எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றனர். இவ்வாறான எதிர்ப்புக்கள் எங்கள் கிராமங்களை, ஊர்களை, எல்லைகளை, கலாசாரங்களை, சமயத்தை எங்கள் வரலாற்று பதிவுகளை காப்பாற்றி வருகின்றன என்ற உண்மைகளையும் உணர வேண்டும்.

இந்த அடிப்படையில் இப்போது எங்களிடம் இருக்கக்கூடிய பிரமாஸ்திரமாகிய ஒன்று பட்ட மக்கள் சக்தியை பேரணியாக்கிக் காட்டுவதே ஒரே வழியாகும்.

அந்த பிரமாஸ்திரம் எங்களையும் ஒற்றுமைப் படுத்தும்; தமிழ்மீது பற்றுறுதி கொள்ளச் செய்யும். அதேபோல் சர்வதேசத்தையும் நல்லாட்சியையும் நாங்கள் தமிழர்களுக்கு ஏதேனும் செய்தோமா? என்று சிந்திக்க வைக்கும் என்பது சர்வநிச்சயம்.

# மைத்திரியாலும் தமிழர் வாழ்வில் மாற்றமில்லை

## சித்தார்த்தன் எம்.பி. ஆதங்கம்

(யாழ்ப்பாணம்)

எமது மக்கள் சமார் 80 சதவீதமளவிற்கு மேல் நம்பிக்கையுடனும் எதிர்பார்ப்புடனும் ஒரு மாற்றத்திற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு வாக்களித்துள்ளார்கள்.

ஆனால், மாற்றம் ஏற்படவில்லை. மிக மெதுவாகவே ஒரு சில நடவடிக்கைகள் நகர்ந்து கொண்டு செல்கின்றன என யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் தெரிவித்தார்.

சில்லாலை வட மத்தி கிராம அபிவிருத்தி சங்கத்தின் பொதுக்கூட்டமும் மாணவர்களுக்கான கௌரவிப்பும் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இந் நிகழ்வில் கலந்து கொண்ட அவர் மேலும் தெரிவிக்கையில்,

காணி விடுவிப்பு, சிறைச்சாலையில் உள்ள தமிழ் இளைஞர்களின் விடுவிப்பு, காணாமற்போனவர்கள் தொடர்பான விடயங்கள் மற்றும் அன்றாடப் பிரச்சினைகள் தொடர்பில் மெதுவாகவே நடவடிக்கைகள் நகர்ந்துவருகின்றன. இவைதொடர்பில் துரிதப்படுத்த வேண்டும். மக்களின் வாழ்க்கை நிலைகள் மீண்டும் சகஜமான நிலைக்கு அல்லது முன்னேற்றமான நிலைக்கு வரவேண்டும் என்ற நிலைப்பாடு இருந்து கொண்டிருக்கின்றது.

போராட்டம் என்ன காரணத்திற்காக ஆரம்பிக்கப்பட்டதோ அந்த அடிப்படைக் காரணங்கள் தீர்க்கப்படாமல் நியாயமான அரசியல் தீர்வு ஒன்றை பெற்றுக் கொள்ளாமல் எங்களுடைய முழுமையான பிரச்சினைகளை தீர்த்துக் கொள்வது கடினம் என்பதை நாம் அனைவரும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

எங்களுடைய பகுதிகளில் இருக்கக்கூடிய பிரச்சினைகளை நாங்களே தீர்த்துக் கொள்ளக்கூடிய வகையிலான ஒரு அரசியல் தீர்வொன்று வழங்கப்பட்டு அத்தீர்வு சரியான முறையில் நடைமுறைப்படுத்தப்படுவதன் மூலம் தான் எங்களுடைய மக்களுடைய வாழ்க்கை முன்னேற்றம் அடையும்.

மாகாண சபை இருக்கிறது. அதனால் ஒன்றும் கிடைக்கவில்லை என நினைக்கலாம். ஆனால், மாகாண சபைக்கு குறிப்பிட்ட அளவு தான் நிதி கிடைக்கிறது. அதுவும் எதற்காக செலவு செய்ய வேண்டும் என்ற நிலைப்பாட்டில் தான் அவை கிடைக்கிறன. மிக சொற்பமான நிதியை வைத்துக்கொண்டு தான் சில விடயங்களை செய்து கொண்டிருக்கிறார்கள்.

அதேநேரத்தில், மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அமோக வெற்றிபெற்றது. முதலமைச்சராக சி.வி.விக்கினேஸ்வரன் நியமிக்கப்பட்டுள்ளார். அவ்வாறு நியமிக்கப்பட்டும் மாகாணசபைக்குள் பல குழப்பங்கள் காணப்படுகின்றன. சபை அமர்வுகள் கூட ஆக்கபூர்வமாக நடைபெறுவதில்லை என்பதை பத்திரிகையூடாக பார்க்கின்றோம். இத்தகைய நிலைமைகள் ஆரோக்கியமான சூழ்நிலைகள் அல்ல.

நாங்கள் அழிவிலிருந்து மீள முயற்சித்துக்கொண்டிருக்கின்ற இனம். அத்தகைய ஒரு இனத்தினைச் சேர்ந்த மக்கள் ஒற்றுமையாக இருக்கின்றனர் என்பதை நடைபெற்று நிறைவடைந்த தேர்தல் பெறுபேறுகளின் ஊடாக மக்கள் தெளிவாக காட்டியுள்ளார்கள்.

அவ்வாறிருக்கையில், தற்போது கட்சிகள், தலைமைகள், ஒற்றுமையாகவும் அங்கத்தவர்கள் ஒற்றுமையாக செயற்படுவதன் மூலம் தான் எங்களுடைய மக்களுடைய வாழ்க்கையை, வாழ்க்கைத் தரங்களை உயர்த்த முடியும். எமக்கான உரிமைகளை பெற்றுக் கொள்ளமுடியும். இதன் மூலம் தான் எமக்கு அடுத்து வரும் சந்ததிகள் வளமான வாழ்வை வாழ்வதற்கான சிறப்பான எதிர்காலம் உருவாகும். பூரணமான விடுதலை எதுவென்க் கூறுவதாகவிருந்தால் முதலாவதாக தேசிய விடுதலை. மற்றையது மக்களுடைய வாழ்க்கைத் தரங்கள் உயரவேண்டும். இவை இரண்டிலும் நாங்கள் பின்தள்ளிநின்றதன் தற்போதும் இருக்கின்றோம்.

இவற்றை முன்னோக்கிச் செல்வதற்கு மக்களுடைய அழுத்தம் கட்டாயம் இருத்தல் வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.(இ-7-10)

## வேலை நிறுத்தம் குறித்து துண்டுப்பிரசுரம்

அரச சேவை தொழில் உத்தியோகத்தர் சங்கமும் சுயாதீன தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பும் இணைந்து நாடளாவிய ரீதியிலான தொடர் வேலை நிறுத்த தொழிற்சங்கப் போராட்டத்தை நடத்தி வருகின்றன.

தொழிற்றிணைக்களமானது தனது நூற்றாண்டு நிறைவை அண்மித்துக் கொண்டிருக்கும் நிலையில் அதன் சேவைகள் இதுவரை மேம்படுத்தப்படாமை, அதன் தூண்களாக விளங்கும் தொழில் உத்தியோகத்தர்களின் கோரிக்கைகள் எவையும் நிறைவேற்றப்படாமை போன்ற விடயங்களை சுட்டிக்காட்டி 07.09. 2016 முதல் நாடளாவிய ரீதியில் தொடர் வேலை நிறுத்தப் போராட்டத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை யாழில் நேற்று துண்டுப் பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டன. (இ-7)

## சந்நிதி ஆலயச் சூழலில் இன்று

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலய மஹோற்சவத்தை முன்னிட்டு தினமும் மாலை 4 மணி முதல் 6 மணி வரை ஆலய முன்றலில் அமைக்கப்பட்டுள்ள விசேட மேடையில் நிகழ்வுகள் இடம் பெற்று வருகின்றன.

இந்நிகழ்வில் இன்று 15 ஆம் திகதி வியாழக்கிழமை தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவர் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகனின் சிறப்பு நிகழ்வுகள், மதுரகவி காரை. எம்.பி.அருளானந்தத்தின் மஹோற்சவத்தில் இரதோற்சவம் எனும் தலைப்பில் பிரசங்கம், யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் நல்லை க.கண்ணதாசன் குழுவினரின் இசைக்கச் சேரி என்பன இடம் பெறும்.(இ-3)

## சத்திய தரிசனம்



### சோதனைகளை ஏற்றுக்கொள்ளுங்கள்

❖ சோதனைகள் என்பவை அவன் அருளுக்கே அடையாளம். அவன் கோபத்துக்கு அல்ல. அவன் இனிமையே வடிவானவன். இனிப்பு எப்படி கசக்க முடியும்?

❖ கரும்பு வெட்டப்பட்டு, பிழியப்பட்டு, கொதிக்க வைக்கப்பட்டு, வடிகட்டப்படுவதை வரவேற்க வேண்டும். ஏனெனில் இச்சோதனைகள் இல்லை எனில் அக்கரும்பு காய்ந்து விடும். ஒருநாளும் இனிக்காது. அதுபோலவே மனிதனும் தனக்கு ஏற்படும் சோதனைகளை விரும்பி ஏற்க வேண்டும். ஏனெனில் இவற்றால்தான் உள்ளிருக்கும் ஆத்மாவிற்கு இனிமையைக் கூட்டித்தர முடியும்.

❖ உங்களில் சிலருக்குச் சோதனைகளும், ஏமாற்றங்களும் ஏற்படும்போது நான் உங்களைப் புறக்கணித்துவிட்டதாகத் தோன்றலாம். ஆனால் இவை போன்ற கஷ்டங்கள் உங்களுடைய குணத்தை வலுப்படுத்தும். உங்களுடைய நம்பிக்கையை ஊர்ஜிதப்படுத்தவும் செய்யும். சுவரில் படத்தை மாட்டுவதற்காக ஆணி அடிக்கும்போது, ஆணியை அது நன்றாக பதிந்திருக்கிறதா? படத்தைத் தாங்கும் வலிமை உள்ளதா என்று பார்க்க ஆட்டிப் பார்க்கிறோம் அல்லவா! அதுபோலவே நம்முடைய மனதில் இருக்கும் பகவானின் படம் (உருவம்) கீழே விழுந்து உடைந்துவிடாமல் இருக்க இதயத்தில் அடிக்கப்பட்டிருக்கும் பகவத்நாமா என்ற ஆணியைச் சோதனைகள் மூலம் அசைத்துப் பார்த்து அதன் உறுதியைத் தீர்மானிக்கிறோம்.

❖ பரிபூரண ஞானத்தை அடைய படிப்பு மட்டும் போதாது.

❖பிசைந்த மாவு பக்குவப்படுகின்றது. இன்னல்களைச் சந்தித்தவனும் பக்குவப்படுகிறான்.

❖ தோட்டக்காரன் மலர்ந்த பூக்களைப் பறிப்பதைப் பார்த்து மொட்டுகள் நாமும் பறிக்கப்பட்டு இறைவன் அடியை அடைய வேண்டுமென எண்ணுகின்றன. அந்த எண்ணமே அவற்றை மறுநாள் மலரச் செய்கிறது.

## கணனிப் பயிற்சி நெறிகள்

கரவெட்டி பிரதேச செயலக விதாதாவள நிலையத்தில் ஒக்டோபர் மாதம் கணனி வலையமைப்பு பயிற்சி நெறி, கணனி வன்பொருள் பயிற்சி நெறி என்பன ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதில் பங்குபெற விரும்புவோர் எதிர்வரும் 23 ஆம் திகதிக்கு முன்னர் கரவெட்டி பிரதேச செயலக விதாதாவள நிலையத்தில் தமது பெயர்களைப் பதிவு செய்து கொள்ளுமாறு பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். (இ)

## ஊரடங்கு உத்தரவு இரத்து

பெங்களூரில் 16 இடங்களில் பிறப்பிக்கப்பட்டு இருந்த ஊரடங்கு உத்தரவு ரத்து செய்யப்பட்டது. பெங்களூரில் படிப்படியாக அமைதி திரும்புவதால் ஊரடங்கு உத்தரவு ரத்து செய்யப்பட்டுள்ளது. தமிழகத்திற்கு காவிரி ஆற்றில் இருந்து தண்ணீர் திறந்துவிடப்படுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து கன்னட அமைப்பினர் கண்டனங்களை தெரிவித்து வருகின்றனர். தண்ணீர் திறப்புக்கு எதிராக கர்நாடகாவில் முழு அடைப்பு போராட்டமும் நடைபெற்றது.


இதனிடையே தமிழக எணகொண்ட பேருந்துகள், லொறிகள் மற்றும் கார்கள் என வாகனங்கள் எரிக்கப்பட்டன. இதனையடுத்து பெங்களூரில் நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் 2 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில் காவிரி விவகாரத்தில் உச்சநீதிமன்ற தீர்ப்பை அடுத்து அமைதியை நிலை நாட்ட பெங்களூர் முழுவதும் 144 தடை உத்தரவை பொலிஸ் பிறப்பித்தது. சட்டம் ஒழுங்கு குறித்து உச்சநீதிமன்றம் கண்டனம் தெரிவித்ததை அடுத்து பெங்களூரில் 144 தடை உத்தரவு பிறப்பித்தது. இந்நிலையில் 16 இடங்களில் அமுலில் இருந்த 144 தடை உத்தரவை ரத்து செய்வதாக கர்நாடக அரசு அறிவித்துள்ளது. (இ-7)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வெள்ளிக்கிழமை காலை 8 மணியிலிருந்து 5.30 மணி வரை **கிளிநொச்சி பிரதேசத்தில்** சிலாவத்தை, உடுப்புக்குளம், அளம்பில், குமுழமுனை, செம்மலை, நாயாறு, கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி, கொக்கிளாய், கடற்றொழில் கூட்டுறவுச் சங்கம், அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

# சொந்த சாதனையை தகர்த்தார் அருணோதயக் கல்லூரி வீரர்



தான் படைத்த சொந்த சாதனையை தகர்த்து புதிய சாதனையை புதுப்பித்துக் கொண்டார் அருணோதயக்கல்லூரி வீரர் க.நெப்தலி ஜொய்சன்.

சேர்.ஜோன் டாபட் சிரேஷ்ட மெய்வல்லுநர் போட்டிகள் தியகம மகிந்த ராஜபக்ஷ மைதானத்தில் நேற்று முன்தினம் ஆரம்பமாகியது.

இதில் அளவெட்டி அருணோதயக் கல்லூரி மாணவன் க.நெப்தலி ஜொய்சன் 18 வயதுப்பிரிவின் கீழ் 4.56 மீற்றர் உயரம் பாய்ந்து புதிய சாதனை படைத்துள்ளார்.

2014ஆம் ஆண்டு 18வயதுப் பிரிவின் கீழ் தான் நிலைநாட்டிய 4.21 மீற்றர் சாதனையை தகர்த்தே மேற்படி சாதனையை நிலைநாட்டியுள்ளார்.

இவ் உயரமானது வடக்கின் அனைத்து வயதுப்பிரிவிலும் அதிஉயர் பெறுபேறு என்பது குறிப்பிடத்தக்கது.

இப்போட்டியில் 3.70மீற்றர் உயரத்தை தாவி தெல்லிப்பழை மகாஜனா கல்லூரி மாணவன் எஸ்.கபில்ஷன் வெண்கலப் பதக்கத்தை வென்றார். (கு)

# திருபரன் சிறப்பாட்டம் அரையிறுதியில் இளம்பிறை

வளர்மதி விளையாட்டுக்கழகம் நடத்தும் 6 பந்து பரிமாற்றங்கள் 8வீரர்கள் கொண்ட மென்பந்து போட்டியில் இளம்பிறை விளையாட்டுக்கழகம் அண்மையில் நடைபெற்ற காலிறுதி போட்டியில் சங்கானை கொட்டடி இளங்கதிர் அணியுடன் மோதி வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

போட்டியின் ஆட்டநாயகனாக 30 ஓட்டங்களையும் 2விக்கெட்டினையும் கைப்பற்றிய திருபரன் தெரிவானார். (கு)

# Northern Challengers உதைபந்தாட்ட சுற்றுத்தொடர்



ஞானமுருகன் வெற்றி

நெடியகாடு இளைஞர் விளையாட்டுக்கழகம் நடத்தி வரும் Northern Challengers உதைபந்தாட்டத் தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில் மயிலிட்டி கண்ணகி அணியை 8:0 என்றகோல் கணக்கில் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்குள் நுழைந்தது ஞானமுருகன் விளையாட்டுக்கழ கம். (கு)

# அரையிறுதியில் ஐங்கரா வி.கழகம்

கொம்மந்தறையில் இளைஞர் விளையாட்டுக்கழகம் நடத்தும் Northern kings permer league கிரிக்கெட் போட்டியில் நடைபெற்ற ஆட்டத்தில் முதல் போட்டியில் புத்தூர் ஞானவைரவர் விளையாட்டுக்கழகத்தையும் இரண்டாவது போட்டியில் ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக்கழகத்தையும் மூன்றாவது போட்டியில் கொக்குவில் பிரம்படி விளையாட்டுக் கழகத்தையும் வெற்றி கொண்டு அரையிறுதிக்கு முன்னேறியது ஐங்கரா விளையாட்டுக்கழகம். (கு)

# கிரிக்கெட் போட்டிக்கு விண்ணப்பிக்குக

காந்திஜீ விளையாட்டுக்கழகம் நடத்தும் மென்பந்து போட்டிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

அணிக்கு 5 ஓவர்கள் 7பேர் கொண்ட போட்டியானது எதிர்வரும் சனி,ஞாயிறு ஆகிய தினங்களில் நடைபெறவுள்ளது.

மேற்படி போட்டிக்கு விண்ணப்பிக்கும் விளையாட்டுக்கழகங்கள் 077 917 5241 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் உடனடியாக தொடர்பு கொண்டு பதிவினை மேற்கொள்ளுமாறு போட்டி ஏற்பாட்டுக்குழுவினர் கேட்டுக்கொண்டுள்ளனர். (கு)

# இன்றைய போட்டிகள்

வலிகாமம் வடக்கின் அனுமதியுடன் குப்பிளான் குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக் கழகம் நடத்தும் வடமாகாண ரீதியிலான அழைக்கப்பட்ட கழகங்களுக்கிடையிலான ''வடக்கின் வல்லரசன்'' உதைபந்தாட்ட போட்டியில் இன்று புதன்கிழமை மாலை 6.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் ஸ்கந்தாஸ் ரார்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து எவரெஸ்ட் விளையாட்டுக் கழகமும் இரவு 7.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் புத்தூர் விக்னேஸ்வரா விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து பாசையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழகமும் தொடர்ந்து நடைபெறும் போட்டியில் நவிண்டில்கலைமதி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து கரைவைச் சுடர் விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளது. (கு)

# இருதயராஜா உதைபந்தாட்ட தொடர் சென்.மேரிஸ்-துறையூர் ஐயனார்





இன்று பலப்பரீட்சை

மெலிஞ்சிமுனை இருதயராஜா உதைபந்தாட்டத்தொடரில் கடந்த 05.09.2016 அன்று போதிய வெளிச்சம் காரணமாக இடைநிறுத்தப்பட்ட போட்டி இன்று நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் துறையூர் ஐயனார்விளையாட்டுக்கழகத்தைஎதிர்த்து நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக்கழகம் போட்டியிடவுள்ளது.

இப்போட்டியானது இன்று மாலை 4மணிக்கு கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது. (கு)

# சுழல் கிண்ண உதைபந்து இறுதிப்போட்டியில் ரேவடி



தீருவில் விளையாட்டுக்கழகம் நடத்தும் சுழல் கிண்ண 7நபர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அரை இறுதி ஆட்டத்தில் தீருவில் அணியை 2-0 என்ற கணக்கில் வெற்றிபெற்று இறுதிப்போட்டிக்குள் நுழைந்தது ரேவடி அணி. (கு)

# மேற்கிந்தியத்தீவு பயிற்சியாளர் அதிரடியாகப் பதவி நீக்கம்

மேற்கிந்திய தீவுகள் கிரிக்கெட் அணியின் பயிற்சியாளராக பிலிப் சிம்மான்ஸ் பணியாற்றி வந்தார். அவரை நேற்றுமுன்தினம் அப்பதவியில் இருந்து மேற்கிந்திய தீவுகள் கிரிக்கெட் வாரியம் விடுவித்துள்ளது. அணியில் புதிய அணுகுமுறை புகுத்த வேண்டும் என்று மேற்கோள் காட்டி இந்த முடிவு எடுக்கப்பட்டதாக கிரிக்கெட் வாரியம் தெரிவித்துள்ளது. மேலும் பிலிப் சிம்மான்ஸ் அளித்த பங்களிப்புக்கும் நன்றியும் தெரிவித்து இருக்கிறது.

சமீபத்தில் நடந்த இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரை மேற்கிந்திய தீவுகள் அதன் சொந்த மண்ணில் இழந்தது என்பது குறிப்பிடத்தக்கது. சிம்மான்ஸ் பயிற்சியின் கீழ் மேற்கிந்திய தீவுகள் அணி ஏப்ரல் மாதம் நடந்த 20 ஓவர் உலகக்கோப்பையில் சம்பியன் பட்டம் வென்று இருந்தது.

# மீண்டுமொரு களச்சாவு

செக் குடியரசில் 16 வயதிற்குட்பட்டோருக்கான ஐஸ்ஹாக்கி தொடர் நடைபெற்றது. இதில் கடந்த மாதம் 25 ஆம் திகதி வாரியர் ப்ர்நொ - யங் ட்ராகான்ஸ் சும்பெர்க் அணிகளுக்கு இடையிலான போட்டி நடைபெற்றது. இந்த போட்டியில் பாவெல் லைங்கா என்ற 24 வயது வாலிபர் நடுவராக செயற்பட்டுக் கொண்டிருந்தார். போட்டி நடக்கும் போது லைங்கோ தலை மீது ரப்பர் பந்து (PUCK) பலமாக தாக்கியது. இதனால் காயம் அடைந்த லைங்கா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அங்கு கடந்த சில நாட்களாக சிகிச்சை பெற்று வந்த லைங்கா கடந்த 10 ஆம் திகதி சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

## விடுதலைப்...

நடைபெற்ற காலப்பகுதியிலேயே மலேஷியாவில் இலங்கை உயர்ஸ்தானிகர் அன்சார் மீது மிலேச்சத்தனமான தாக்குதல் நடத்தப்பட்டிருந்தது.

இந்த தாக்குதலின் அர்த்தம் என்னவென அந்த மாநாட்டில் பங்கேற்ற சர்வதேச மட்டத்தில் மதிப்புமிக்க ஒருவர் என்னிடம் கேட்டார். தாக்குதல் நடத்தும் வீடியோவை பார்த்திருந்தார்கள்,

அந்த சம்பவம் தொடர்பில் கருத்து தெரிவிப்பதற்கு தன்னிடம் வார்த்தைகளை இல்லையென அவர் குறிப்பிட்டார். இதனை நாம் எவ்வாறு அர்த்தப்படுத்துவது. யுத்தம் நடைபெற்ற எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இது போன்ற சம்பவங்கள் இடம்பெறவில்லை.

தமிழீழ விடுதலை புலிகளுக்கு அதன் உறுப்பினர்களுக்கு உள்ள தைரியம் இந்த தாக்குதல் மூலம் இன்று உலகத்தின் முன் நிரூபணமாகியுள்ளது. எந்தவொரு பிரச்சினையும் இன்றி அச்சமும் இன்றி இலங்கையின் உயர்ஸ்தானிகர் மீது இவ்வாறான தாக்குதல் நடத்துவதற்கு அவர்களுக்கு பலமும் சக்தியும உள்ளது. அதற்கு காரணம் என்ன? இவ்வாறான சம்பவங்கள் தொடர்பில் சிறிசேன- விக்கிரமசிங்க அரசாங்கத்திற்கு தீர்மானமொன்றுக்கு வர முடியாது என்பது அவர்களுக்கு தெளிவாகத் தெரியும். நன்றிக்கடன் செலுத்தும் செயற்பாடே இங்கு இடம்பெறுகின்றது.

அது அவர்களுக்கு நன்றாக தெரியும். அதனால் தான் மனதில் எந்தவொரு அச்சமும் இன்றி இது போன்ற சம்பவங்களில் ஈடுபடுவதற்கு பயங்கரவாதிகளுக்கு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. இது இத்துடன் முடிவுக்கு வராது என்றார் பீரிஸ்,

இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் மேலும் கருத்து வெளியிட்ட ஜி.எல்.பீரிஸ், போர் குற்றங்களை விசாரிப்பதற்காக அமைக்கப்படவுள்ள நீதிமன்ற விசாரணைப் பொறிமுறை தொடர்பில் சர்வஜன வாக்கெடுப்பொன்றை நடத்தி மக்களின் அனுமதியை பெறவேண்டும் என வலியுறுத்தியுள்ளார். (செ-11)

## ஜனாதிபதிக்கு...

பதிக்கு காணப்பட்டது.

கெம்பல் மைதானத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஏறிய போது ஐக்கிய தேசியக் கட்சியினர் அளித்த மாபெரும் வரவேற்பு, சுதந்திரக் கட்சியின் குருநாகல் கூட்டத்தில் இருக்கவில்லை.

மைத்திரிபால சிறிசேன ஐக்கிய தேசியக் கட்சியின் ஆண்டு நிறைவு நிகழ்வில் பங்கேற்றிருக்காவிட்டால் நல்லது என்பதே சுதந்திர கட்சியின் உறுப்பினர்களது நோக்கமாக அமைந்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி எமது ஆண்டு நிறைவு நிகழ்விற்கு பொதுச் செயலாளர் ஒருவரை அனுப்பியிருந்தால் நாமும் பொதுச் செயலாளரை அனுப்பியிருக்க வேண்டும் அதை விடுத்து ஜனாதிபதியே நேரில் சென்றிருந்தமை மூலம் ஜனாதிபதிக்கு ஐ.தே.கவிலேயே அதிக ஆதரவு காணப்படுவது உறுதியாகியுள்ளது.

மேலும் 2020 சுதந்திரக் கட்சி ஆட்சி அமைப்பதாக குருநாகலில் கூறிய ஜனாதிபதி, கொழும்பில் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் மாநாட்டில் அவர் இதனைக் கூறவில்லை எனவும் நாமல் சுட்டிக்காட்டியுள்ளார். (செ-11)

## வருகை விசா நிறுத்தம் பங்களாதேஷ் பதிலடி

பங்களாதேஷ் பிரஜைகளுக்கான வருகை விசா முறையை இலங்கை அரசாங்கம், அந்த நாட்டுக்கு அறிவிக்காமலேயே நிறுத்தியதைத் தொடர்ந்து பங்களாதேஷும் இலங்கைப் பிரஜைகளுக்கு வழங்கி வந்த வருகை விசா முறையை நிறுத்தியுள்ளது. இந் நிலையில் இலங்கை உயர்ஸ்தானிகர் யசோஜா குணசேகரவை அழைத்து இது குறித்து அந்நாட்டு வெளிவிவகார அமைச்சு விளக்கம் கோரியுள்ளது.

இது தொடர்பில் அதிருப்தியை வெளியிட்டுள்ள பங்களாதேஷ் வெளிவிவகார அமைச்சின் மேலதிக செயலாளர் கம்ஷரூல் அஷன், என்ன காரணத்திற்காக வருகை விசா நிறுத்தப்பட்டது என்பதனை அறிந்துகொள்ள விரும்புவதாகவும் தெரிவித்துள்ளார். இதற்கு பதிலளித்துள்ள இலங்கை உயர்ஸ்தானிகர் தான் இதுபற்றி அறிந்திருக்கவில்லை எனவும், தனது நாட்டு வெளிவிவகார அமைச்சுடன் தொடர்பு கொண்டு விடயத்தை அறிந்து வந்து மீண்டும் சந்திப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார். (செ-11)

# முறையான நடவடிக்கைகள் மூலம் போதைப் பாவனை தடுக்கப்படும்

### கவனமெடுப்பதாக ஜனாதிபதி தெரிவிப்பு



(கொழும்பு)

போதைப்பொருட்களை நாட்டுக்குள் கொண்டுவருதலை தடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் கடந்த காலங்களை விட முறையாகவும் திட்டமிட்ட வகையிலும் செயற்றிறனாக முன்னெடுத்தல் தொடர்பாக அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளதாக ஜனாதிபதி குறிப்பிட்டார்.

எமது நாடு ஓர் அழகிய தீவாக காணப்பட்ட போதும் கடத்தற்காரர்கள் அதனை பிழையாகப் பயன்படுத்துவதாகக் குறிப்பிட்ட ஜனாதிபதி இன்று வெளிநாடுகளில் இருந்து பாரியளவிலான போதைப் பொருட்கள் எமது நாட்டிற்குக் கடத்தப்படுவது பாரதூரமானதொரு சவாலாக மாறியுள்ள தெனத் தெரிவித்தார்.

பிற்பகல் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற "மதுவிலக்கு விருதுவிழா" வில் உரையாற்றிய போதே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இதனைத் தெரிவித்தார்.

மதுவிற்கு அடிமையானவர்களை அதிலிருந்து மீட்டெடுத்து அபிமானமிக்க பிரஜைகளாக சமூக மயப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு "மித்துரு மித்துரோ" அமைப்பு 9 ஆவது முறையாக இவ்விருது வழங்கும் விழாவை ஏற்பாடு செய்தது.

இங்கு உரையாற்றிய ஜனாதிபதி கடந்த காலங்களில் நாட்டில் புகைபிடித்தல் ஒப்பீட்டு ரீதியாகக் குறைவடைந்துள்ள போதிலும் போதை மாத்திரைகள் மற்றும் போதைப் பொருள் பாவனை அதிகரித்துள்ளதாகக் குறிப்பிட்டார். போதைப்பொருள், போதை மாத்திரைகள் போன்றே சட்டவிரோத மதுசாரங்கள் இன்று பாடசாலைகளுக்கு அண்மையிலும் கிராமங்களிலும் வியாபிக்கத் தொடங்கியுள்ளதுடன் இதனைத் தடுப்பதற்காக அரசாங்கம் உயர்ந்தபட்ச நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக ஜனாதிபதி மேலும் குறிப்பிட்டார்.

இப்பணியினை அரசாங்கத்தினால் மாத்திரம் வெற்றி கொள்ள முடியாது என்பதுடன், சமூகத்தில் பொறுப்பு வாய்ந்த அனைவரினதும் கூட்டுப் பொறுப்பான இதனை மேற்கொள்வதற்கு அனைவரும் ஒன்றிணைய வேண்டு மென ஜனாதிபதி தெரிவித்தார்.

போதைப்பொருட்களுக்கு அடிமையான நபர்களின் தராதரம் எதுவாக இருப்பினும் அவர்களை சமூகத்திலிருந்து ஓரங்கட்டாது மனதில் உள்ள பீதியை அகற்றி சமூகத்தின் உயர் அந்தஸ்து வரை அவர்களை உயர்த்தி ஊக்கப் படுத்துவதன் மூலம் சமூகப் பொறுப்புள்ள மற்றும் கடமைப் பொறுப்புள்ள நபர்களாக சமூகமயப்படுத்துதல் "மித்துரு மித்துரோ" அமைப்பின் பணிப் பொறுப்பாகக்காணப்படுகிறது.

"மித்துரு மித்துரோ" அமைப்பின் தூதுவராக நியமிக்கப்பட்ட முன்னாள் பிரபல கிரிக்கெட் வீரரும் சர்வதேச கிரிக்கெட் பயிற்று விப்பாளர் ஒருவருமான ரொஷான் மஹாநாமவுக்கு உரிய நியமனக் கடிதத்தை இதன்போது ஜனாதிபதி வழங்கி வைத்ததுடன் போதைப் பொருள் தீங்கிலிருந்து இளைஞர். யுவதிகளை விடுவிப்பதற்காக முன்னின்றவர்களுக்கு ஜனாதிபதியினால் விருதுகள் வழங்கி வைக்கப்பட்டன.

மித்துரு மித்துரோ அமைப்பின் தோற்றுவிப்பாளர் சங்கைக்குரிய குப்பியாவத்தை போதானந்த நாயக்க தேரர் எழுதிய "அமத்த மத்ததனன தென" என்னும் நூல் இதன் போது ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது.

மித்துரு மித்துரோ அமைப்பின் தோற்றுவிப்பாளர் சங்கைக்குரிய குப்பியாவத்த போதானந்த தேரர், சங்கைக்குரிய ஓமல்பே சோபித தேரர் ஆகியோரும் அமைச்சர்களான விஜயதாச ராஜபக்ஷ, பாட்டலி சம்பிக்க ரணவக்க, தலதா அத்துகோரள, பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர உள்ளிட்ட பாதுகாப்புப் பிரிவின் பிரதானிகள் பலர் இதில் கலந்து கொண்டனர். (செ)

### வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம் III

# போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பித்த பல விண்ணப்பதாரிகளுக்கு ஏமாற்றம்

### தகுதி இருந்தும் நிராகரிக்கப்பட்டதாக விசனம்

(யாழ்ப்பாணம்)

வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைககளத்தின் கீழ் "வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம் III பதவிக்கான ஆட்சேர்ப்பிற்கான போட்டிப் பரீட்சைக்குத் தோன்ற தகுதி உள்ளவர்களும் நிராகரிக்கப்பட்டுள்ளதாக பாதிக்கப்பட்ட விண்ணப்பதாரிகள் வருத்தம் தெரிவித்துள்ளனர்.

வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களத்தில் வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம் - III பதவிக்கு ஆட்சேர்த்து கொள்ளுவதற்காக திறந்த போட்டி பரிட்சைக்கான விண்ணப்பம் கடந்த ஜனவரி மாதம் கோரப்பட்டிருந்தது.

இந்த நிலையில் பெப்ரவரி மாதம் 19 ஆம் திகதி விண்ணப்ப முடிவுத்திகதியாக அறிவிக்கப்பட்டு, பின்னர் மேலும் விண்ணப்பிப்பதற்கான கால அவகாசம் வழங்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் வடமாகாணத்தைச் சேர்ந்த பல நூற்றுக்கணக்கான இளைஞர் யுவதிகள் குறித்த பதவிக்கு விண்ணப்பித்திருந்தனர். விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் பரீட்சை கட்டணமாக 500 ரூபா யினை வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களத்தின் நிதி சேகரிப்பு கணக்கில் வைப்பிலிட்டு பற்றுச்சீட்டுக்களையும் அனுப்பி வைத்துள்ளனர்.

மேலும் குறித்த விண்ணப்பங்கள் பரிசீலினை செய்யப்பட்டு திறந்த போட்டி பரிட்சைக்கு அனுமதி வழங்குவதற்கு முன் வாழவின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களத்தினால் பல பகுதிகளில் போட்டி பரட்சைக்கான கருத்தரங்குகளும் கட்டணம் அறவிடப்பட்டு விண்ணப்பதாரிகளுக்கு நடத்தப்பட்டுள்ளது.

எதிர்வரும் 18ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை குறித்த போட்டிப்பரீட்சை இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் சுமார் 7 மாதங்கள் கழிந்த பின்னர் விண்ணப்பதாரிகளுக்கு திறந்த போட்டிப்பரீட்சைக்கான அனுமதிக் கடிதம் வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களத்தினால் தற்போது வரை அனுப்பட்டு வருகின்றது. மேலும் கடிதம் கிடைக்காதவர்கள் இணையத்தளங்களின் ஊடாகவும் (external.sjp.ac.lk) பார்வையிட்டு வருகின்றனர்.

அதில் பலரது விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளதென குறிப்பிடப்பட்டுள்ளதாக பாதிக்கப்பட்ட விண்ணப்பதாரிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

இந் நிலையில் விண்ணப்பதாரிகளுக்கு தற்போது அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில், வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களத்தில் வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர் - தரம் III இற்கு ஆட்சேர்த்து கொள்ளுவதற்கான திறந்த போட்டிப்பரீட்சை -2016 என குறிப்பிட்டு, 2016 ஜனவரி மற்றும் 2016 ஜனவரி 29 ஆம் திகதியில் முறையே இலக்கம் 1950 மற்றும் 1952 என்ற இலக்கங்களையுடைய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட மேற்படி பதவியில் ஆட்சேர்த்துக் கொள்ளும் வர்த்தமானி விளம்பரத்திற்கு அமைவாக சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பப் படிவம் தொடர்பில், வர்த்தமானி விளம்பரத்திற்கு அமைவாக தங்களினால் முன் வைக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தில் கீழ் குறிப்பிடப்படும் தகுதிகளை பூர்த்தி செய்யாததன் காரணத்தினால் தங்களது விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படுகின்றது.

என குறிப்பிட்டு விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்பட்டமைக்கான காரணமாக குறிப்பிட்ட கல்வித்தகைமையை பூர்த்தி செய்யவில்லை, 35 வயதை தாண்டியிருத்தல், குறிப்பிட்டிருந்த பரீட்சைக்கட்டணம் செலுத்தப்படாமல் காணப்பட்டமை மற்றும் கல்விச் சான்றிதழ்களின் பிரதிகள் சமர்ப்பிக்கப்படாமை போன்ற 4 காரணங்கள் குறிப்பிடப்பட்டு புள்ளடி இடப்பட்டு விண்ணப்பதாரிகள் பலருக்கு விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டுள்ளதாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மேலும் சகல தகைமைகளும் உள்ள பலரது விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டுள்ளமை விண்ணப்பதாரிகள் மனவிரக்தியடைந்துள்ளனர்.

கடந்த 3 வருடங்களுக்கு முன்னர் வட பகுதியில் தெரிவு செய்யப்பட்டு நியமிக்கப்பட்டுள்ள "சில வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு" உரிய கல்வித்தகைமைகள் இல்லை என குற்றஞ்சாட்டப்படும் நிலையில் அவர்கள் கடமைகளில் அமர்த்தப்பட்டுள்ள போதும், தகுதி உள்ள விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டமை அரசியல் பின்புலத்தின் மத்தி யில் மீண்டும் வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர்களை தெரிவு செய்வதற்கான நடவடிக்கையாக காணப்படுவதாக பாதிக்கப்பட்ட விண்ணப்பதாரிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

இதேவேளை எதிர்வரும் 18ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர் -தரம் III போட்டிப்பரீட்சைக்கு இதுவரை அனுமதிக் கடிதம் கிடைக்காதவர்கள் external.sjp.ac.lk என்ற இணையத்தளத்திற்கு சென்று தமது அனுமதியினை பார்வையிட முடியும் என்றும் அதில் உள்ள அனுமதிக்கடிதத்தை கிராம சேவகர் ஊடாக உறுதிப்படுத்திய பின்னர் பரீட்சைக்கு தோற்றமுடியும் என திணைக்களத்தால் அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-4-9)

# வடக்கு அரச...

வயதெல்லையாக முப்பத்தைந்தாக வயதெல்லையும் இருக்க வேண்டும் என 2011ஆம் ஆண்டு யூன் 29ஆம் திகதி அமைச்சரவை கூட்டத்தில் திருத்தியமைக்கப்பட்டு,நிர்வாக சுற்றறிக்கை 19/2011 ஆக வெளியிடப்பட்டு சகல அமைச்சுக்களின் செயலாளர்கள், மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள், திணைக்கள தலைவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

எனினும் வடக்கு மாகாணம் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மாகாணம் என்பதனால் பலர் பல்கலைக்கழக படிப்பை முடித்து விட்டு, யுத்தத்தினால் வேலைகளுக்கு விண்ணப்பிக்க முடியாத நிலையை அடைந்திருந்தனர். விண்ணப்பத்திற்குரிய வயதெல்லையை தாண்டியதன் காரணமாகவும் மேற்படி சுற்று நிருபத்திருக்கு அமைய பலர் விண்ணப்பிக்க முடியாத நிலையையும் அடைந்திருந்தனர்.

இது தொடர்பில் வடக்கு மாகாண சபையில் விவாதிக்கப்பட்டு, வயதெல்லை நாற்பதாக நீடிக்குமாறு,வடக்கு மாகாண சபையில் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டு பொதுச்சேவை ஆணைக்குழுவிடம் கோரப்பட்டது.

இந்த தீர்மானத்தை வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே ஏற்றுக்கொண்டு அதற்கான அனுமதியை வழங்கியுள்ளார். இந்த புதிய நடைமுறையின் படி ஏற்கெனவே வெளியிடப்பட்ட ஆட்சேர்ப்பு படிவங்கள் மீள பெறப்பட்டு,

நாற்பது வயதுவரை விண்ணப்பிக்க முடியும் என்ற மாற்றத்தை உள்ளடக்கி வடக்கு மாகாண பொதுச்சேவைகள் ஆணைக்குழு புதிதாக ஆட்சேர்ப்பு படிவங்களை வெளியிட்டுள்ளது எனவும் அவைத்தலைவர் தெரிவித்தார். (செ-4)

# இந்தியாவுக்கு...

கைவிட்டுள்ளதாக, சட்டமா அதிபர் மூலம் இலங்கை அரசாங்கம் நேற்று முன்தினம் உயர்நீதிமன்றத்தில் அறிவித்தது.

இதுகுறித்து கருத்து வெளியிட்டுள்ள கொழும்பிலுள்ள இந்திய தூதரக பேச்சாளர், ஈஷா சிறிவத்சவா, சம்பூர் விவகாரம் தொடர்பாக எந்த விடயங்களையும் இலங்கை அரசாங்கம் இது வரையில் தெரியப்படுத்தவில்லை என்று குறிப்பிட்டுள்ளார். (செ-11)

# சம்பூரை கை...

என்று அமைச்சரவை பேச்சாளரும் அமைச்சருமான ராஜித சேனாரட்ன தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (செ-11)

# ஆட்சி மாற்றம்...

சினைகளுக்கு முகங்கொடுப்பதற்கு அரசாங்கம் எடுத்துவருகின்ற செயற்பாடுகளை விமர்சித்து வருவதாகக் குறிப்பிட்ட ஜனாதிபதி, விமர்சனங்களை முன்வைப்பதை விடுத்து அவற்றுக்கு அவர்களிடம் உள்ள தீர்வுகளை முன் வைக்குமாறு தாம அழைப்பு விடுப்பதாகவும் தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் மலித் ஜயதிலக்கவினால் எழுதப்பட்ட நான் கண்ட ஜனவரி 08 நூல் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் பிற்பகல் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, தலைமையில் கொழும்பு கிங்ஸ்பெரி ஹோட்டலில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

ஜனவரி 08ஆம் திகதி கிடைத்த வெற்றியின் பெறுபேறுகளை நாட்டுக்கு பெற்றுக்கொடுக்க அர்ப்பணிப்புடன் செயற்படுவது அவ்வெற்றிக்காக உழைத்த எல்லோருடையதும் பொறுப்பாகும் எனக் குறிப்பிட்ட ஜனாதிபதி, நாட்டுக்காக இன்று நாம் செய்ய வேண்டிய பணிகளை செய்வதற்கு ஒன்றிணையுமாறு ஜனவரி 08 வெற்றிக்கு பங்களித்த, பங்களிக்காத எல்லோருக்கும் தாம் அழைப்பு விடுப்பதாகவும் தெரிவித்தார்.

ஜனவரி 08 மாற்றத்தை உண்மையாகவும் யதார்த்தமாகவும் கண்டு அது குறித்து எழுதிய ஆயிரக்கணக்கானவர்களில் விரல் விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலரே அதனை மிகச் சரியாக எழுதியுள்ளார்கள் எனத் தெரிவித்த ஜனாதிபதி, சமூக நீதி, சுதந்திரம், ஜனநாயகம் தொடர்பாகவும் ஊழல் மோசடிகள், அநீதிகள் தொடர்பாகவும் எழுதுகின்ற பலருக்கு ஜனவரி 08 மாற்றம் குறித்து உண்மையாக எழுதுவதற்கு இன்னும் முடியாமல் இருப்பது குறித்து தாம் கவலையடைவதாகவும் தெரிவித்தார்.

ஜனவரி 08 மாற்றம் தொடர்பான பல உண்மைகள் இன்னும் மறைந்திருப்பதாகவும் அவற்றை அச்சமின்றி வெளிக்கொண்டு வருவதற்கு நான் கண்ட ஜனவரி 08 நூலின மூலம் மலித் ஜயதிலக்க எடுத்துள்ள இந்த முயற்சியை தாம் பாராட்டுவதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

ஜனவரி 08 மாற்றம் அரசியலில் எவ்வளவு தூரம் சிக்கலானதொன்று என்பதும் ஆய்வு செய்யப்பட வேண்டிய ஒன்று என்பதும் அது பற்றி அறிந்துள்ள எல்லோருக்கும் நன்கு தெரியுமெனக் தெரிவித்த ஜனாதிபதி, அம்மாற்றம தொடர்பாக பேசப்பட வேண்டியவை பேசப்பட வேண்டியவர்களால் பேசப்படுவது இன்று மிகவும் முக்கியமாகும் எனவும் குறிப்பிட்டார்.

கடந்த ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, வெற்றிபெற முடியாது என மலித் ஜயதிலக்கவினால் மேற்கொள்ளப்பட்ட அரசியல் மற்றும் புள்ளிவிபர ஆய்வு இந்த நூலில் விபரிக்கப்பட்டுள்ளதுடன், 2012ஆம் ஆண்டுமுதல் ஒரு பொது அபேட்சகரை கண்டறிவதற்காக மேற்கொள்ளப்பட்ட அரசியல் செயற்பாடுகளில இறுதியாக அப்போது அமைச்சராக இருந்த மைத்திரிபால சிறிசேன பொது அபேட்சகராக தெரிவுசெய்யப்பட்ட முழு விபரமும் இந்த நூலில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

மேலும் பொது அபேட்சகருக்கு தேர்தல் காலத்தில் இடம்பெற்ற நிகழ்வுகள் மற்றும் ஜனவரி 08ஆம் திகதிக்குப் பின்னரான அரசியல் நிகழ்வுககளும் இந்த நூலில் விபரிக்கப்பட்டுள்ளது.

தேசிய அரசாங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், தேர்தலில் பொது அபேட்சகருக்காக நேரடியாக செயற்பட்ட பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (செ-11)

# இராணுவம் தலை...

கடந்த வருடம் நவம்பர் மாதம் 9ம் திகதி முதல் 18ம் திகதிவரை இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட காணாமல்போனோர் தொடர்பில் ஆராய்ந்திருந்த ஐ.நா. செயற்குழு தற்போது தமது அறிக்கையை இலங்கை அரசாங்கத்திற்கும் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவைக்கும் முன்வைத்திருக்கிறது.

ஐ.நா. செயற்குழு வெளியிட்டுள்ள அறிக்கை மொத்தமாக 85 அம்சங்களை கொண்டுள்ளது. அதில் 77 முதல் 85 வரை பரிந்துரைகளாக முன்வைக்கப்பட்டுள்ளன.

அதில் போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பிலான விசாரணைப் பொறிமுறையில் சர்வதேச நீதிபதிகள் மற்றும் சட்டத்தரணிகளை உள்ளடக்க வேண்டும்.

உடனடியாக பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கிவிட்டு சர்வதேச தரத்திற்குட்பட்ட சட்டமொன்றை அறிமுகப்படுத்தவேண்டும். பாதிக்கப்பட்டோரின் சங்கங்கள், சிவில் சமூக நிறுவனங்களுடன் இணைந்து உண்மையைக்கண்டறியும் நிறுவனத்தை உருவாக்குங்கள்.

இந்த நிறுவனம் பாதிக்கப்பட்டோருக்கு உதவுவதாக இருக்க வேண்டும். ஆட்கொணர்வு மனு முறைமை விடயத்தில் நீதிமன்ற நீதிபதிகளுக்கு அதிகாரங்களை வழங்கும் வகையில் சட்டம் கொண்டு வரப்படவேண்டும் எனவும் பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பிலான ஐக்கிய நாடுகளின செயற்குழு பரிந்துரை செய்துள்ளது. (செ-11)

# புதிய அரசியல...

பின் தலைவருமான இரா.சம்பந்தன் நாட்டின் மிக முக்கியமான இரண்டு கட்சிகளும் சேர்ந்து கொண்டு வரவுள்ள புதிய அரசியலமைப்பின் மூலம் இலங்கையிலுள்ள சகல இன மக்களும் நல்லிணக்கத்துடனும் புரிந்துணர்வுடனும் ஒத்துழைப்புடனும் வாழ வேண்டும் என்பதே எமது நோக்கம் எனவும் தெரிவித்துள்ளார்.

திருகோணமலை மாவட்ட செயலகத்தில், நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் இணைத் தலைவர்களுள் ஒருவராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே, இரா.சம்பந்தன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

1978 ஆம் ஆண்டுக்கு முன்னர் நடைமுறையில் இருந்த அரசியலமைப்பு, ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியால் கொண்டுவரப்பட்டது. இதற்கு ஐக்கிய தேசியக் கட்சியும் தமிழ் மக்களும் அங்கீகாரம் வழங்க வில்லை.

அதன்பின்னர், 1978க்கு பின்னர் கொண்டு வரப்பட்ட அரசியலமைப்பு, ஐக்கிய தேசியக் கட்சியால் கொண்டுவரப்பட்டது. இதற்கு ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் தமிழ் மக்களும் அங்கீகாரம் வழங்கவில்லை.

இலங்கையில் அரசியலில் முதன் முறையாக இந்த இரண்டு பிரதான கட்சிகளின் தலைவர்களும் சேர்ந்து இந்த நல்லாட்சியை அமைத்துள்ளனர்.

இதனடிப்படையில்,ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் ஐக்கிய தேசிய கட்சி சார்பில் பிரதமராக ரணில் விக்கிரமசிங்கவும் இணைந்து அமைத்துள்ள இந்த ஆட்சியில் தயாரித்துவரும் புதிய அரசியல் யாப்பு, நீண்டகால பிரச்சினைகளுக்குத் தீர்வாக அமையும் என நாம் நம்புகின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை 2016 ஆம் ஆண்டு இறுதிக்குள் தமிழ் மக்களுக்கான நிரந்தர அரசியல் தீர்வை அரசிடம் இருந்து தாம் பெற்றுத் தருவோம் என தேர்தல் வாக்குறுதியின் போது திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-9)

# விமலிடம் நேற்று...

விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றார்.

பொலிஸ் நிதி மோசடிப் பிரிவினரால் நேற்றுக் காலை விசாரணைக்கு அழைக்கப்பட்ட கூட்டு எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச அங்கு சென்ற நிலையில் நேற்று மாலையே வெளியே வந்தார்.

சுமார் ஏழு மணி நேரம் இடம்பெற்ற இந்த விசாரணையின் போது கடந்த மகிந்த தலைமையிலான ஆட்சியின் போது வீடமைப்பு மற்றும் அரச பொறியியல்துறை அமைச்சராக விமல் வீரவன்ச பதவி வகித்த போது அந்த அமைச்சின் கீழ் உள்ள அரச நிறுவனங்களின் பெருமளவு நிதிகள் மோசடி செய்யப்பட்டுள்ளதுடன் வாகனங்களும் சொத்துக்களும் முறைகேடாக பயன்படுத்தப்பட்டுள்ளது குறித்தே விளக்கம் கோரப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் அரசாங்கம் புதிய அரசியல் யாப்பின் ஊடாக நாட்டை துண்டாடும் முயற்சிக்கு தன்னால் ஏற்படக்கூடிய எதிர்ப்புக்களை சமாளிக்கவே தன்னை விசாரணைக்கு உட்படுத்தியதாக வீரவன்ச குற்றம்சாட்டியுள்ளார். (செ-11)

# விடுதலைப் புலி...

சாங்கம் விரும்பவில்லை என முன்னாள வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் குற்றம்சாட்டியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷ தலைமையிலான கூட்டு எதிர்க் கட்சியினர் கொழும்பில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் பங்கேற்ற ஜி.எல்.பீரிஸ், மலேஷியாவிற்கான இலங்கைத் தூதுவர் மீதான தாக்குதலும் இதன் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

மலேசியத் தலைநகர் கோலாலம்பூரில் உள்ள சர்வதேச விமான நிலையத்தில் வைத்து மலேசியாவிற்கான இலங்கைத் தூதுவர் இப்ராஹீம் அன்சார் மீது தாக்குதலொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது.

மலேசியாவிற்கு இந்த மாத முற்பகுதியில் விஜயம் செய்திருந்த முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு எதிராக மலேசியத் தமிழர்கள் தொடர் போராட்டங்களை முன்னெடுத்திருந்த நிலையில் இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

எனினும் இந்தத் தாக்குதலுடன் ஈழத் தமிழர்களுக்கு தொடர்பில்லை என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றில் உறுதியாக அறிவித்திருந்த நிலையிலும் இந்தத் தாக்குதலை தமிழீழ விடுதலைப் புலிகளே திட்டமிட்டு மேற்கொண்டதாக மகிந்த தரப்பு குற்றம்சாட்டுகின்றது.

பிரித்தானியாவின் கேம்பிரிஜ் பல்கலைகழகத்தில் மிக முக்கியமான சர்வதேச மாநாடு

23ஆம் பக்கம் பார்க்க....

அனைத்து நாடுகளுக்குமான விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு
UK-550*/=Kg
DELIVERY IN 3-5 DAYS (நிபந்தனைகளுக்குட்பட்டது)
மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்.
தொடர்புகளுக்கு: 0768226240
●யாழ்ப்பாணம் ●கிளிநொச்சி ●நெல்லியடி ●பருத்தித்துறை ●வல்வெட்டித்துறை
V2 TRAVELS

2016ல் A/L எடுத்தவரா?
6மாத இலவச பயிற்சி நெறி
உங்கள் பரீட்சை பெறுபேறுகள் வரும்வரை 6 மாதங்களுக்கு வேலை வாய்ப்புடன் கூடிய இலவச கற்கை நெறி
● விமான பயணச்சீட்டு பதிவுகள்
● MS Office
● Photoshop
● அலுவலக முகாமைத்துவம்
ஊக்கத்தொகை வழங்கப்படும்
0768226243
யாழ்ப்பாணம் - கிளிநொச்சி - நெல்லியடி
பருத்தித்துறை - வல்வெட்டித்துறை
V2 TRAVELS

10க்கும் மேற்பட்ட யாழ் முன்னணி ஹொட்டேல்களுக்கு அவசரமாக பணியாளர்கள் தேவை!
நீங்கள் இணைந்துகொள்ள
வடக்கின் 1வது ஹொட்டேல் கல்லூரி
SIKARAM ACADEMY
Business - Hospitality - English
SCHOOL of HOSPITALITY
100% தொழில் உத்தரவாதத்துடன் வழங்கும்!
பயிற்சியின்போதே நேரடி தொழில் அனுபவத்துடனான
O/L உடன் Diploma in Hotel Management UK Certified
CERTIFICATE - DIPLOMA - DEGREE
With FREE >>> English Course
Up to 30% Discount
பயிற்சிக் காலத்திலேயே உழைக்கும் வாய்ப்பு
கற்கைநெறி நிறைவில் நிரந்தர வேலைவாய்ப்பு
வெளிநாடு செல்ல விரும்புவோருக்கு விசா ஏற்பாடு
புதிய பிரிவு ஆரம்பம் Week & Weekend Batch
அனுமதிகளுக்கு 077 3616 798
www.sikaram.lk Sikaram Academy
இல.175, 1ஆம் குறுக்குத்தெரு (வேம்படி வீதி), யாழ்ப்பாணம்.
(C-5751) 021 222 0011

வேலையாள் தேவை
அச்சுக்கூட வீதி, கொக்குவில் கிழக்கில் இயங்கும் சித்தா றெஜிபோம் டிசைன்ஸ் ஸ்தாபனத்திற்கு றெஜிபோம் வடிவமைப்பதற்கு பெண் உதவியாளர்கள் தேவை. ஸ்தாபனத்திலிருந்து மூன்று கிலோ மீற்றர் தூரத்தில் இருப்பவர்களுக்கு முன்னுரிமை.
உடன் நேரில் வரவும்
தொடர்பு
தொ.பே.இல : 075 544 5901
(சி-5771)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.09.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.